# வண்ணத்துப் பூச்சியாய்...



ஜெய்சக்தி

## என்னுரை

அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு,

ஜெய்சக்தியின் வணக்கங்கள். தங்களின் தொடர்ந்த நல்லாதரவுக்கு எனது உளம் கனிந்த ஆத்மார்த்தமான நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

'அருணோதயம்' பதிப்பகத்தார் நாடறிந்த நல்ல பதிப்பகத்தார். எத்தனையோ சிறந்த எழுத்தாளர்களை தமிழ் கூறும் நல்லுலகுக்கு அறிமுகப் படுத்தியவர்கள். தரமான எழுத்தை நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடுபவர்கள். அருணோதயம் அருணன் ஐயா அவர்களின் நல்லாசியும் தொடர்ந்த ஊக்குவிப்பும் எனது எழுத்துப் பணியை மென்மேலும் செம்மையுறச் செய்கிறது. பதிப்புலக பீஷ்மரின் அருளாசி என்றே நான் இதனைக் கருதுகிறேன். அருணோதயம் பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சம் கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மிகச் சிறந்த பதிப்பகத்தாரும், அன்பு நிறைந்த வாசகர்களும் அமையப் பெற்றதை எனது பெரும் பேறாகக் கருதுகிறேன். தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நெஞ்சம் நிறை அன்புடன்

ஜெய்சக்தி

# வண்ணத்துப் பூச்சியாய்...

1

''நில்லாப் போட்டுக் குடுத்துட்டு வந்திருக்கேன் தம்பி!'' என்றார் வீராசாமி.

''அண்ணே இது நியாயமில்லே.'' என்று பாதி சிரிப்பும் பாதி கோபமுமாய்ச் சொன்னான் முரளிதரன்.

பின்னே என்ன தம்பி நான் அன்னைக்கு சினிமா டிக்கெட் கேட்டேன் இல்ல. குடுக்க மாட்டேன்னுட்டீங்க.

''ஐயோ அது லவ்ஸ்டோரி. நீங்க போய் பாத்தா நல்லா இருக்காது.''

''எவன் சொன்னது? விஷயம் என்னன்னா இதுவரைக்கும் நம்ம சம்சாரம் சினிமாவுக்கெல்லாம் கூப்பிட்டா வராது. இப்பத்தான் ஏதோ இந்த மாதிரிப் படத்துக்கெல்லாம் வருது.''

''அடி சக்கை. இப்ப உங்களுக்கு என்ன வயசு?'' என்றார் ராமசாமி.

"என்ன ஒரு ஐம்பது வயசு. என் சம்சாரத்துக்கு ஒரு நாப்பத்தஞ்சு வயசு" என்றார். எல்லாரும் சிரித்தார்கள்.

"என்னத்துக்குச் சிரிக்கறீங்க? பயந்து பயந்து குடும்பம் நடத்தி புள்ளை பெத்த காலத்துலயே எங்கப்பாவுக்கு ஐம்பத்திரண்டு வயசுலதான் நான் பொறந்தேன், தெரியுமா?"

மறுபடியும் வெடிச்சிரிப்புக் கிளம்பியது.

"அடப்பய புள்ளைகளா? இதுக்கெதுக்கு சிரிக்கறீங்க. இப்பத்தான் என் பொண்டாட்டிக்கு என் மேல பிரியத்தை வெளிப்படையா காட்டத் தைரியம் வந்திருக்கு. பாருங்க இன்னைக்கு அவதான் தலைவாரி விட்டா" எனவும் மறுபடியும் வெடிச்சிரிப்புக் கிளம்பியது.

"அண்ணே. நான் உங்க வீட்டம்மாவைக் கேட்டேன். அவங்க என்ன தெரியுமா சொன்னாங்க? அந்தத் துப்புக் கெட்ட மனுஷனுக்குப் பொளப்பில்லே. எதையாவது இல்லாததும் பொல்லாததும் உங்களைச் சிரிக்க வைக்கணுங்கறதுக்காக உளறிகிட்டுக் கிடக்கும் னாங்க. நீங்க இங்க வந்து ரீலா உட்டுகிட்டு இருக்கீங்க" என்றான் கண்ணன்.

வீராசாமி சற்றும் சளைக்கவே இல்லை. "பின்னே பொம்பளைங்க கிட்டே போய் இதைக் கேட்டா என்ன சொல்லுவாங்க?" என்றார்.

"அதை விடுங்க. இன்னைக்கு வீட்டுக்கு நிம்மதியா போக விடாமப் பண்ணீட்டாரே அதுக்கு என்ன சொல்றீங்க?" என்றான் முரளிதரன் சற்றே கவலையுடன்.

மறுபடியும் எல்லாரும் அதை ஜோக்காகவே எண்ணி வாய் விட்டுச் சிரித்தார்கள். அதற்குள் லஞ்ச் டைம் முடியவே எல்லாரும் கலைந்தார்கள்.



முரளிதரன் மட்டும் கவலையாகவே இருந்தான்.

"என்ன வீராசாமி அண்ணே அவ நேச்சர் தெரிஞ்சும் இப்படிப் பண்ணீட்டீங்க?" என்றான்.

"சும்மாயிருங்க தம்பி அப்பப்ப இப்படி ஏதாவது செஞ்சாத்தான் பொம்பளைங்க கிட்டே நாம நினைக்கறது நடக்கும்" என்று சிரித்தார்.

முரளிதரன் மேற்கொண்டு விளக்கம் சொல்லவில்லை. சொல்லி இவர்களுக்கெல்லாம் புரியப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டான்.

வீராசாமி அட்டெண்டராக இருந்த போதும் வெகு நாட்களாக அந்த வங்கியில் இருந்ததால் எல்லாரும் மரியாதையும் பிரியமுமாக இருப்பார்கள். அவரிடமும் அவனால் கோபித்துக் கொள்ள முடியாது. ஆனால் விளையாட்டு என்று நினைத்துக் கொண்டு அவர் செய்கிற விபரீதத்தைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவன் தவிக்கிற தவிப்பு அவனுக்குத்தான் தெரியும்.

முரளிதரன் சற்றே வசதியான குடும்பத்தில் பிறந்தவன். அவன் மனைவி அனுராதாவோ சற்றே ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். அது மட்டுமல்லாமல் முரளிதரன் கூர்மூக்கும் நல்ல தோற்றமும் ஆக இருப்பான். அவளுக்கு சற்றே உள்ளடங்கிய மூக்கு. ஆனால் அழகாகத்தான் இருப்பாள். ஆனாலும் அவளுக்குத் தன் கணவனைப் போல் அழகுக்குரிய அம்சங்கள் தன்னிடம் இல்லையென்று எண்ணம்.

எல்லாவற்றைக் காட்டிலும் அவன் அவளைக் காட்டிலும் படித்தவன் என்று தாழ்வு மனப்பான்மை. ஆனால் அவனை மிகவும் நேசித்தாள். ஆனால் எப்போது வேண்டுமானாலும் கணவன்

கை நழுவி விடக் கூடும் என்று பயம் பைத்தியக்காரத் தனமாக விழுந்திருந்தது என்ற எண்ணம் முரளிதரனுக்கு.

"சரி பார்ப்போம்" என்று எண்ணிக் கொண்டான் முரளிதரன். அலுவலகத்திலிருந்து புறப்படும்போதே கலக்கம்தான். ஆனால் அன்றைக்கு வீட்டில் ஆச்சரியம் காத்திருந்தது.

◆ ◆ ◆

"ஹல்லோ" என்று மகனைக் கட்டிக் கொண்டான். கொஞ்சி மகிழ்ந்தான். "தங்கம். ராஜாக் குட்டி. மயிலு குயிலு" என்று அவன் விதவிதமாகக் கொஞ்சுவதை அவன் மனைவி ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அதையும் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டான்.

"சரிடா ராஜா. அப்பா அழுக்கா இருக்கேன். கிளீன் பண்ணிட்டு வரேன்" என்று சொல்லிப் போனவன் சமையலறைக்குள் நுழைந்தவன் 'அலுக் குட்டி' என்று அவளையும் கட்டிக் கொண்டான். அவள் சற்றே குளிர்ந்து போனாள் என்றாலும் புன்னகை பாதியிலேதான் நின்றது.

"என்ன? பிரஷ்ஷா ரெடியாயிருக்கே" என்றான்.

"மாமா போன் பண்ணினாங்க. இன்னைக்கு அங்க டிபனாம்" என்றாள்.

"என்ன விசேஷம்?"

"உங்க அண்ணன் வர்றாரு போல இருக்கு. நம்மையும் கூப்பிட்டாரு."

"சரி. சரி. போலாம். அதுக்குள்ள இப்பப் பசிக்கு ஏதாவது குடு."

அவன் மெல்லக் கேட்டான். "இன்னைக்கு ஆபீசுல ஏதாவது விசேஷமா?" என்று.



அவன் சாதாரணமாகச் சொல்வது போல் சொன்னான். "ஆமாடா ஒரு புது ஸ்டாஃப் வந்திருக்காங்க."

மேலும் குடைந்து குடைந்து கேட்டால் அவனுக்குக் கோபம் வரும் என்று தெரியும். அதனால் விஷயத்தை அதோடு விட்டு விட்டு அவனுக்கு டிபன் எடுக்கப் போனாள்.

இது மாதிரி லைட்டாக சாப்பிட்டால் போதும் என்கிற போது செய்வதற்கென்றே சில டிபன் வகைகள் வைத்திருப்பாள். அது மாதிரி இன்றைக்கு பொரி வறுத்து வைத்திருந்தாள். அதில் சிறு துண்டுகளாய் சின்ன வெங்காயத்தை அரிந்து பச்சையாய்க் கலந்து கொடுத்தால் மிகவும் மகிழ்ச்சியாய் சாப்பிடுவான்.

மகன் குமரன் அதை சாப்பிட்டு விட்டு "உஷ் அப்பா! காரம் காரம்!" என்று கிளுகிளுவென்று சிரித்தான்.

"ஆமடா ராஜா! ஆனா உடம்புக்கு நல்லது" என்று கொஞ்சிக் கொண்டே புறப்பட்டார்கள்.

முரளிதரன் வீட்டில் மூன்று பேரும் ஆண்கள். பெரியவன் சசிதரன். இடையில் முரளிதரன். இருவருக்கும் இளையவன் தரணிதரன்.

முரளிதரனின் பெற்றோர் நடராஜன். புஷ்பா இருவருக்குமே பெண் குழந்தைகள் இல்லாததால் மருமகள்கள் மேல் பிரியம் அதிகம். யோசித்துப் பார்த்தால் புகுந்த வீட்டில் அவளுக்குப் பெரிதாகக் குறைகள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தரணிதரனுக்கும் முரளிதரனுக்கும் ஏழெட்டு ஆண்டுகள் வித்தியாசம். இப்போது முரளிதரனுக்கு முப்பத்து மூன்று ஆண்டுகள். ஆறு வயதில் மகன்.

"ஏங்க. தரணித் தம்பிக்கு கல்யாணம் பண்ண வேண்டாமா?" என்றாள் ஷீலா.

''ஆமா பண்ணனும். ஆனா அவன்தான் ஒரு வருஷம் போகட்டும்கறானே.''

''அது சரி! இப்ப இருந்து பாத்தாத்தானே ஒரு வருஷத்துக் குள்ள படியும்'' என்றாள் ஷீலா.

''ஐயோ அண்ணி படியறதுக்கு இதென்ன மாட்டு வியாபாரமா?'' என்று சிரித்தான் முரளிதரன்.

''எல்லாருக்கும் உங்களை மாதிரி கோயில்ல பாத்து முடிஞ் சிடுமா?'' என்றாள் ஷீலா.

''அதென்ன கோயில்ல பாத்துன்னு அடிக்கடி சொல்றீங்க. ஆனா விஷயம் சொல்ல மாட்டேங்கறீங்க?'' என்று சிணுங்கினாள் அனுராதா.

''அதெல்லாம் நாங்க சொன்னா நல்லா இருக்காது. நீ தம்பி கிட்டயே கேட்டுக்க'' என்று சிரித்தாள் ஷீலா.

''சரி. அதை விடுங்க தம்பியோட மேட்டருக்கு வாங்க'' என்றான் முரளிதரன்.

''சரிடா. எப்படிப் பொண்ணு வேணும்னு சொல்லிடுடா.'' என்றான் சசிதரன்.

''குணத்துல சின்ன அண்ணி. பெரிய அண்ணி ரெண்டு பேர் மாதிரியும் இருக்கணும். பர்ஸனாலிட்டியில சின்ன அண்ணி மாதிரி இருக்கணும்'' என்றான்.

''ஏண்டா! அப்ப என் பொண்டாட்டி அழகில்லேங்கறியா?'' என்றான் சசிதரன்.

''ஐயோ இல்லண்ணா. அவங்க ரொம்ப அழகுதான். ஆனா நம்ம வீட்லயும் சரி பெரிய அண்ணிக்கும் சரி எல்லாருக்கும் கருடன் மாதிரி நீள மூக்கு. ஆனா அனு அண்ணிக்குக் கொஞ்சம் வித்தியாசமா இருக்கில்லே'' என்றான்.



''ஆமா. சப்பை மூக்கு'' என்றாள் அனுராதா.

''ஐயோ அண்ணி! அது அப்படியில்லே. இப்ப ஜப்பான்காரவங் களைப் பாருங்க. மூக்கு நீளம் கிடையாது. ஆனா எவ்வளவு அழகாய் இருக்காங்க. அதுமாதிரி நீங்க'' என்றான்.

''நல்லாச் சொல்றா. புலம்பல் தாங்கறதில்லே. உங்க வீட்ல எல்லாரும் லட்சணம். நான்தான் தேவாங்கு மாதிரிப் பொருத்தமே இல்லை. அப்படின்னு'' என்றான் முரளிதரன்.

''ஒரு வேளை உன்னை மனசுல வச்சுட்டுச் சொல்றாங்களோ என்னமோ'' என்று கலாய்த்தான் தம்பி.

''சித்தப்பா சப்பை மூக்குன்னா எப்படியிருக்கும்?'' என்றான் குமரன்.

கையால் மூக்கை அமுத்திக் கொண்டு நே என்று செய்து காட்டினான் தரணி. எல்லாரும் சிரித்தார்கள்.

சசிதரனுக்கு இரண்டு குழந்தைகள். பெரியவள் லதா. சின்ன வன் ராஜேஷ்.

பெரியவர்கள் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கையிலேயே அனு டிபன் பரிமாற எல்லாரும் சாப்பிட்டார்கள். பத்துப் பதினைந்து நாளைக்கு ஒரு முறையாவது இப்படிக் குடும்பம் ஒன்று சேர வேண்டும் என்பதில் நடராஜன் குறிப்பாக இருப்பார்.

பொழுது கலகலப்பாக போகும். குடும்பப் பிரச்சினைகளையும் பேசுவார்கள். நடராஜன் சில விஷயங்களில் ஸ்ட்ரிக்டாக இருப் பார். சொத்து நிறைய இருந்தது. வாடகை வந்தது. ஆனால் மகன் களிடமே குடுக்கல் வாங்கலில் கரெக்டாகத்தான் இருப்பார். அதிலும் முரளிதரன் சுத்தமாக எதையும் எதிர்பார்க்க மாட்டான் என்பதால் அவனைப் பற்றி அவருக்கு மிகவும் பெருமை.

வெகு அருமையாகத் திட்டமிடுவார். தான் ரிடையராவதற்குள்ளாக மூன்று மகன்களுக்கும் இடம் வாங்கிப் போட்டு விட்டார். அதிலும் இடம் அருகருகில் இல்லாமல் அடுத்தடுத்த தெருக்களில் இருக்கிற மாதிரி வாங்கினார். ஏதாவது அவசர ஆத்திரம் என்றால் உடனே ஒன்று சேர வேண்டுமாம். ஆனால் ரொம்பவும் அருகில் இருக்கக் கூடாதாம். முரளிதரனின் திருமணத்திற்கு முன்பு அவன் தந்த சம்பளப்பணத்தை அப்படியே சேமித்து அவனுக்கென்று வீடு கட்டக் கொடுத்து விட்டார். அவனும் அப்பா கொடுத்த பணத்தை முதல் கட்ட முதலீடாக வைத்து அஸ்திவாரம் எழுப்பினான். மேற்கொண்டு ஹவுஸ் லோன் வாங்கி அழகாக வீட்டைக் கட்டி முடித்தான்.

பதினாறுக்குப் பதினாறு ஒரு ஹால். பதினாறுக்குப் பத்து ஒரு பெட்ரும். பத்துக்குப் பத்து ஒரு பெட்ரும். பத்துக்குப் பதினாறில் ஒரு கிச்சன் என்று பிளான் அருமையாகப் போட்டான்.

அனுராதா வீட்டில் நாலு பெண்கள். கடைசியாக ஒரு தம்பி. அப்பா சின்னதாக ஒரு ஸ்டேஷனரி கடை வைத்திருந்தார். வாடகை வீடுதான். ஒவ்வொரு மாதம் வீட்டுக்காரர் வாடகை கேட்பதற்குள்ளாக வாடகை கொடுக்க வேண்டுமென்று பரிதவித்து ஏற்பாடு செய்வார். அந்தத் தவிப்பையெல்லாம் பார்த்து வருந்தியவள் ஆதலால் இப்போது தனது வசதியான வாழ்க்கை குறித்து அவளுக்கு ஆச்சரியம்தான்.

அழகிலும் வசதியிலும் தன்னைக் காட்டிலும் மேலான நிலையிலிருக்கிறவன் எதற்காகத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சந்தேகம் அவளுக்கு உள்ளூர இருந்தது. அது வருவதற்கும் ஒரு காரணம் இருந்தது.



அவர்கள் கல்யாணத்தின் போது அவளது அக்காவின் மாமியார் ஒருவரிடம் முணுமுணுத்துக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

"ஏங்கக்கா! இந்த மாதிரி வசதியானவங்க எதுக்கு இந்த மாதிரி வீட்ல வந்து பொண்ணு எடுக்கிறாங்க. பையனுக்கு ஏதாவது மோசமான பழக்கம் இருக்குமாயிருக்கும்'' என்று.

அம்மாவிடம் ஜாடைமாடையாய் விசாரித்தாள். அம்மா சொன்னார் ''பாருடி. நம்ம வீட்ல நாலு பொண்ணுங்க. நீ ரெண்டாவது. எப்படியோ கரையேத்த வேண்டியிருக்கு. விசாரிச்ச வரைக்கும் அவங்க அப்பா ரொம்பக் கண்டிப்பு. பசங்க ஒழுக்கமானவங்கன்னுதான்னு சொல்றாங்க. அதையும் மீறித் தண்ணி கிண்ணி போடற பழக்கம் இருந்தா நீ சமாளிக்க வேண்டியதுதான். இந்த மாப்பிள்ளை கிடைச்சது உனக்கு அதிர்ஷ்டம்டி தெரிஞ்சுக்க.'' என்றார்.

அப்போதும் வாயிருக்காமல் கணவனிடம் விசாரித்தாள். அதுவும் முதலிரவின் போது.

''எங்க! நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி காதலிச்சிருக்கீங்களா?''

''ஆமா.'' என்றான். அவள் முகம் வாடியது. ஆனால் மறைத்துக் கொண்டு கேட்டாள்.

''யாரை'' என்று.

''உன்னைத்தான்'' என்றான்.

அவள் திகைத்தாள். அவள் சகோதரியிடம் சொன்னாள். அவள் பல்லைக் கடித்துக் கொண்டு திட்டினாள்.

''ஏண்டி. கொஞ்சமாவது மூளையிருக்கா? இப்படி யாராவது கேட்பாங்களாடி? இதோட இந்தப் பேச்சை விட்டுரு'' என்றாள்.

அவளுடைய சகோதரியின் கணவன் அவர்கள் வீட்டுக்கு வந்தால் மொட்டை அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும்.

மாமியாரம்மா விழுந்து விழுந்து உபசரிக்க வேண்டும். இல்லாவிட்டால் முறுக்கிக் கொள்வான். ஆனால் முரளிதரன் நேர்மாறாக இயல்பாகப் பழகுவான்.

எல்லாமுமாகச் சேர்ந்து இது உண்மையான நடத்தைதானா என்று அவளுக்குச் சந்தேகம்தான். ஆனால் முரளிதரன் அவளைத் துல்லியமாகப் புரிந்து வைத்திருந்தான். அதனால் அவள் போக்கில் போய்விடுவான்.

இன்றைக்கு பைக்கில் வரும்போது அவளுக்குள் சிந்தனை ஓடிக் கொண்டே இருந்தது. அதற்கு நேர்மாறாக அவன் பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தான்.

வீட்டுக்கு வந்த பிறகும் அவளுக்கு அந்த நினைவுகளே ஓடிக் கொண்டிருந்தது. புன்னகை முகத்தில் உறைந்திருக்க அவளுக்காகக் காத்திருந்தான். ஆனால் அவளோ அலுவலகத்தில் வந்திருக்கிற புது வருகையைத்தான் எண்ணி சிரித்துக் கொள்கிறான் என்று எண்ணிக் கொண்டதை அவன் புரிந்து கொள்ளவில்லை.

## 2

"தம்பி. இவளோட பெரிய தொல்லையா இருக்கு. ரோட்ல குறுக்க குறுக்க ஓடுறா இவளையும் தூக்கிட்டு ரோட்ல நடந்து போக முடியல. கோயிலுக்குப் போகலேன்னா மனசே ஆக மாட்டேங்குது என்று வருத்தப் பட்ட அண்ணியிடம் சொன்னான்.



"நோ பிராப்ளம். நான் பைக்ல கூட்டிட்டுப் போறேன் அண்ணி" என்று.

ஷீலாவுக்கு ஒரே சந்தோஷம். 'ரொம்பத் தேங்க்ஸ் தம்பி' என்று பத்து முறையாவது சொல்லி இருப்பாள்.

கோவிலுக்குப் போனார்கள். அண்ணி பிரகாரத்தை மூன்று முறை சுற்றி வருவதற்குள்ளாக அவன் ஒருபக்கமாக அமர்ந்தான்.

லதாவும் அவனோடு வந்து விட்டாள். அப்போதுதான் கவனித்தான் துர்க்கை கோவிலுக்கு முன் இளம்பெண்கள் கூட்டம். எலுமிச்சையில் விளக்கேற்றினார்கள்.

அண்ணியிடம் விசாரித்தான். "தம்பி பதினோரு வாரம் விளக்கேற்றினால் நல்ல மாப்பிள்ளை கிடைக்கும்னு ஒரு நம்பிக்கை." அவன் சிரித்தான்.

"அண்ணி. துர்க்கைக்கு என்னென்ன வேலையெல்லாம் குடுக்கறீங்க அண்ணி" என்றான்.

"எங்களுக்கு மட்டும் அப்படி வேண்டுதல் இல்லையே" என்றான் சோகமாக.

ஷீலா சிரித்தாள். "ஏதோ ஒரு பொண்ணுக்கு நல்ல காலம்னு நினைச்சுக்க வேண்டியதுதான்."

"அண்ணி. இது நியாயமேயில்லை. உங்களுக்கு ஒரு நியாயம். எங்களுக்கு ஒன்னா."

"சரி நீ வேன்னா ஒன்னு செய். கொஞ்ச நாளைக்கு என்கூட ஓட்டிட்டு கோயிலுக்கு வா. ஏதாவது வழி கிடைக்கலாம்" என்று சிரித்தாள்.

"போங்கண்ணி. எங்க பர்சானாலிட்டிக்கெல்லாம் பொண்ணு தேடிகிட்டு வரும்" என்று சிரித்துக் கொண்டே திரும்பியவனின் பார்வையில் அந்தப் பெண் தட்டுப் பட்டாள்.

சற்றே பயந்த சுபாவமாக இருந்தாள். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பாக்காம கோயிலுக்குப் போனமா வந்தமான்னு போயிட்டு வா என்று யாரோ ஆணையிட்டு அனுப்பினாற் போல் கண்ணை எந்தப் புறமும் திருப்பாமல் அவள் கோயிலை வலம் வருவதை ஒரு சுவாரசியத்துடன் பார்த்தான்.

அப்போது தன்னுடைய கவனம் அந்தப் பெண்ணின் மேல் சென்றதை அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் மறுநாள் காலையில் சாப்பிட அமரும்போது "அண்ணி ஒரு வாரத்துல எத்தனை நாள் கோயிலுக்குப் போறீங்க?" என்று கேட்டான்.

"செவ்வாய்க் கிழமையும் வெள்ளிக் கிழமையும் போகணும்னு ஆசை. எங்கே முடியுது. உங்க அண்ணன் தினமும் லேட்டா வர்ற தாக்க. அவரு டயர்டா வர்றதைப் பார்த்தாலே தொந்தரவு பண்ண மனசே வர மாட்டேங்குது" என்றாள்.

"டோன்ட் வொர்ரி அண்ணி. நான் வந்து கூட்டிட்டுப் போறேன்" என்றவுடனே அவளுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி.

நாலைந்து வாரங்கள் போய் விட்டார்கள். ஒரு நாள் லீலா தன் கணவனிடம் அதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டாள்.

"கோயிலுக்கா? அவனா? லீலு ஒரு வயசுப் பையன் கோவிலுக்கு அக்கறையா வர்றான்னா விஷயம் இருக்கும்டி."

"அவன் ஒன்னும் ஒரு வயசுப் பையன் இல்லே. இருபத் தைந்து வயசு முழுங்கியாச்சு."

சசிதரன் கடுப்பானான். "ஜோக்கா? நான் சீரியஸா சொல்லி கிட்டிருக்கேன்" என்றான்.

"ஓ" என்று அவளும் சீரியஸானாள்.



"இவன் பாட்டுக்கு எதிலயாவது சிக்கினான்னா? எங்கப்பாவைத் தெரியுமில்லே" என்றான் கவலையுடன்...

"சரிங்க. இனி கோவிலுக்குப் போகும்போது கவனிக்கப் பாக்கறேன்."

அவன் பார்வை அந்தக் குறிப்பிட்ட பெண்ணின் மேல் படிந்து மீள்வதைக் கவனித்தாள்.

அதற்குள் அவனே ஆரம்பித்தான். "அண்ணி அந்தப் பொண்ணு யாருன்னு தெரியுமா அண்ணி?"

அண்ணி கவலையானாள். "தம்பி. எவ்வளவு தூரம் போயிருக்கு?" என்றாள்.

"ஐயய்ய. நீங்க வேற. எனக்குப் பேரு கூடத் தெரியாது. ஆனா ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றான்.

அண்ணி பயந்து போனாள். தான் கோயிலுக்குக் கூப்பிடப் போய் வம்பு வந்த மாதிரி ஆச்சே என்று எண்ணிக் கொண்டாள்.

* * *

"ஓஹ்ஹோ!" என்றான் சசிதரன். யோசிக்க ஆரம்பித்தான்.

"லீலு அவன் ரொம்ப நல்ல பையன்டி. எப்படியாவது பொண்ணைப் பத்தி விசாரி" என்றான்.

அவளும் விசாரித்தாள். கணவனிடம் சொன்னாள். "ஏங்க பொண்ணு ரொம்ப வசதியில்லாத இடம் போலே" என்றாள்.

"ஓஹ்" என்று அதற்கொரு முறை கவலையானார்கள்.

மேலும் விசாரித்த போது ஒரு நல்ல செய்தி கிடைத்தது. அவர் கள் ஜாதியேதானாம். ஆனால் அதிலும் வேறு ஒரு சிக்கல். வேறு உட்பிரிவாம்.

சகோதரனிடம் சொன்னான் சசிதரன். முரளி நெகிழ்ந்து போனான். அண்ணனும் அண்ணியும் தனக்காக இவ்வளவு மெனக் கெட்டிருக்கிறார்களேயென்று.

"அண்ணா! கவலைப்படாதே. நானே அப்பாவைக் கேட்கறேன். மனக்குப் பிடிச்சிருக்கு - அதுக்காக அப்பாவை மீறி கிட்டு செய்யப் போறதில்லே" என்றான். மேலும் சொன்னான் "அதனாலதான் அந்தப் பொண்ணுகிட்ட கூடப் பேசலே. வீணா சலனப்படுத்தக் கூடாதில்லே" என்று.

அவனுடைய பொறுப்பான சிந்தனை சசிதரனை மிகவும் கவர்ந்தது. தவறாமல் அப்பாவிடம் அதை ரிலே செய்தான்.

அப்பா தாட்பூட் என்று குதிப்பார் என்று பார்த்தால் அவர் பொறுமையாக வாங்கிக் கொண்டார்.

"நீ என்னப்பா சொல்றே?" என்றார் பெரிய மகனிடம்.

"அப்பா எனக்கொன்னும் அப்ஜக்ஷன் இல்லே" என்றான்.

அப்பா அப்போது சொன்னார் "அது சரிப்பா. கல்யாணம்னு பண்ற தாச்க. பிடிச்ச பொண்ணாவே பண்ணி வைப்போம் பொறுப்பா நம்மகிட்டே சொல்லித்தானே பேசச் சொல்றான்" என்றார்.

ஆனால் பேச்சு வார்த்தை நடக்கும் போது வேறொரு சிக்கல் வந்தது.

அம்மாதான் கொஞ்சம் கணக்கம் காட்டினார். "ஏங்க பெரியவ இருபத்தைந்து பவுன் போட்டுட்டு வந்திருக்கா. இவ ஒரு பத்து பவுனாவது போட்டுட்டு வந்தாத்தானே ஆகும். ஆனா இவங்க என்ன அஞ்சு பவுன்தான் முடியும்கறாங்க. நாளைக்கு அவங்களுக் குள்ளே ஏற்றத் தாழ்வு ஆயிடக் கூடாது இல்லே" என்றார் கவலை யுடன்.



ஒரு நாள் லீலா வந்து மாமியாரிடம் சொன்னாள். "அத்தை சம்மந்தியம்மா சொன்னாங்க. பத்து பவுன் போடறாங்களாம். ஆனா அது மத்தவங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமாம்" என்று. அதனால் அந்தப் பிரச்சினையும் முடிந்தது.

வேறு விதமான வேடிக்கைகள் நடந்தன.

அனுவைப் பார்க்கலாம் என்று நினைத்துக் கோயிலுக்குப் போனால் அவள் இவனைக் கண்டாலே பேயைக் கண்டது போல் ஓடினாள். சிரித்துக் கொண்டான். தொல்லை செய்யவில்லை.

வேறு எங்காவது கண்ணில் படுவாளா என்று பார்த்தான். திரு மணம் நிச்சயமானவுடன் கோயிலைத் தவிர வேறு எங்கும் வெளியே அனுப்புவதில்லையாம். அண்ணியை அழைத்துக் கொண்டு வீட்டுக்கே போனான். கொஞ்ச நேரம் பேச அனுமதித்தார்கள்.

அந்த வீட்டில் இருந்ததே மூன்று அறைகள். அதுவும் ரயில் பெட்டி மாதிரி. சமையல் அறையில்தான் நின்று பேச வேண்டியிருந்தது.

வேர்த்துப் பூத்து நிற்கிற அவளைப் பார்த்துப் பாவமாகிப் போனது.

"ஹேய். என்ன கண்ணுக்கே கிடைக்க மாட்டேங்கற? தரிசனத் துக்கு ஏங்கிப் போய்க் கிடக்க வேண்டியிருக்கு" என்றான்.

அவள் அழிச்சாட்டியமாய் நிற்பவள் போல் பேசவேயில்லை.

"பேசாம தூக்கிட்டுப் போயிரலாமான்னு பாக்கறேன்" என்று சொன்னவுடனே மட்டும் பீதியடைந்தாற் போல் பார்த்தாள்.

அவன் சிரித்து விட்டான். "சரி. போ. இப்படி நடுங்கினா என்னத்தைப் பேசறது?" என்று வெளியே வந்து விட்டான்.

"என்னப்பா? பேசியாச்சா" என்று அண்ணன் கலாட்டா செய்ய "எங்கே? நான்தான் பேசினேன். என்னமோ ராவணன் மாதிரிப் பாக்கறா" என்றான்.

சசிதரன் சிரித்தான்.

"தம்பி. வசதியில்லாத குடும்பம். அந்தம்மா நாலு பொண்ணுகளையும் வளர்க்கறதுக்குள்ளே மடியிலே நெருப்பைக் கட்டிட்டு இருந்திருக்கும். அதனாலே கண்டிப்பா வளர்த்திருப்பாங்க. அதான்'' என்று சகோதரன் சொன்ன விளக்கம் பொருத்தமா இருக்கவே அதற்குப் பிறகு நேரில் பார்க்கிற ஆசையை விட்டு விட்டான்.

அவர்கள் வீட்டில் போனும் இருக்கவில்லை.

திருமணம் ஆனதற்கு பிறகாவது மனதில் இருக்கிறதையெல்லாம் சொல்லி விடலாம் என்று நினைத்தால் கொஞ்சம் கடினமாகத்தான் போனது.

தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

முரளீதரனுக்கு அவளைப் பற்றிய முக்கியமான பிரச்சினை என்னவென்றால் மனதில் உள்ளதைச் சொல்ல மாட்டாள். சண்டை போட்டு விட்டால் கூடப் பரவாயில்லை என்று நினைப்பான். போட மாட்டாள். மாறாக மனத்திற்குள்ளேயே புழுங்குவாள் தன்னையே வருத்திக் கொள்வாள்.

எப்போது வேண்டுமானாலும் தன் கணவன் கை நழுவிடக் கூடும் என்ற பயம் இருந்து கொண்டே இருந்தது. ஆனால் தங்கள் தனிமையான நேரங்களில் அவளுடைய மனத்தில் இருப்பதை வெளியே கொண்டு வருகிற திறமை அவனுக்கு இருந்தது. தன் மேல் அவள் வைத்திருக்கிற பிரியம்தான் அப்படி வெளிப்படுகிறது என்பதையும் அவன் புரிந்து கொண்டிருந்தான் என்பதால் சரிக்கட்டிக் கொண்டு போனான்.



பழைய நினைவுகளோடு காத்துக் கொண்டிருந்த கணவனின் முகத்தில் புன்சிரிப்பைப் பார்த்தவுடன் அவள் அதற்கு வேறு காரணம் கற்பித்துக் கொண்டாள்.

"ஹேய்! இப்பத்தான் ரொம்ப வேலையிருக்கற மாதிரி ஷோ காட்டறே." என்று தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான். அவளுக்கும் எதுவும் பேச வழியிருக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு அமைதியாக அவன் சாய்ந்திருக்கும் போது அவள் மெதுவாகக் கேட்டாள்.

"ஏங்க! சுதாவாமே. அழகா இருக்காங்களாம். உங்க பக்கத்து சீட்டாமே'' என்றாள்.

"இருக்கட்டுமே! பக்கத்து சீட்தானே அதுக்காக ரொமான்ஸ் பண்ணிடுவாங்களா. ஏன்டி நீ எப்பப் பாரு உன் புருஷனை மட்டமாவே நினைக்கறே'' என்றான்.

"நான் உங்களை மட்டமா நினைக்கலே. உலகம் அப்படி இருக்கு. உங்க பர்சனாலிட்டிக்கு..." என்று அவள் முடிக்கு முன்னே அவன் சிரித்தான்.

"ஏய். அந்த வீராசாமி அண்ணன் வேணும்னே தட்டி விட்டுட்டுப் போயிருக்காரு தெரியுமா? என் பக்கத்து சீட்டுக்கு வந்திருக்கறது சுதா இல்லே. சுதாகரன் போதுமா?'' என்றான்.

அவள் முகம் மலர்வதைப் பார்த்தான். விவரமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

✦ ✦ ✦

மறுநாள் அலுவலகம் போனவுடன் சிந்தனையில் ஆழ்ந்தான். நண்பர்கள் வீட்டுக்கு அழைத்தால் வர மாட்டாள். "அங்க வந்து அவங்கல்லாம் இங்கிலீஷ்ல பேசினா நான் பதில் சொல்லத் தெரியாம முழிப்பேன். உங்களுக்குக் கேவலமாயிடும்'' என்பாள்.

திருமணமான புதிதில் "ஹேய்! நீ டென்த்ல எத்தனை மார்க்" என்றான்.

அவள் முகம் வாடியது. மிகுந்த வெட்கத்துடன் "வெறும் இரு நூத்தைம்பது மார்க்தான்" என்றாள்.

அவன் சிரித்தான். அவள் சிணுங்கினாள். "இதுக்குத்தான் நான் சொல்ல மாட்டேன்னேன். நீங்க நானூத்தைம்பது மார்க்காமே" என்றாள்.

"சரி. அதை விடு. பிளஸ் டூ வில என்ன படிச்சே?"

"தமிழ் மீடியம்தான் படிச்சேன்" என்றாள்.

"இத பார்றா! தமிழ் நாட்ல பொறந்துட்டு என்னமோ தமிழ் படிக்கறது தப்பு மாதிரிச் சொல்றா." என்று சமாதானம் செய்து பேச்சை மாற்றி விட்டான். ஆனால் அத்தனைக்கும் நேர்மாறாக வீட்டு நிர்வாகத்தை நன்றாகக் கவனிப்பாள். வீட்டைப் பற்றிய கவலையே அவனுக்கு இல்லாத வண்ணம் பார்த்துக் கொள்வாள்.

காய்கறி. மளிகை வாங்குவது. எலக்ட்ரிக் பில் கட்டுவது என்று எல்லா வேலைகளையும் பார்ப்பாள். நன்றாக சமையல் செய்வாள். வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பாள். அதனால் வீடு சொர்க்கமாகவே இருந்தது. ஆனால் என்ன முயன்றும் பெரிதாக அவள் தாழ்வு மனப்பான்மையை மாற்றவே முடியவில்லை.

ஒரு கட்டத்துக்குப் பிறகு அவனும் அவள் போக்கில் விட்டு விட்டான். பெரிதாக அதைப் பற்றிய விவாதங்களும் வைத்துக் கொள்ளவில்லை.

சமீப காலமாக அவளுக்குள் மன உளைச்சல் கொஞ்சம் அதிகமாக இருக்கிற மாதிரித் தோன்றியது. அதற்குக் காரணமும் புரிந்தது. இதுவரையிலும் குழந்தை வளர்ப்புக்கு நேரம் சரியாக இருந்தது. ஆனால் இப்போது குமரன் ஓரளவு வளர்ந்து விட்டதும்



அவளுக்கு நேரம் நிறையக் கிடைக்கிறது என்று. ஆனால் அதை எப்படி சமாளிப்பது என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தான்.

பேசாமல் இன்னொரு குழந்தை பெற்றுக் கொண்டால் கூட நன்றாகத்தான் இருக்கும் போல இருந்தது. ஆமாம் அப்படித்தான் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

வீட்டுக்கு போன் செய்தான். "அனு இன்னைக்கு நாம எங்காவது வெளியே போலாம். எங்க போலாம்னு யோசித்து வை. சீக்கிரம் வந்தர்றேன்."

அனுராதா உற்சாகமாக இருந்தாள். ஆனால் அவனுக்கு அன்றைக்கு வர முடியவில்லை.

"சாரிம்மா. இன்னைக்கு ஆடிட் வந்தவங்களைக் கவனிக்கச் சொல்லி என் பொறுப்பில விட்டுட்டாரு எங்க மேனேஜர். அவசரமா அவருக்கு எங்கயோ போக வேண்டிய அவசியம்" என்றான்.

"பரவாயில்லைங்க." என்று சொல்லி விட்டாள்.

அவனுக்கும் ஏமாற்றம்தான் அவள் கோபமாகச் சண்டை போட்டால் கூடத் தேவலாம் போல இருந்தது.

மறுநாள் பிரச்சினை வேறுவிதமாக வெடித்தது.

## 3

"என்னங்க! இவன் பண்ணியிருக்கிற வேலையைப் பாருங்க" என்று அலறிய அனுராதாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் முரளிதரன்.

"என்ன? என்ன?" என்று எழுந்து வந்தான். அம்மா எதற்காக இப்படிக் கத்துகிறாள் என்று புரிந்து கொள்ளாமல் அழகாக

விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் குழந்தை. அதைப் பார்த்த வுடன் முரளிதரனின் முகத்தில் நெகிழ்ச்சி தோன்றியது.

''என்னடா ராஜா'' என்று அள்ளிக் கொண்டான். மகிழ்ந்து போனான்.

''ஆமா அவன் செய்திருக்கிற வேலையைப் பாருங்கன்னா கொஞ்சரீங்களா'' என்று அனு கடிந்து கொள்ளவும்தான் அவன் அந்த விஷயத்தைக் கவனித்தான்.

முரளிதரன் தனக்கென்று வைத்துக் கொண்டிருந்த ரேடியோ அங்கே பிரித்துக் கிடந்தது.

''அப்பா. யாரு உள்ள இருந்து பாடறாங்கன்னு பாத்தேன். அம்மா திட்டறாப்பா'' என்றான்.

''அவ கிடக்கிறா. ஏண்டி அவன் என்ன உன்னைப் போல மக்கா. என்னைப் போல அறிவாளிடி'' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டு மகனை அள்ளிக் கொண்டான்.

இந்த ஆன்டி கிளைமாக்ஸ் மாதிரியான நடத்தையைக் கண்டு அவள் முகம் வாடிப் போய் சமையலறையில் புகுந்து கொண்டாள்.

''அப்பா முகம் கழுவிட்டு வாப்பா. இது என்னன்னு பாக்க லாம்'' என்றான் குழந்தை.

அவனும் உடனே போய் முகம் கழுவி விட்டு வந்து குழந்தை யிடம் அமர்ந்து கொண்டான்.

''குமரா. ரேடியோவுக்குள்ளே ஆள் எல்லாம் இருக்க மாட்டாங்க. காத்தில அலையில பாட்டு வரும். அது இந்த ரேடியோ பெட்டிக் குள்ளே வரும்'' என்று அள்ளி மடியில் அமர வைக்கையிலேயே மனைவி ணங்கென்று காபி டம்ளரை வைக்கக் கண்டான்.



முதலில் கண்டு கொள்ளவில்லை. குழந்தைக்கு எவ்வளவு எளிமையான முறையில் முடியுமோ அவ்வளவு எளிமையாக ரேடியோ வேலை செய்வதை விளக்கினான்.

அவள் தலையில் அடித்துக் கொண்டு அந்தப் பக்கம் போனாள்.

குழந்தையைக் கொண்டு போய் ஸ்கூலில் விட்டு விட்டு வந் தான்.

சமையலறைக்குப் போனான்.

மனைவி கண்ணைக் கசக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''ஏய். என்னத்துக்கு இப்ப இந்த அழுகை?'' என்றான்.

''பின்னே? மனசுக்குள்ளே இருக்கறதுதானே வெளியே வரும். எனக்கு அறிவில்லேன்னு அவன் முன்னாடி சொல்லணுமா'' என்று பொருமினாள்.

அவன் திகைத்துப் போனான். ''சாரிடா. சாரிடா'' என்றான் பத்துமுறை.

அவள் கோபம் அடங்கவில்லை.

''அவன் ரேடியோவை உடைச்சா என்ன? டி.வி.யை உடைச்சா என்ன? நான் ஒருத்தி இந்த வீட்ல யாரு? எதுக்கு இருக்கேன்?'' என்று புலம்ப ரசனையுடன் பார்த்தான்.

''ஹேய்! சண்டை போடும்போது அழகா இருக்கே.'' என்று ஐஸ் வைக்க அவள் அவன் கையை விலக்கினாள்.

''ஹேய் குழந்தைங்க பொதுவா நிறையத் தெரிஞ்சுக்கணும்னு விரும்புவாங்க. எதைக் கண்டாலும் அது அவங்களுக்கு ஆச் சரியம்தான். அப்ப அவங்க ஆர்வத்தைக் கெடுக்காம பதில் சொல் லணும். புரிய வைக்கணும்.''

''ஆமா. இப்ப ரேடியோவைப் பத்தித் தெரிஞ்சு அவனுக்கு என்ன ஆகப்போகுது?''

''அப்படிச் சொல்லாதே அனு. கெட்டில்ல டீ கொதிக்கும் போது மூடி மேல எழும்பறதைப் பாத்துத்தான் ஜேம்ஸ் வாட் யோசிக்க ஆரம்பித்தாராம். அவரு கண்டு பிடிச்சதுதான் ட்ரெயின் தெரியுமில்லே?''

''அதெல்லாம் சரிங்க. கரண்ட்ல கையை வச்சு விளையாட றானே பயம் வல்லையா உங்களுக்கு?''

''ஆமா. கேர்ஃபுல்லாத்தான் இருக்கணும். அவனுக்கு இன்னைக்கு சொல்லியிருக்கேன். அப்பா இல்லாம எதையும் பிரிச்சுப் பாக்கக் கூடாதுன்னு. கரண்ட்ல கை வைக்கக் கூடாதுன்னு.''

''............''

''சும்மா மிரட்டினா எதுவும் நடக்காது. கண்ணம்மா புரிய வைக்கணும்'' என்றான்.

''அதெல்லாம் எனக்கு எங்கே புரியும். நான்தான் மக்காச்சே!'' என்றாள் மீண்டும் விட்ட இடத்தைத் தொட்டு.

''எந்த மடையன்டி சொன்னான் நீ மக்குன்னு?''

''நீங்கதான்'' என்றாள்.

அவன் சிரித்தான்.

''நீ எவ்வளவு அழகா வீட்டுக் காரியமெல்லாம் பாக்கறே. எங்க ஆபீஸ்லயே அவனவன் மாஞ்சு போறான் தெரியுமா? உனக் கென்னப்பா வீட்டம்மா கெட்டிக்காரவங்க - எல்லாத்தையும் அவங்களே பாத்துக்கறாங்கன்னு'' என்றான். இழைந்தான்.

கொஞ்சம் குளிர்ந்தாள்.



''இஷ்டப்பட்டுக் கட்டினன்டி - என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டியா'' என்று முகம் நோக்கிக் குனியவும்.

''சரி. சரி. ஆபீஸ் போகணும் புறப்படுங்க'' என்று வெட்கத்துடன் விலகினாள்.

''சரி! இன்னைக்குக் கொஞ்சம் கவனிப்பியா?'' என்று கொஞ்சிக் கெஞ்சிக் குளிர வைத்து விட்டுத்தான் போனான்.

மாலை எதிர்பார்ப்புக்களோடு அவன் வர நிலைமை வேறு விதமாக இருந்தது.

* * *

''ஏய் அனு'' என்று வந்தாள் நீலா. அனுவின் பள்ளித் தோழி.

''வா. வா. நல்லாயிருக்கியாடி'' என்று வரவேற்றாள் அனுராதா.

''நான் நல்லா இருக்கேன்டி. நீ நல்லா இருக்கியா?'' என்றாள்.

''குழந்தைங்கள்ளாம் நல்லா இருக்காங்களா?'' என்று பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சுக்கு நடுவே ''உங்க வீட்டுக்காரரைப் பாத்தேன்டி'' என்றாள்.

''எப்ப?'' என்றாள் அனு. ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக.

''ஹோட்டல்ல வச்சு'' என்று ஒரு பைவ் ஸ்டார் ஹோட்டல் ஒன்றின் பெயரைச் சொன்னாள்.

''ஓ!''

ஏதோ ரெண்டு மூணு லேடீஸ். அப்புறம் கூட ரெண்டு பேரு ஜென்ட்ஸ். ஒரே கலகலப்பா இருந்தாங்க'' என்றாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவள் புறப் பட்டுப் போனபின்பு அனுவின் மனம் அவள் சொன்ன விஷயத்தி லேயே ஓடிக் கொண்டிருந்தது.

ஆபீஸ் வேலை என்று சொல்லிக் கொண்டு ஃபிரண்ட்ஸ் கூட கூத்தடிச்சிட்டு வந்திருக்கிறாரு" என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றைக்கென்னவோ அவன் வந்ததற்குப் பிறகும் குழந்தையைக் கவனிக்கிறேன் என்று நேரம் கடத்தினாள்.

அவன் போசனையுடன் காத்துக் கொண்டிருந்தான்.

வந்தாள். தலைவலி மருந்தைத் தடவிக் கொண்டிருந்தாள்.

அவன் கண்கள் சுருங்கின. உள்ளே கோபம் கனன்று எழுந்தது.

"என்ன திடீர்னு தலைவலி? ப்ரோகிராம் மாறிடுச்சா?" என்றான் கடுப்பாக.

"ஏன். ப்ரோகிராம் மாறக் கூடாதா? நீங்க மட்டும் ப்ரோகிராம் மாத்தறதில்லையா? அன்னைக்கு என்னை வெளிய கூட்டிட்டுப் போறேன்னு சொல்லிட்டு யாரோடவோ ஹோட்டல் போயிருக்கீங்க."

அவன் முகத்தில் கோபம் ஏறியது.

"யாரு சொன்னா?"

"நீலா சொன்னா" என்றாள்.

"யாரோ ஒரு நீலா சொன்னா நம்பறே. நான் சொன்னா நம்ப மாட்டியா? நான் உண்மையாத்தான் சொன்னேன்" என்றான்.

எழுந்தான்.

சட்டையை மாட்டிக் கொண்டான். வெளியே கிளம்பினான்.

"எங்க போறீங்க?"

அவன் திரும்பி அவளை எரித்து விடுகிறாற் போல் பார்த்தான். அந்தப் பார்வையில் அவள் பயந்து நடுங்கினாள்.

அவன் வெளியேறினான்.



அம்மா வீட்டு வரைக்கும் பொடி நடையாக நடந்தான். அமைதியான அந்த இரவு நேரத்தில் நடப்பது மனதுக்கு இதமாக இருந்தது. மனம் லேசாகியது.

"என்னடா இந்த நேரத்துல?" என்றார் அம்மா.

"சும்மாதான். தூக்கம் வர்லே. ஒரு ரவுண்ட் வந்தேன்" என்றான்.

அண்ணன் வீட்டுக்கும் போனான். அண்ணியிடம் ஆலோசனை கேட்கலாமா என்று நினைத்தான். உடனே இன்னொரு மனது சொன்னது 'வேண்டாம். அவ்வளவு சீக்கிரம் குடும்பப் பிரச்சினைகளை வெளியே விட வேண்டாம்' என்று.

சற்று நேரம் அண்ணன் குழந்தைகளிடம் விளையாட்டாய் பேசி விட்டு வந்தான்.

திரும்ப வரும்போது அவள் உறங்கியிருந்தாள். கன்னங்களில் கண்ணீர் கோடாக ஓடியிருந்தது. அந்தக் கணம் அவன் மனம் உருகியது. அணைத்துக் கொண்டான்.

அவளும் உறக்கக் கலக்கத்திலேயே இணங்கிக் கொடுத்தாள்.

◆ ◆ ◆

"ஆடிட் டிபார்ட்மென்ட்காரங்க வந்திருந்தாங்க சென்னையிலிருந்து. அவங்க போற வரைக்கும் அவங்களைக் கவனிச்சு அனுப்ப வேண்டியது எங்க கடமைதானே? அதுக்குத்தான் அவங்களை நல்ல ஓட்டலுக்குக் கூட்டிட்டுப் போக வேண்டியதாப் போச்சு. அங்க வச்சுத்தான் உன்னோட ஃபிரண்ட் பாத்திருக்காப்ல."

"இதை என்கிட்டே அன்னைக்கே சொல்லியிருக்கலாமில்லே."

"எங்க போய் சொல்றது? சொன்னா மட்டும் புரிஞ்சுக்குவியாக்கும்? அப்பவும் அவங்க கூடப் போக முடியுது எங்கூட மட்டும் வரமுடியலேன்னு பாட்டுப் பாடியிருப்பே?"

அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. மௌனமாக வேலைகளைப் பார்த்தாள்.

டைனிங் டேபிளில் அமர்ந்தபடி அவன் பேசிக் கொண்டிருந்தான். நேற்றிரவே சமாதானம் ஆகியிருந்தாலும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

இப்போதுதான் பேச்சு வார்த்தை ஆரம்பித்தான். அவளுடைய அழுத்தமான மௌனம் கண்டு அவனும் பேச்சை வளர்த்தவில்லை.

புறப்பட்டான்.

இன்றைக்கென்னவோ சமையலறையிலிருந்து நல்ல மணம் வந்தது. என்ன செய்கிறாள் என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. ஆனால் அவன் வழக்கம் போல் சமையலறைக்குப் போய் செய்கிற கலாட்டாக்கள் எதையும் செய்யவில்லை.

அன்று பிற்பகல் சாப்பாட்டுப் பாத்திரத்தைத் திறக்கும் போது கூட கொஞ்சம் கோபமாக இருந்தான். ஆனால் பாத்திரத்தைத் திறந்து கேரியரின் முதல் பாத்திரத்தைப் பார்த்தவுடன் அவன் முகத்தில சிரிப்புப் படர்ந்தது.

"என்னப்பா? காது வரைக்கும் சிரிப்பு" என்றான் கண்ணன்.

"அது ஒன்னுமில்லே என் வைஃப் ஒரு சூப்பர் ஐட்டம் செஞ்சு அனுப்பியிருக்காப்ல" என்றான். உள்ளே பொங்கிய கோபம் எல்லாம் குப்பென்று அடங்கியது.

## 4

அனுராதாவுக்குத் தன் மேலேயே கோபம் பொங்கியது. கணவன் கேட்டது சரிதான். அவரை நம்பாமல் வேறு யாரையோ நம்புவது எந்த வகையில் நியாயம்? மக்குப் பண்டாரம் என்பது சரியாகத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டே வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.



நேற்றிரவு வரும்போது எப்படி வருவானோ என்று பயந்து கொண்டிருந்தாள். ஆனால் அமைதியாக வந்தான். அமைதியாகவே எல்லாம் நடந்து முடிந்தது.

அவளுக்கு இப்போது தன் மாமியாரின் உறவினர் ஒருவர் சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது.

அவருடைய மகனுக்குப் பெண் பார்க்கப் போனபோது வரதட்சணையோ நகைகளோ எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்ற போது பெண் வீட்டாருக்குச் சந்தேகம் வந்து விட்டதாம்.

உறவினர்கள் பையனுக்கு ஏதாவது வியாதி இருக்குமோ வென்று சந்தேகம் கிளப்பி விட்டார்களாம். பையன் நொந்து போய் விட்டானாம்.

அதற்குப் பிறகு பெண்ணே வந்து அவனைச் சந்தித்துப் பேசி அதற்குப் பிறகு கல்யாணம் நடந்ததாம். நல்ல வேளையாக அந்தப் பெண் துணிவானவளாக இருந்ததனால் விஷயம் சுபமாக முடிந்தது. ஆம்பளைங்கள்ல நல்லவங்க இருக்க மாட்டாங்களா என்ன என்று அந்த அம்மா ஆதங்கத்தோடு பேசியது நினைவுக்கு வந்தது.

அனுராதாவின் அம்மா குடும்பத்தினர் குடியிருந்தது ஒரு ஒண்டுக் குடித்தன வரிசை. அங்கே பலவிதமான கதைகள். அதையெல்லாம் பார்த்துத் தனக்கு மண்டை குழம்பி விட்டது என்று வருந்திக் கொண்டாள்.

அவனிடம் எல்லாவற்றையும் கொட்டி விட வேண்டும் என்று மனது பதைத்தது. ஆனால் அவனுக்கு முன்னால் நின்று தொடர்ச்சியாகப் பேச அவளுக்குச் சரியாக வராது.

ஒன்று சிரிப்பான். அல்லது ஆழமாக உணர்ச்சி நிறைந்த பார்வையாகப் பார்ப்பான். அதற்கு மேல் உளற ஆரம்பித்து விடுவாள்.

என்ன செய்யலாம் என்று யோசித்தாள். ஒரு காகிதத்தை எடுத்து எழுதினாள்.

"உங்க மேல எவ்வளவு பிரியம் வச்சிருக்கேன்னு அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். அதனாலதான் நீங்க எப்பவும் என்னை விட்டுப் பிரியாம இருக்கணுமேன்னு எனக்குப் பயம். அது சொன்னா உங்களுக்குப் புரியாது" என்று எழுதியிருந்தாள்.

அதைப் படித்து விட்டுத்தான் அவனுக்கு அவ்வளவு சிரிப்பு. மனமெல்லாம் மகிழ்ச்சியில் நிறைந்திருக்க வீட்டுக்குப் போன் செய்தான்.

போன் மணியடித்துக் கொண்டேயிருந்தது. எடுப்பதற்கு ஆளில்லை.

அவன் சிந்தனையுடன் செல்போனை ஆஃப் செய்தான்.

* * *

அனுவின் சிறிய தங்கைக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டு அவளை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருந்தார்கள். அம்மா ஓடி வந்து "அனு நீ வந்து கொஞ்சம் உதவியா இருந்தாத் தேவலை" என்று வேண்டுகோள் விடுக்கவே அவளுக்கும் வேறு வழியிருக்கவில்லை.

அம்மாவிடம் தயக்கத்துடன் சொன்னாள். "அம்மா. அவருகிட்ட சொல்லாம எப்படி நான் வர்றது?" என்று.

"நான் சொல்லிக்கறேன்டி மாப்பிள்ளைகிட்டே! எனவும் புறப்பட்டுப் போனாள்.

வீட்டுக்கு வந்த முரளி வீடு பூட்டியிருக்கவும் திகைத்து நிற்கையிலேயே தொடர்பு கொண்டாள்.



"இப்படி ரேகாவுக்கு பிரசவ வலி கண்டிருச்சு. அதனாலே அம்மா உதவிக்குக் கூப்பிட்டாங்க அதான்..." என்று இழுத்தாள்.

"ஓ! சரி சரி. பையன் எங்கே?" என்றான்.

"அவனை ஷீலா அக்காகிட்டே விட்டுட்டு வந்திருக்கேன்" என்றாள்.

"ஓ.கே நான் போய்க் கூட்டிட்டு வந்தர்றேன்."

அன்று முழுவதுமாக பையனுடன் செலவழித்தான். அவனுக்குத் தோசை வார்த்துக் கொடுத்து சற்று நேரம் பாடம் சொல்லிக் கொடுத்துக் கதை சொல்லி ஒரு வழியாக அவனை உறங்க வைத்து விட்டு அவனும் படுத்தபோதுதான் அவனுக்கும் ஒரு விஷயம் புரிந்தது.

வீட்ல இருக்கிறவங்கதானே. குழந்தையைப் பார்த்துக்கறதென்ன பெரிய கஷ்டமான்னு என்று நினைக்கிறோமே. உண்மையிலேயே அது எவ்வளவு கஷ்டம் என்று.

அப்போது முடிவு செய்தான். மனைவி திரும்பி வருகிற வரைக்கும் குழந்தையைத் தானே பார்த்துக் கொள்வது என்று.

இடையிலே மாமனாரையும் பார்த்து உதவிகள் செய்து விட்டு வந்தான்.

மறுநாள்!

குமரன் அப்பா என்று ஒரு பொம்மை கொண்டு வந்து காட்டினான். ரேடியோ மாதிரி ஒரு மாடல்.

"ஏதுடா?" என்று கேட்டான் முரளிதரன்.

"அப்பா அம்மா இந்த மாடல் செஞ்சு குடுத்தாங்க" என்றான். மிகவும் அழகாக இருந்தது.

அச்சு அசலாக அப்படியே ரேடியோ மாதிரி எதனால் செய்திருந்தாள் என்று பார்த்தான். வெறும் அட்டைகளை வைத்துக் கொண்டு வாட்டர் கலர் பயன்படுத்தி செய்திருந்தாள்.

அன்றைக்கெல்லாம் யோசனையாகவே இருந்தான்.

பையனைக் குளிக்கச் செய்து டிபன் கொடுத்துக் கொண்டிருக்கையில் அவள் அவசரமாக வந்து இறங்கினாள்.

''எதுக்கு வந்தே? அவங்க கூட இருந்து பாத்துக்க வேண்டியது தானே?'' என்றான்.

''இல்லே. நீங்க எப்படி சமாளிப்பீங்கன்னுதான்'' என்று இழுத்தாள்.

''அதெல்லாம் ஜோரா சமாளிச்சாச்சு. பருப்பு சாதம் வச்சேன். குமாருக்கு தோசை வாத்துக் கொடுத்தாச்சு.'' என்றான்.

''தொட்டுக்க'' என்றாள்.

''அவனுக்கு சர்க்கரை. எனக்கு ஊறுகாய்.'' என்றான் புன்னகைத்தான்.

''மாமா அசத்திட்டீங்க'' என்று உற்சாகமானாள்.

''சரி. எதுக்கும் நான் வெங்காயச் சட்னி செஞ்சு வச்சுட்டுப் போறேன்'' என்றாள்.

''நோ பிராப்ளம். நீ உங்கம்மாவுக்கு ஹெல்ப் பண்ணீட்டு வா. பாவம் அவங்க ஒருத்தரே அலைபறாங்க.'' எனவும் நெகிழ்ந்தாள்.

பையனைப் பள்ளிக் கூடத்தில் விட்டு விட்டு வந்த அவனுக்கு அதற்கான பரிசுகளும் கிடைத்தன.

இன்னொன்றும் செய்தான் ''இந்தா இந்த செல்போனை வச்சுக்க. நான் புதுசு வாங்கிக்கறேன். எப்படியும் வித்தா அடிமாட்டு விலைக்குக் கேப்பானுங்க. இப்படி அவசர ஆத்திரத்துக்கு யூஸ் ஆகும் நீ



ஆஸ்பத்திரியிலருந்து வந்தவுடனே சி.யூ.ஜி மாதிரி எதும் ஸ்கீமுக்குப் போயிரலாம்'' என்றான்.

அன்றைக்கு ஆஸ்பத்திரியில் அதைப் பற்றிப் பெருமையாகச் சொன்னதுதான் வம்பாகப் போனது.

* * *

அன்றைக்குப் பிற்பகலில் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. அம்மா பெரிதும் மகிழ்ந்தாள்.

''நல்ல வேளைடி. ஆண் குழந்தை பொறந்தது. இல்லேன்னா அவளோட மாமியார் அவளைக் கரிச்சுக் கொட்டிடுவாங்க'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட அதைப் பார்த்துப் பாவமாக இருந்தது.

''ஏம்மா எது பொறந்தா என்னம்மா. முதல் குழந்தைதானே'' என்றாள்.

''அதையேன் கேட்கறே? அவங்க வீட்ல எல்லா மருமகளுக்கும் முதல் குழந்தை ஆம்பளைக் குழந்தையாம். இது ஒரு பெருமையாம்!'' என்று மறுபடியும் அவர் சிரிப்பதைப் பார்த்து வாஞ்சையாகப் புன்னகைத்தாள்.

''அம்மா. அந்த விஷயத்துல உன்னோட மாப்பிள்ளை எவ்வளவோ பரவாயில்லை. எனக்குக் குமரன் பொறக்கறதுக்கு முன்னாடி சொல்வாரு. எந்தக் குழந்தை பொறந்தாலும் சந்தோஷம். ஆணா இருந்தா சந்தோஷம். பொண்ணா இருந்தா அதைவிட சந்தோஷம் அப்படீன்னாரு'' என்றாள்.

அப்போது அம்மா சொன்னார். ''டீ அனு உனக்கு கிடைச்ச மாப்பிள்ளை மாதிரி யாருக்கும் கிடைக்காது.''

''அது அப்படித்தான்'' என்றாள்.

அறைக்குக் கொண்டு வந்தவுடன் ரேகா சொன்னாள்.

"அக்கா. எங்க வீட்டு மனுஷங்க வந்தா கொஞ்சம் நல்ல வித மாகப் பேசுங்க. இல்லேன்னா பேசவும் கூட மாட்டேங்கறாங்க அப்படின்னு ஊரு பூராவும் சொல்லிட்டுத் திரிவாங்க'' என்றாள். அதற்காக யதார்த்தமாகப் பேசினாள். ஆனால் ரேகாவின் நாத்தனார் ஒரு பெரிய வெடிகுண்டைப் போட்டு விட்டுப் போனாள்.

## 5

''ஏம் மாமா இப்படிப் பண்றீங்க. சின்னவயசுப் பசங்ககிட்டே போய் கண்ட நாயமும் பேசறீங்க. நான் உங்களுக்குத் தலை சீவி விட்டேன்னு போய்ச் சொன்னீங்களாம். அந்தக் கண்ணன் சொல்லி கிட்டு சிரிக்கறாப்பல'' என்று கடிந்து கொண்டாள் மருதாயி.

அதற்கும் சிரித்தார் வீராசாமி. ''அட ஆமா. புள்ளே. ஏதோ தமாசுக்கு சொல்றதுதான்.''

"நல்ல தமாசு போங்க" என்றார் மருதாயி மறுபடியும்.

"என்ன இப்போ? ஆமா சொன்னேன்தான். நீ அன்னைக்கு எனக்குத் தலை வாரி விடலையாக்கும்'' என்றார்.

''அடப்பாவி மனுஷா? இப்படி மானத்தை வாங்கறியே. அன்னைக்கு என்னமோ கையில காயம் பட்டுதுன்னு சொன்னி யேன்னு தலைவாரி விட்டேன். அதைப் போய் யாராவது ஏலம் போடுவாங்களா" ஆனால் அந்தக் குரலில் பெரிதான கோபம் இருக்க வில்லை.

''அட புள்ளே. இப்பத்த பசங்க எல்லாம் சின்ன வயசுலயே தனிக்குடித்தனம் வந்துருதுங்க. பெரியவங்க கூட இருக்கற



தில்லையா? ஒன்னும் புரியறதில்லை. காசு நிறையக் கிடக்குது. ஆனா அதை வச்சுட்டு வாழ்க்கையை எப்படி சந்தோஷமா வாழ்ற துன்னு தெரிய மாட்டேங்குது. ஒவ்வொரு வீட்ல ஒவ்வொரு பிரச்சினை. இப்ப நம்ம முரளி வீட்லயே எடுத்துக்கயேன். அவரு நல்ல படிப்பு. வசதி. ஆனா அதெல்லாம் அனுவுக்குக் கம்மி. இவரு எதிர்பார்ப்புக்கு அது வரமாட்டேங்குது. ஆனா புருஷன்காரன் தகுதிக்குத்தான் இல்லைன்னு மனசுக்குள்ளயே நினைச்சு பயம். சந்தேகம். ஆனா வெளிப்படையா சண்டை போடாது. ஆனா உலகத்துலயே இப்படி ஒரு ஆசை பாத்திருக்க மாட்டே. அப்படி ஒரு ஆசை அந்தத் தம்பிக்கு. என்னன்னா பொண்டாட்டி தன் கூட மனசு விட்டு சண்டை போடணும்னு'' என்றார். சிரித்தார்.

மருதாயியும் சிரித்தார். ''நல்ல ஆசை போங்க.'' என்று.

"சிரிக்காதே புள்ளே. அதுல விஷயம் இருக்கு. அவ என் மேல எப்ப நம்பிக்கை வைக்கிறாளோ அப்பத்தான் என்கூட உரிமையா சண்டை போடுவா. ஆனா ஒரு குழந்தை ஆகி அதுக்கும் ஆறு வயசு ஆனதுக்கப்புறம் கூட அவளை எப்ப வேண்ணாலும் துரத்தி விடு வேன்னுதான் அவ நினைக்கறா. அப்படிங்கறாரு. எப்பவாவது அதைப் பத்தி என்கிட்டப் பேசுவாரு. அதுக்குத்தான் அந்தப் பொண்ணு பொறாமைப்படற மாதிரி ஏதாவது கிளப்பி விட்டுட்டு வருவேன். லேசாப் புகையுமே தவிர வெடிக்காது. மனுஷங்களுக்கு எப்படி எப்படியெல்லாம் கவலை தெரியுமா?''

மருதாயி கூட சிந்தனையில் ஆழ்ந்தார். "அது சரிப்பா. ரொம்பப் பெரிசா வெடிச்சு பிரிவினை லெவலுக்குப் போயிடப் போவுது."

''சேச்சே. அப்படியெல்லாம் விடமாட்டமில்லே.'' என்றார்.

ஆனால் ஒரு உண்மையைச் சொல்லவில்லை. தான் இப்படி யெல்லாம் செய்வது முரளிதரனுக்குத் தெரியாது என்பதுதான் அது.

* * *

"அப்பா. என்னப்பா உனக்கு இங்க எல்லாம் முடி" என்றான் குமரன் அவன் மார்பின் மீது சாய்ந்து கொண்டு.

"ஆமாடா சில பேருக்கு அப்படி இருக்கும்" என்றான்.

"அப்பா! என்னப்பா அம்மா இன்னைக்கு வராதா?" என்றான்.

"இல்லடா ராஜா! அம்மா சித்தி கூட இருந்துட்டு நாளைக்குத் தான் வரும்."

"அப்பா நீ சித்திபோட பாப்பாவைப் பாத்துட்டு வந்தியா?"

"ஆமாடா!"

"என்னைக் கூட்டிட்டுப் போகலே?"

"ஆஸ்பிட்டல்ல குழந்தைங்களை விட மாட்டாங்க."

குழந்தைக்கு உலகின் எல்லாக் குழந்தைகளுக்கும் ஏற்படக் கூடிய அந்த சந்தேகம் எழுந்தது.

"அப்பா பாப்பா எப்படிப் பொறக்கும்?" ஒரு கணம் முரளிதரன் இதற்கு என்ன பதில் சொல்வது என்று திகைத்துப் போனான்.

பிறகு புன்னகையுடன் சொன்னான். "அது சாமி கொண்டு வந்து பாப்பாவை வைக்கும்."

அம்மா வயித்துலயா?

"ஆமா!"

"அப்ப எப்படி வெளிய வரும்?"

"அதான் டாக்டர்ஸ் ஆபரேஷன் பண்ணி வெளிய எடுப்பாங்க."

குழந்தை ஒருவாறு திருப்தியானான். உடனே அடுத்த கேள்வியை எடுத்து வீசினான்.

"அப்பா எம்ப்பா அம்மா என்னை அடிச்சா?"

"எதுக்கு?"

* * *



"அம்மாகிட்டே இதுதான்ம்ப்பா கேட்டேன். அதுக்குத்தான்."

"அவ கிடக்கிறா மக்கு" என்று சொல்ல வந்த வார்த்தையை மாற்றிக் கொண்டான்.

அன்றைக்கு அப்படி சொல்லப் போய்த்தானே மனைவி மிகவும் வருத்தப்பட்டாள் என்பது நினைவுக்கு வந்தது. உடனே வேறு விதமாக பதில் சொன்னான்.

"நீ அம்மா பிஸியாயிருக்கும் போது கேட்டிருப்பே?"

குமரன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

"இல்லப்பா. இப்படித்தான் அம்மா என்னைக் கொஞ்சினாளா அப்பக் கேட்டேன்."

முரளிதரன் சிரித்தான்.

"பரவாயில்லே உனக்கும் கூட எப்பக் கேக்கணும்னு தெரிஞ்சிருக்கு. ஆனா இனிமே இந்த மாதிரிக் கேள்வியெல்லாம் எங்கிட்டக் கேளு. என்ன?" என்றான்.

"சரிப்பா." என்ற குழந்தை அப்பாவின் கன்னத்தில் முத்தமிட்டான்.

உடனே தன்னிச்சையாகத் தானும் முத்தமிட்டு மகிழ்ந்தான்.

குழந்தை மறுபடியும் கேட்டான். "அப்பா. எங்கூடப் படிக்கறானே. விஜய் அவனுக்குத் தம்பிப் பாப்பா பொறந்துருக்கு. நம்ம வீட்ல எப்ப பொறக்கும்?"

"அம்மாவைத்தான்டா கேக்கணும்?"

"ஏன்?"

"ஏன்னா?" என்ன காரணம் சொல்வது. புரியவில்லை. பிறகு சொன்னான்.

"அது ஏன்னா அம்மாதானே குழந்தைகளை வளக்கணும்."

''நான் தம்பிப் பாப்பாவை வளக்கறேன்ப்பா'' என்றான்.

முரளிதரன் கலகலவென்று சிரித்தான். ''அறிவுடா நீ'' என்று கொஞ்சியவன். ''சரி சாமிகிட்டே கேட்போம். ஆனா சாமி தங்கச்சிப் பாப்பா குடுத்தாலும் வாங்கிக்கனும் என்ன?'' என்றான்.

''சரிப்பா'' என்றான் குழந்தை கனகாரியமாக.

''சரிடா ராஜா தூங்கு!'' என்று உறங்க வைத்தான். ஆனால் உள்ளே சிந்தனை ஓடியது.

''மனைவியிடம் பேச வேண்டும் போல இருந்தது. ஆனால் பேச முடியாது. அந்த ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் செல்போன் எடுக்காது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவளே அழைத்தாள்.

''அனு!'' என்றான் ஆர்வமாக.

''அத்தான். சாப்பிட்டீங்களா?'' என்றாள்.

''ம். அதெல்லாம் ஆச்சு. என்ன அனு இந்தப் பய இந்தப் பேச்சப் பேசறான்'' என்று சிரித்தான்.

''ஆமா அறுத்துத் தள்ளிடுவான். உங்களைக் கண்டா பயம். அதனால உங்களைக் கேட்க மாட்டான்.''

''அதெல்லாம் குழந்தைகளுக்கு பயம்கறது கிடையாது. நீ ஏதாவது பூச்சாண்டி ரேஞ்சுக்கு என்னைப் பத்தி சொல்லி பய முறுத்தி வச்சிருப்பே'' என்றான்.

''ஆமா பின்னே! நீங்க ஆபீஸ்ல இருந்து டயர்டா வருவீங்க. இவன் வந்து அறுத்தான்னு வைங்க. நீங்க கோபமாவீங்க.''

''ஏண்டி நம்ம குழந்தை. இவ்வளவு அழகாப் பேசறானேன்னு சந்தோஷம் தாண்டி படுவேன். இப்பப் பாரு என்னென்ன கேள்வியெல்லாம் கேட்கறான். பாப்பா எப்படிப் பொறக்கும்? அவ



ளுக்குத் தம்பிப் பாப்பா எப்பப் பொறக்கும்? அப்படின்னு'' என்று உல்லாசமாகச் சிரித்தான்.

''நீங்க என்ன விளக்கமாச் சொன்னீங்களாக்கும்?''

''எல்லாத்தையும் சொல்ல முடியுமா? அவனுக்கு வேணும்கற அளவுக்கு. அவனுக்குப் புரியற அளவுக்கு அனு. குழந்தைங் கன்னா ஒன்னும் தெரியாதவங்க இல்லே. சின்னச் சின்ன மனிதர் கள்டி. அவங்களை மதிக்கனும்டி. அவங்க கேள்விகளுக்குப் பதில் சொல்லனும்டி. அவங்களை நாம ஏதோ உருவாக்கின மாதிரி நாம நினைக்கக்கறோம். அவங்க நம்ம வழியா உலகத்துக்கு வர்றாங்க. நாம ஜஸ்ட் ஒரு கருவிங்க. அவ்வளவுதான். அவங்களை அடிக்கக் கூடாதுடி. புரிய வைக்கனும். அவங்க எதிர்ப்புக் காட்ட மாட்டாங் கங்கற தைரியத்துலதானே அவங்களை அடிக்கறோம். நான் கரெக்டாத்தானேப்பா கேட்டேன் அப்ப ஏன் அம்மா அடிக்கறா அப்படீங்கறான்.''

''ஒரே நாள்ல உங்ககிட்டே புகாராக்கும். இனிமே எக்குத் தப்பா கேள்வி கேட்டா இதுக்கெல்லாம் பதில் சொல்றதுக்கு உங்கப்பா இருக்காரு. அவரு வந்தாக் கேளுன்னு சொல்லிடறேன். போதுமா?'' பாதி எரிச்சலும் பாதி உண்மையுமாக.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல் ''அது ரொம்பக் கரெக்ட். இதுக்கு பதில் சொல்லு. அவன் கேட்கற தம்பி தங்கை எப்ப ரெடியாகறது?''

''சித்த சும்மா இருங்க. ஆஸ்பத்திரியில வச்சு இந்தக் கேள்வி யெல்லாம் கேட்டுகிட்டு'' என்றாள்.

''சரி எப்ப வரே?''

''நான் நாளைக்குக் காலையில வர்றேன். அப்படி இல்லேன்னா சாயங்காலம் வந்தர்றேன்.''

"நீயில்லாம நல்லாவே இல்லை அனு" என்றான். மேலும் சற்று நேரம் பேசினான். அதற்குள் அவன் வேறொரு விஷயத்துக்குத் தாவினாள்.

"ஏங்க அத்தை ரொம்பக் கோபிச்சுகிட்டாங்க. என்ன இவன் ரெண்டு நாளா வீட்டுப் பக்கம் எட்டிப் பாக்கறதே இல்லை. அவனே தனியாக் குழந்தையை சமாளிக்கறானா? ஏன் நாங்க பார்த்துக்க மாட்டமான்னு ஒரே கோபம்."

"எப்ப சொன்னாங்க?"

"ஆஸ்பத்திரிக்கு ரேகாவைப் பார்க்க வந்திருந்தாங்க. அப்ப."

"சும்மாதான் அனு. நானே ரெண்டு நாளைக்கு இந்தப் பயலைப் பாத்துக்கனும்னு ஆசையா இருந்தது" என்றான்.

அவள் ஆச்சரியமானாள். "அப்ப ஆபீசுக்கு லீவா?"

"ஆமா. இன்னைக்கு ஆபீசுக்கு லீவுதான் மத்தியானம் லீவு போட்டேன்" தன்னை அணைத்துக் கொண்டு உறங்குகிற மகனை ஆசையுடன் முத்தமிட்டான். அது அவளுக்கும் கேட்டது. பிறகு கிசுகிசுப்பான குரலில் சொன்னான்.

"இது உனக்கு" என்று சொல்லி ஆஃப் செய்தான்.

அவள் யோசனையில் ஆழ்ந்தாள். தனது சகோதரிகள் ஒவ்வொருத்தியும் தங்கள் புகுந்த வீட்டின் அடக்கு முறைகளைப் பற்றிச் சொல்லியோ என்னவோ அவளுக்குத் தன் கணவனின் நடத்தை பற்றி முழுமையான நம்பிக்கை எல்லா நேரமும் இருக்கறதில்லை. இன்றைக்கு அதற்கேற்றாற்போல் ஒரு சம்பவமும் நடந்தது.

அதே நேரம்!

அவன் போனை வைத்து விட்டு நிமிரவும் அம்மா அழைத்தார்.

"சரிம்மா. கோபிச்சுக்காதே. நாளைக்கு அங்கே கூட்டிட்டு வரேன்," என்று சமாதானம் செய்தான்.



உள்ளத்தில் வேறு விதமான எண்ணமும் ஓடியது. இந்தப் பெண்கள் வீட்டில் இருக்கிறவரை அவர்கள் ஒரு பொருட்டாகவே நமக்குத் தோணுவதேயில்லை. ஆனால் ஓரிரு நாள் பிரிவே தாள முடியாததாக இருக்கிறதே! என்று எண்ணிக் கொண்டான்.

மகனை இறுக அணைத்துக் கொண்டு உறங்கினான்.

## 6

வீராகசாமியும், வரலட்சுமியும் அவ்வளவு ஒற்றுமையான ஜோடி. எப்போதும் இணை பிரியாமல் இருப்பார்கள். இருந்தா அந்த மாதிரி ஒத்துமையா இருக்கணும் என்று எல்லாரும் பேசுவார்கள்.

திருச்சியிலிருந்து பத்துப் பதினைந்து மைல் தொலைவில் அந்தக் கிராமம் இருந்தது. அவர் பக்கத்திலேயிருந்த கூட்டுறவுத் துறையில் பணியாற்றினார். அவ்வப்போது ஆடிட் என்று போய் வருவதைத் தவிர மற்ற நேரமெல்லாம் மனைவியோடு கழிப்பதையே விரும்பினார்.

ஒரே ஒரு குறை. அந்த ஜோடிக்குக் குழந்தை கிடையாது. ஆனாலும் அவர் அதை ஒரு குறையாகவே கருதாமல் அந்த அம்மாவை மிகவும் அன்பாக வைத்துக் கொண்டார்.

அவர் வருவதற்கு சற்று நேரமானால் வரலட்சுமி அம்மா வாசலிலே நிற்பார்.

"என்ன ஆத்தா ஐயா வர்லியாக்கும். அதான் வாசல்லயே நிற்கிறீக." என்று போகிற வருகிறவர்கள் எல்லாம் கேலி செய்தால் கூட அவர் சட்டையே செய்ய மாட்டார்.

அறுபதாவது வயது வரை அவர்கள் அப்படித்தான் வாழ்ந் தார்கள். என்ன ரிடையரானதற்குப் பிறகும் கூட அவரது அலுவல கத்தில் ஏதாவது சந்தேகம் என்று அவரை உதவிக்கு அழைப்பார் கள். அவரும் போய் வருவார். அப்படித்தான் ஊரே நம்பியிருந்தது உண்மை தெரியும்வரை.

வராகசாமிக்கு திடீரென்று மரணம் நேர்ந்தது. எல்லா ஏற்பாடு களும் நடந்து கொண்டிருந்தது. அப்போது கிராமத்துப் பெரியவர் சொன்னார்.

''வராகசாமி. எங்கிட்ட ஒரு வாக்குறுதி வாங்கியிருக்காப்ல. அவருக்கு ஏதாவது ஆனா ஒரு குறிப்பிட்ட விலாசத்துக்குத் தந்தி குடுத்து அந்த சொந்தமும் வந்ததுக்குப் பின்னாடிதான் கிரியை செய்யணும்னு'' என்றார்.

எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம்.

"இது ஏதடா? இது வரைக்கும் யாருக்கும் தெரியாத சொந்தம்?" என்று. வந்த சொந்தத்தைப் பார்த்து ஊரே அதிர்ந்து போனது.

"ஐயோ என்ற ராசா. இப்படிப் புள்ளைகளை வுட்டுப் போட்டுப் போனயே'' என்று அலறிக் கொண்டு வந்த அம்மாள் இன்னொரு மனைவியாம்.

அவர் கையோடு ஒரு கடிதம் கொண்டு வந்தார்.

உறை ஒட்டப் பட்ட கடிதம்.

*அன்புள்ள வரலட்சுமிக்கு.*

*எல்லா மனிதர்களையும் போல எனக்கும் ஒரு வாரிசு வேண்டு மென்ற எண்ணம் இருந்தது. ஆனால் உயிராய் நேசித்த உன்னை விட்டு விலகவும் முடியவில்லை. உன்னை விட்டு விடவும் என் மனம் ஒப்பவில்லை.*



*என்னை மன்னித்து விடு. அவளுக்கு என்னைப் பற்றிய எல்லாமும் தெரியும். ஆனால் சட்டப்படி நீதான் என் வாரிசு. எல்லாமும் உன் பெயரில்தான் உள்ளது. நீ பார்த்து அவளுக்கு எது செய்தாலும் சரி.*

*உன் மன்னிப்பு வேண்டும்.*

வராகசாமி.

சற்று நேரம் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்த அந்த அம்மா எழுந்து காரியங்களைப் பார்த்தார்.

கதையை விவரமாகச் சொன்ன ரேகாவின் நாத்தனாரைப் பார்த்தாள் அனுராதா.

இந்த அம்மா என்ன சொல்ல வருகிறார். புரியவில்லை.

அவரே மறுபடியும் தொடர்ந்தார்.

அதற்கு அப்புறம் என்ன ஆச்சு.

"என்னத்தை ஆகறது? ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்காக. ஆனா என்ன இருந்தாலும் அவரு செஞ்சது துரோகம்தான். அத னாலே எங்க கிராமத்துல இப்ப என்ன பேச்சுன்னா வராகசாமி யாட்டம் பொண்டாட்டியைத் தாங்கவும் வேண்டாம். ஒட்டு மொத் தமா வேட்டு வைக்கவும் வேண்டாம்னு பேச்சு. அதனால ரொம்பத் தாங்கற ஆளுங்களை நம்பக் கூடாது'' என்றார்.

அனுவுக்குப் புரிந்தது. தன் அம்மா தனது கணவனைப் புகழ்ந்தது பொறுக்காமல் இந்த அம்மா இப்படி ஜாடை மாடையாக எச்சரிக்கை விடுக்கிறது என்று. ஆனால் புரியாதவள் போல்.

''அது அப்படித்தாங்கா. நீங்க வடை சாப்பிடுங்க.'' என்று உபசரித்து அனுப்பி வைத்து விட்டு வந்தாள்.

அனுராதாவின் அம்மாவால் வந்த வினை இத்தனையும்.

"அனு இந்த அம்மாவோட தொல்லை தாங்கலை. கொஞ்சம் கான்டீன் கீன்டீன் கூட்டிட்டுப் போய் எதையாவது வாங்கிக் கொடுத்து அப்படியே தாட்டி விட்டுட்டு வா" என்று அனுப்பி வைக்கப் போய் அந்த அம்மா தனது மனதையே குழப்பி விட்டு விட்டுப் போய் விட்டார்.

என்று நொந்து கொண்டே போய்ப் படுத்திருந்தவள்தான் கணவனுக்கு.

போன் செய்து விட்டு வந்தாள். ஆனால் கணவன் பேசிய அன்பு மொழிகள் அவள் மனதை சமனப்படுத்தவே ஆழ்ந்து உறங்குகிற தங்கையின் படுக்கையை எட்டிப் பார்த்து விட்டு ஆழ்ந்து உறங்குகிற குழந்தையின் தொட்டிலையும் எட்டிப் பார்த்து விட்டு படுக்கையில் சாய்ந்தாள்.

இன்னொரு குழந்தை வேண்டும் என்ற கணவனின் ஆசை தன் மனத்துக்குள் இழையோட. வெட்கப் புன்னகை இழையோட.

✦ ✦ ✦

மறுநாள்!

அவன் அலுவலகத்தில் லாலல்லா பாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் கேட்டான்.

"என்னடா மாமு. என்ன விஷயம்? பாட்டு தூள் பறக்குது. வீட்டம்மா வீட்டுக்கு வரப் போறாங்களாமா?" என்று கேலி செய்தான்.

"புரியுதில்ல. அதை வேற விளக்கமா சொல்லணுமாக்கும்?" என்று சிரித்தான்.

ஆசையுடன் வீட்டுக்கு வந்தான்.

அனுவும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். வெளியே கூட போய் வந்தார்கள்.



சற்று நேரம் ஆஸ்பத்திரி அனுபவம் எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள். மகிழ்ச்சியாக நேரம் கழித்தார்கள்.

அதற்குப் பிறகு வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாம். யதார்த்தமாக சொல்வது போல் ரேகாவின் நாத்தனார் சொன்ன வராகசாமி கதையைச் சொன்னாள்.

அதைக் கேட்டவுடன் முரளிதரன் முகம் இருண்டு போனது. விலகினான். எழுந்து நின்றான்.

"என்னங்க!" என்று அவள் பதைக்கவும் அவன் கசப்புடன் அவளைப் பார்த்தான்.

"உனக்குத் தாலி கட்டி ஏழு வருஷமாச்சு. ஒரு குழந்தையும் ஆகி அவனுக்கும் ஆறு வயசாச்சு. இத்தனை நாளும் அடி மனசுல ஒரு அவ நம்பிக்கையை வச்சுகிட்டே வாழ்ந்திருக்கே. இதைவிட கேவலமா ஒரு மனுஷனை அவமானப் படுத்த முடியாது தெரியுமா?" என்று பொரிந்து தள்ள வேண்டும் போல் இருந்தது. ஆனால் தான் என்ன செய்கிறோம் என்றே புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிற அவளைப் பார்த்துப் பாவமாக இருந்தது.

அன்றைக்கு அவன் மனதில் தோன்றியது. தன் வாழ்க்கை இனிமேல் பொருளற்றதாகத்தான் இருக்கப் போகிறது என்று.

இன்னொரு மனது சொன்னது. சும்மாவா அந்தக் காலத்தில் இருந்து சம அந்தஸ்தில் சம்மந்தம் செய்யறதுதான் நல்லது என்று. இந்தப் பொண்ணுக்கு எவ்வளவு உண்மையா இருந்தாலும் இவளுக்குப் புரியப் போவதில்லை. இனி உன்னோட சந்தோஷங்களையும், நிம்மதியையும் வெளியே தேடிக் கொள்ள வேண்டியதுதான் என்று.

அனுராதாவுக்கு அன்றைக்குப் புரியவில்லை தன் வாழ்க்கையின் நிம்மதிக்கு அன்றைக்குப் பெரிய பூட்டாகப் போட்டு விட்டோம் என்று.

தொடர்ந்து அவனைக் காயப் படுத்திக் கொண்டே இருக்கிறோம் என்றே அவளுக்குப் புரியவில்லை.

## 7

மறுநாள் காலை!

"ஏங்க இன்னைக்கு எத்தனை மணிக்கு வருவீங்க? எங்கயாவது போக வேண்டிய வேலையிருக்குமா?'' என்றாள் அனுராதா.

''இதபாரு அனு ஒரு ஆம்பளைன்னு இருந்தா நாலு இடத்துக்குப் போக வேண்டியிருக்கும். வர வேண்டியிருக்கும். போற வர்ற இடம் எதுன்னெல்லாம் உனக்குச் சொல்லிக்கிட்டிருக்க முடியாது" என்றான்.

அவள் திகைத்துப் போனாள்.

''ஐயையோ! நான் யதார்த்தமாகத்தான் கேட்டேன்'' என்று படபடத்தாள்.

"ஆமா. நீ எல்லாமே யதார்த்தமாத்தான் கேட்கறே. யாரில்லைன்னு சொன்னா" என்றான்.

குரலில் ஒரு மாற்றம் தெரிந்தது. ஒரு இறுக்கமான குரலில் அவன் பேசிய போதும் அவள் புரிந்து கொள்ளவில்லை. மேலும் கேட்டாள்.

"ஏங்க டிபன் கட்டிக் கொடுக்கட்டுமா? இல்ல வந்தர்றீங்களா?'' என்று.

"இல்ல. டிபன் கட்டிக் குடுத்துரு.'' என்றான். கட்டிக் கொடுத்தாள்.

தினமும் சற்று நேரம் பகலில் வீட்டுக்கு வந்து சற்று அளவளாவி விட்டுப் போவது அவனுக்குப் பிடித்தமான விஷயம். ஆனால் இன்றைக்கு ஏனோ சலிப்பாக இருந்தது.

''எப்போதும் இவளுக்கு அன்பை நிரூபித்துக் கொண்டே இருக்கவேண்டுமா என்ன?'' என்ற எண்ணம் தோன்றிவிட்டது.

அலுவலகத்துக்குப் போன பின்பும் அதே யோசனையாக இருந்தான்.

பிறகுதான் அந்த முடிவைச் செய்தான்.

* * *

''நிஜமாவா சொல்றீங்க?'' என்றாள் அனுராதா.

''அட ஆமா'' என்றாள் ஷீலா.

''அக்கா அப்ப நிஜமாத்தான் சொல்லியிருக்காரு. கல்யாணமான அன்னைக்கே நான் கேட்டேன். கல்யாணத்துக்கு முன்னால யாரையாவது காதலிச்சிருக்கீங்களான்னு. அப்பவே சொன்னாரு. உன்னைத்தான்னு. நான் கிண்டல் செய்யறாரோன்னு நினைச்சேன்'' என்றாள் அனுராதா.

ஷீலா சிரித்தாள்.

''அண்ணி. நானும் பலவிதமான பொண்ணுங்களைப் பாத்திருக்கேன்.''

"என்னோட அனு வேற மாதிரிங்கண்ணி. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பாக்காம ராணுவ வீரன் மாதிரி நேரா கோயிலுக்குப் போவா. சாமியை மட்டும் பாத்துக் கும்பிடுவா. அப்புறம் தானுண்டு தன் வேலையுண்டுன்னு வந்துடுவா. அப்படின்னு சொல்லிட்டு சிரிக்கும்" என்றாள் ஷீலா.

அனுராதா ஷீலா சொல்வதையெல்லாம் வியப்புடன் கேட்டுக் கொண்டாள்.

"அப்புறம் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் - செவ்வாய்க் கிழமையும் கோவிலுக்கு வரும். ஆனா நீ பேயைக் கண்ட மாதிரி ஓடிடுவியாம். சொல்லிட்டு சிரிக்கும்'' என்றாள் மேலும்.

"ஆமாக்கா! எனக்குப் பயம். அதிலயும் எங்க அம்மாவும் சிஸ் டர்லயும் மாமா வந்து பேசினாங்கன்னா நீ உன்னோட அழகான திருவாயைத் திறந்து எதாவது உளறி வச்சேன்னா ஆஹா இதுக்கு மேல் மாடு காவின்னு முடிவு பண்ணிடுவாருன்னு செய்த கலாட் டாவில் நான் பயந்து போயிட்டேன். அதான் ஓடி வந்துடுவேன்'' என்றான்.

மாமியாரும் மாமனாரும் கூடச் சிரித்தார்கள்.

''அம்மா அப்படியெல்லாம் நீயா நினைச்சுக்கக் கூடாது. ஒவ் வொருத்தருக்கும் ஒரு டேஸ்ட். சசியும் முரளியும் வீட்டுக் கேத்த பொன்னு போதும்ன்னு நினைச்சாங்க. ஆனா தரணி வேலைக்குப் போற பொன்னு வேணும்பான் போல இருக்கு. அதனால நீயா அதையும் இதையும் நினைச்சுக்காம இயல்பா இரு'' என்றார் மாமியார்.

அனுராதா மகனையும் கணவரையும் அனுப்பி விட்டு மாமியார் வீட்டுக்கு வந்திருந்தாள்.

இரண்டு மூன்று நாள் பிரிவிலேயே கணவன் தன்னிடம் ஏதோ ரொம்ப நாள் பிரிந்தவன் போல் நடந்து கொண்டது அவளுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தது.

இன்னொரு புறம் அந்த அளவுக்கு தனக்கு அன்பை வெளிப் படையாகக் காட்டத் தெரியவில்லையே என்பது கவலையாகவும் இருந்தது.

"நீ பாட்டுக்கு என்னமோ ஆஸ்பத்திரிக்கு போய் உட்கார்ந்து கிட்டே. இங்க வீடே காலியான மாதிரி இருந்துச்சு... போ...'' என்றான்.



கைச்சிறைக்குள் அடைத்துத் தன் அன்பையெல்லாம் கொட்டித் தீர்த்தான்.

திணறிப் போன அவள் ''நீங்கதானே போகச் சொன்னீங்க?'' என்றாள்.

"அட நீ போனதைத் தப்பு சொல்லலே. என்னோட ஃபீலிங்ஸை நான் சொல்றேன்'' என்றான்.

ஒவ்வொரு முறையும் அவனுக்கு இணையாகத் தானும் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்று நினைப்பாள். ஆனால் செய்ததில்லை.

மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்ததனாலோ என்னவோ இயல்பான வேடிக்கையான பேச்சுக்களை அவள் குடும்பத்தில் கேட்ட தில்லை.

சகோதரிகள் தங்களுக்குள் ஏதாவது சினிமாக் கதை பேசிச் சிரிப்பது உண்டு.

பெண்குழந்தைகளை எப்படியாவது நாகரீகமாகத் திருமணம் செய்து கொடுத்தால் போதும் என்ற தவிப்பிலேயே பெற்றோர்கள் இருந்ததால் மற்ற விஷயங்கள் எல்லாம் இரண்டாம் பட்சமாகவே இருந்தன. பொருளாதாரப் பற்றாக்குறை வேறு.

அப்பாவும் அம்மாவும் வேடிக்கைப் பேச்சுப் பேசி அவள் பார்த்ததே இல்லை.

''மளிகை வாங்கியாச்சா?''

''நாளைக்கு டிபனுக்கு என்ன?'' என்று வீட்டுத் தேவைகளைப் பற்றிய பேச்சுத்தான்.

பெண்களை பிளஸ் டூ வரை படிக்க வைத்தால் போதும் என்று அப்பா நினைத்தார்.

அனுராதாவின் அக்காவின் திருமணம் முடிந்தவுடனே ஒருபுறம் மகிழ்ச்சி என்றாலும் இன்னொரு புறத்திலே கவலையும் ஏற்பட்டது.

பெரும்பாலும் வீட்டுக்கு வரும்போதெல்லாம் "அம்மா ரொம்ப வேலை வாங்கறாங்க. நாலைஞ்சு பேருக்கு நானே எல்லாம் செய்ய வேண்டியிருக்கு" என்று கண்ணீர் விடுவாள்.

"சரி. இத்தனை வேலையும் செஞ்சா என்ன பாராட்டா கிடைக்குது. எங்க வீட்டுக்காரார் ஒரு முசுடு. எதுக்கெடுத்தாலும் கோபம்தான். அதென்ன எதுக்கெடுத்தாலும் கோபம்?" என்று புலம்புவாள்.

"ஏண்டி தனியா இருக்கும் போது கூடவா?" என்று அம்மா கிசுகிசுப்பாகக் கேட்டாள்.

"அந்தக் கொடுமையை ஏன் கேட்கறே? அங்கயும் எல்லாம் அதிகாரம்தான். அந்தாளு முகம் மலர்ந்து சிரிச்சு நான் பார்த்ததே இல்லை" என்பாள் அவள்.

அதையெல்லாம் கேட்டுக் கேட்டு அனுவுக்கு ஒரே பயம்.

முரளிதரனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்த போது கூட்டுக் குடும்பமாகத்தான் இருந்தார்கள்.

சசிதரனும், தரணிதரனும் அவளைக் கேலி செய்வார்கள். அவளுக்கு ஒரே ஆச்சரியமாய் இருக்கும்.

"அண்ணி. அண்ணனோட மேனேஜர் எங்கிட்ட சொன்னாரு. அவரு இப்பல்லாம் ஒழுங்காவே வேலை செய்யறதில்லை.... அனு அனுன்னுதான் எல்லாத்திலயும் கிறுக்கி வைக்கறாரு. அப்படிங்கறாரு." என்பான் தரணி.

அனு அதை மிகவும் சீரியஸாய் எடுத்துக் கொண்டு கவலைப்பாளாள். அதைக் கண்டு எல்லாரும் சிரித்தார்கள்.



சமயத்தில் நடராஜனையே கேலி செய்வார்கள். "அப்பா எல்லா விஷயத்துலயும் நல்லா பிளான் பண்ணினீங்க. ஆனா ஒரு விஷயத்துல கோட்டை விட்டுட்டீங்க" என்பான் தரணி. அப்பா சிரித்துக் கொள்வார்.

"அதென்ன! மூணும் பையனாவே பெத்துட்டீங்க. இதே நான் மட்டும் பொண்ணாப் பொறந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும். எல்லாரும் தாங்குவாங்க" என்று சோகமாவான்.

அதற்கும் சிரிப்பார்கள்.

அவர்கள் வீட்டில் சசிதரனின் பெண்ணை எல்லாரும் தாங்குவார்கள்.

அப்பா. பெரியப்பா. சித்தப்பா எல்லாரிடமும் இருந்தும் அவளுக்குப் பரிசுகள் கிடைக்கும்.

பெண்குழந்தையை இப்படிப் போற்றி வைத்துக் கொள்வார்களா என்ன? என்று அவளுக்கு ஒரே ஆச்சரியம்.

அதைப் போய் அவர்கள் வீட்டில் சொன்னால் ஒரே ஆச்சரியம்.

"அப்படி வீட்டில் பொறக்கறதுக்கு நமக்குக் குடுத்து வைக்கலை. விடு" என்பாள் அவள் சகோதரி.

இளையவள் கீதா "அப்படி ஏண்டி நினைக்கறீங்க? நம்மளைக் காட்டிலும் இல்லாதவங்க எத்தனை பேர் இருக்காங்க தெரியுமா?" என்று ஆறுதல் சொல்வாள்.

தன் வீட்டிலேயே உரிமையாகப் பணத்தை எடுத்து செலவு செய்ய மாட்டாள் அனுராதா.

பயந்து பயந்து அவனிடம் கேட்பாள்.

"ஏங்க குழந்தைக்குப் பால் பவுடர் வாங்கணும்."

"ஹேய்! பீரோவில பணம் இருக்கு. வீட்டு செலவுக்குன்னு எடுத்துக்க வேண்டியதுதானே." என்று அவன் கேட்டால் அவளுக்கு ஆச்சரியம்.

இப்போதும் கூட புதிதாக ஒரு புடவை வாங்க வேண்டு மானாலும் அவன்தான் சொல்ல வேண்டும்.

எல்லாப் பெண்களையும் போல அதை வாங்கிக் கொடு. இதை வாங்கிக் கொடு என்று நச்சரிக்க மாட்டாள். அது ஒரு நல்ல குணம் என்று புகுந்த வீட்டில் பாராட்டினார்கள்.

பத்து நாளைக்கு ஒருமுறை அமர்ந்து கணக்கு வழக்கு பற்றிப் பேசுவார்கள். நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்ப்பான். அதுவும் அவள் வற்புறுத்தலுக்காக.

'கருவேப்பிலை எட்டணாவுக்கு'' என்று எழுதிவைத்திருப் பாள்.

அவன் சிரிப்பான் "ஹேய் இது உன் வீடுடி. நான் உன் மேலதி காரி இல்லடி. உன் புருஷன்டி'' என்பான்.

"வேண்டாம் நான் இப்படியே இருந்துக்கறேன். ஏதாவது விவரமில்லாம செஞ்சு வைச்சேன்னா அப்புறம் நீங்க கோபிக்கக்கூ டீங்க. எனக்குத் தாங்காது'' என்பாள்.

அவனுடைய கோபமெல்லாம் மாமனார் மேல்தான் பாயும். மனதுக்குள்தான் வருந்திக் கொள்வான்.

வறுமையில் வாழ்கிற எத்தனையோ பேர் வாழ்க்கையில் மகிழ்ச்சியாய் இருந்ததில்லையா என்ன? இவர்கள் என்ன பெண் பிள்ளைகளை இப்படிப் பொத்திப் பொத்தி வளர்த்துட்டாங்க. இல்லல்ல. பொத்திப் பொத்தியில்ல. அடக்கி ஒடுக்கி வளர்த் திருக்காங்க'' என்று நொந்து கொள்வான்.

அவர்களிடம் போய் சண்டையா போட முடியும்? தன் குடும்பத்தைத் தானேதான் சீரமைத்துக் கொள்ள வேண்டும். என்று எண்ணிக் கொள்வான்.



மெதுவாகத்தான் கலாட்டாவான பேர்வழி என்பதைப் புரிய வைத்தான். சக நண்பர்களிடம் பேசும்போது அவர்கள் வேறு விதமாகச் சொன்னார்கள்.

''நீ சொல்றதெல்லாம் பார்த்தா அவங்ககிட்டே நிறைய நல்ல விஷயங்கள் இருக்கு போல இருக்கு. நீ எதுக்கு மாத்த முயற்சிக் கறே? விட்ரு. அப்புறம் ஓவர் கலகலப்பாகி நம்மளையே கலாய்க்க ஆரம்பிச்சுடுவாங்க'' என்றார்கள். அவனும் அவள் இருக்கிற இருப்பிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டான்.

மகனை வயிற்றில் சுமந்து கொண்டிருந்த போது பிரசவத்துக் காகப் போனபோது எல்லா செலவுகளையும் அவனே செய்தான்.

மாமனார். மாமியாரிடம் சொல்லி விட்டான் ''பொறக்கப் போறது என்னோட வாரிசு. அது ஆணாயிருந்தாலும் பொண்ணா யிருந்தாலும் இந்த உலகத்துக்கு அதைக் கொண்டாடி வரவேற் கறது என்னோட கடமை. தனிரும் பாருங்க. அவளுக்கு எந்த வசதிக் கும் குறை வைக்க வேண்டாம். செலவெல்லாம் நான் பாத்துக்க றேன்'' என்று.

இதிலெல்லாம் அனுராதாவின் மூத்த சகோதரிக்குக் கொஞ்சம் பொறாமை. அவளும் வேண்டுமென்று பொறாமைப் படவில்லை. எல்லாப் பெண்களுக்கும் உள்ள அந்தப் பொறாமை. அவளை அறியாமலே அவள் உள் மனதில் படிந்திருந்தது.

இத்தனைக்கும் அனுராதா பொறாமைப் பட மாட்டாள். பெருமை பேச மாட்டாள். ஆனால் அனுராதாவின் தாயார் தன்னையறியாமலே ஒரு பெரிய தவறைச் செய்தார்.

''எங்க வீட்டு மாப்பிள்ளைகள்லயே அனுவோட மாப்பிள்ளை மாதிரி வராது'' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வாள்.

மனித மனத்தின் இயற்கை என்னவென்றால் அதிலும் பெண்களின் இயற்கை எப்போதும் மற்றவர்களைக் காட்டிலும் ஏதோ விதத்தில் உயர்வாக இருக்கிறோம் என்று நினைப்பது. அந்த எண்ணத்திலேயே அவர்களது சகோதரிகளும் ஒரு தவறு செய்தார்கள்.

"உ. அது எப்பவும் இந்தக் குழையடிக்கற ஆம்பளைங்களை நம்பக் கூடாதடி. குழையடிக்கக் குழையடிச்சே நமக்கும் குழைச்சுப் பூசிடுவாங்க" என்பார்கள்.

"போங்கடி. உங்க அத்தான் அப்படியெல்லாம் இல்லே. அவருக்கு அதெல்லாம் தெரியாது. அப்படியே பூசினாலும் என் முகத்துக்குத் திருப்பதி ஆண்டவர் மாதிரி அழகாத்தான் இருக்கும்" என்று சிரித்துப் பேச்சை மாற்றி விடுவாள். ஆனால் நெஞ்சுக்குள்ளே பாறாங்கல்லை வைத்த மாதிரி இருக்கும்.

கொட்டிகிட்டேயிருந்தா பிள்ளைப் பூச்சி கூடத் தேளாய் மாறிடும்" என்று அடிக்கடி அவள் அம்மா சொல்வது போலேதான் கணவனைக் கொட்டிக் கொட்டி அவன் தேளாய் மாறிவிட்டான் என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை.

இனி வரும் காலங்களில் அவன் வேறாய் இருக்கப் போகிறான் என்பதையும் பெரியதொரு சோதனைக் காலம் இனிமேல் தனக்கு வரப் போகிறது என்பதையும் அவள் அப்போது புரிந்து கொள்ள வில்லை.

போன வாரத்திலேயே இரண்டு மூன்று பாட்டில்களில் எலுமிச்சை ஊறுகாய் செய்து வைத்திருந்தாள். மாமியாருக்கும் ஷீலாவுக்கும் கொடுக்கலாம் என்று.

இடையிலே ரேகாவின் பிரசவம் வந்திருந்ததால் கொண்டு போய்க் கொடுக்க முடியவில்லை. அதனால்தான் இன்றைக்குப்



போனாள். அப்போதுதான் கணவன் கோயிலில் வைத்துத் தன்னைப் பார்த்து விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டதை அறிந்தாள். மகிழ்ச்சியானாள்.

ஒருபக்கம் ஷீலாக்கா சொன்ன செய்தி அவள் மனத்துக்குள் இறங்கி ஒரு உற்சாக ஊற்றைக் கிளப்பியிருந்தது என்றால் அதற்கு நேர் மாறாக அவள் கணவனின் மனம் பாறையாக இறுக ஆரம்பித்திருந்தது.

## 8

''ஹலோ! மாலாவா சொல்லம்மா'' என்றான் முரளிதரன் குரலில் உற்சாகம் தொனித்தது.

வீராசாமி நின்று பார்த்தார். அவர் குறுகுறுவென்று பார்ப்பதைக் கவனித்தவுடன் அவன் குறுஞ்சிரிப்பு சிரித்துக் கொண்டு எழுந்து அந்தப் புறம் போனான். ஜன்னலோரமாக நின்று கொண்டு செல் போனுக்கு காதைக் கொடுத்தான்.

வீராசாமி விடுவேனா என்று இந்தப் பக்கமாக நின்று கவனித் தார். முழுமையும் கேட்டார்.

''சரி நாளன்னைக்கே வந்தர்றீங்களா. நான் ஸ்டேஷனுக்கே வந்தர்றேன்.''

''............''

"திங்கை லாரியில அனுப்பியிருக்கியா? ஒன்னும் பிரச்சினை யில்லம்மா. கலெக்ட் பண்ணிக்கலாம். வீடு நீ போன வாரம் பாத்தி யேம்மா. அதேதான்."

"........."

ஒத்தை ஆளுக்கு தாராளமாப் போதும்மா. உன் பொண்ணு என்னம்மா சின்னப் பொண்ணுதானே. நான் வரப் போறேன். அவ்வளவுதானேம்மா. நான் பைக்ல வர்றேன். அதுலயே போயிரலாம்."

"........."

"ஷார்ப்பா ஆறு மணிக்கு வந்தர்றேன். வீட்டில் க்வீனைக் கேட்டதாச் சொல்லு." என்று சிரித்தான்.

"........."

"நீ ஏம்மா கவலைப்படறே? நான் இருக்கேன் உனக்கு. என்ன வேண்ணாலும் செய்யறேன்." குரலில் ஒருவிதக் குழைவு தெரிந்தது.

வீராசாமி அவன் திரும்புவது தெரிந்ததும் ஜன்னலை விட்டு விலகி அந்தப் புறம் நகர்ந்தார். ஏதோ குழப்பத்தில் ஆழ்ந்தார்.

அனுராதாவின் குணங்களால் காயப்பட்டுப் போய் வேறு விதமாக இந்தத் தம்பி ஆரம்பித்து விட்டதோ என்று அவருக்கே கவலையாகிப் போனது. இதை விடக் கூடாது. நுணுகிப் பார்த்து விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

ஏதோ இப்போதே துப்பறியும் சிங்கம் போல் உணர ஆரம்பித்து விட்டார்.

* * *

ஐந்து மணிக்கே பாத்ரூமில் தண்ணீர் விழுகிற மாதிரி சத்தம் கேட்டது.

அனுராதா திடுக்கிட்டு விழித்தாள். கணவன் அதிகாலையிலேயே எழுகிறவன்தான். ஆனாலும் ஐந்து மணிக்கே குளிக்கிற பழக்கம் எல்லாம் இல்லை. உடற்பயிற்சி செய்வான். இல்லாவிட்டால் வாக்கிங் போவான். இன்றைக்கென்ன இப்படி? முன்பெல்லாம் தனது அன்றைய நாள் திட்டம் என்ன என்று சொல்வான். இப்போதெல்லாம் அவனிடம் பேசுவதற்கே பயமாய் இருந்தது.



குளித்து விட்டு வந்தான். அவசரமாய் வெளியே கிளம்பினான்.

"ஏங்க டீ போடட்டுமா?" என்றாள்.

ஒரு நிமிடம் அவள் முகம் பார்த்தான். பிறகு என்ன நினைத்தானோ "சரி. போடு. ஆனா சீக்கிரம் போடு" என்றான்.

பரபரவென்று டீ போட்டுக் கொடுப்பதைப் பார்த்தவுடன் அவன் முகத்தில் மென்மை படர்ந்தது.

"அனு. ஒரு ஃப்ரெண்ட் வராங்க. ஸ்டேஷனுக்கு ரிசீவ் பண்ணப் போறேன். சாயங்காலமும் இனிமே லேட்டாகும்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அவள் முகம் மலர்ந்தது. "சரிங்க" என்றாள்.

"சாப்பாடு அங்கயேதான். நீ பையனை மட்டும் கவனி. நீயே ஸ்கூலுக்குக் கொண்டு போய் விடு" என்றான்.

"சரிங்க" என்றாள்.

கிளம்பி விட்டான்.

* * *

ரயில் சுறுசுறுப்பாக ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

எப்போதோ தன் நண்பன் சொன்ன ஒரு ஜோக் நினைவுக்கு வந்தது.

நூறு சர்தார்ஜிகள் ஒரு ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தார்களாம்.

'அடுத்த சில நிமிடங்களில் ரெயில் ஒன்றாம் நம்பர் பிளாட்பாரத்தில் நுழையும்' என்று அறிவிப்பு வெளியானவுடனே தொண்ணூற்றொன்பது சர்தார்ஜிகள் சட்டென்று தண்டவாளத்தில் குதித்து

விட்டார்களாம். அவர்கள் திடீரென்று அப்படிச் செய்ததால் ரயிலை நிறுத்த முடியாமல் போய் அத்தனை பேரும் அங்கேயே இறந்து போனார்களாம்.

பிழைத்தது ஒரேயொரு சர்தார்ஜிதானாம். பேட்டி கண்டபோது அவர் சொன்னாராம். "பிளாட்பாரில் நுழையும்னு சொன்னதால எல்லாரும் பிளாட்ஃபார்ம் மேல வரும்னு நினைச்சுட்டுக் குதிச்சுட்டாங்க" என்றார்.

'நீங்க மட்டும் ஏன் குதிக்கலேன்ன'வுடனே "நான் தற்கொலை செஞ்சுக்கலாம்னு வந்தேன்னாராம்" என்று.

தனக்குள் சிரித்துக் கொண்டே நிற்க ஒரேயொரு சின்ன சூட்கேஸும் ஐந்து வயதுக் குழந்தையுமாக அந்தப் பெண் இறங்கினாள்.

"ஹல்லோ! மாலா" என்று உற்சாகமாக வரவேற்றான்.

குழந்தையைத் தூக்கித் தோளில் ஏந்திக் கொண்டான். சூட்கேஸை வாங்கக் கையை நீட்டினான்.

"இல்லைங்க இருக்கட்டும்" என்றாள் மாலா.

"பரவாயில்லை குடும்மா." என்றான்.

"இல்லை. வெயிட்டே இல்லை. நானே கொண்டு வரேன்" என்றாள்.

கொஞ்சம் நடந்ததும் "டீ காபி எதுவும் சாப்பிடறியா மாலா" என்றான்.

"இறங்கறதுக்கு முன்னேயே குழந்தைக்கு பல் தேய்ச்சு விட்டுட்டேன். வீட்டுக்குப் போய் எல்லாம் செய்றதுக்கு நேரமாகுமில்லே" என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுத்தான்.



"ஹல்லோ க்வீன்! வாட்ஸ் யுவர் நேம்?" என்றான்.

"மை நேம் இஸ் திவ்யா" என்றது குழந்தை.

அவன் சிரித்தான். "நல்லா ஒப்பிக்கறா" என்று மாலாவைப் பார்த்து சிரித்தான்.

அவளும் புன்னகைத்தாள்.

தானும் டீயைப் பருகினாள். அவன் டீயை எடுத்துக் கொண்டே சொன்னான்.

"அனு. எனக்கு டீ போட்டுக் குடுத்துட்டா" என்றான்.

சற்று நேரம் கனத்த மௌனம் நிலவியது.

"நான் இங்கே வர்றது தெரியுமா?" என்றாள்.

"நீ வேற மாலான்னு ஒரு ஆள் இருக்கறதே தெரியாது. அப்படி ஒரு ஆள் இருக்கு. அந்த ஆள் இங்கயே வந்து செட்டில் ஆகப் போகுதுன்னு தெரிஞ்சா பிரளயமே வெடிக்கும்." சிரித்தான்.

அவள் முகத்தில் நிழல் போல் ஒரு சிந்தனை ஓடி மறைந்தது.

"முரளி. நீங்க ரொம்ப லக்கி. அந்த மாதிரி உரிமையாச் சண்டை போட ஒரு ஆள் இருக்கறது சுகம் தெரியுமா?" என்றாள்.

முரளிதரன் ஒன்றும் பேசவில்லை.

விடிந்தும் விடியாமலும் இருந்த அந்தக் காலைப் பொழுது சுகமாக இருந்தது. குளிர் லேசாக இருந்தது. ஆனால் இருவர் முகத்திலும் ஒரு விதமான சோகமும் தோன்றி மறைந்தது.

நடக்க ஆரம்பித்தார்கள்.

பார்த்தும் பாராதது போல் மாலாவைக் கவனித்தான்.

புத்தம் புது மலர் போல் நடந்து கொண்டிருந்தாள். மாநிறம். இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயது இருக்கும்.

நெற்றி பாழ் நெற்றியாக இருந்தது. அந்த நெற்றியைப் பார்த்த உடன் அவன் மனத்தில் சுருக்கென்று ஒரு வலி மனத்தில் கிளம்பியது.

"மாலா. இப்பல்லாம் பொட்டு வச்சுக்கறாங்க" என்றான்.

"எனக்கு இஷ்டமில்லே! என்றாள். நறுக்குத் தெறித்தாற்போல்.

"மாலா தேவேந்திரன் போய் நாலு வருஷமாச்சு. அந்த சோகத்துலயே இருக்கணுமா?"

"சோகம்னு இல்லே. ஜீரணிச்சுட்டேன். ஆனா காய்ச்சப் போச்சுன்னு சொல்றாங்க இல்லே. அது மாதிரி ஆயிடுச்சு" என்றாள்.

"மாலா!" என்று ஏதோ சொல்ல நினைத்தவன் இப்போது மாற்றிக் கொண்டான். எப்படியும் நம் வழிக்கு வந்துதான் ஆக வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். "கொஞ்சம் பொறுப்போம்" என்று முடிவு செய்து கொண்டான்.

◆ ◆ ◆

"பையனுக்கு ஸ்கூலுக்குப் போக ஆட்டோ அரேன்ஜ் பண்ணிடறேன்" என்றான்.

"மூணு தெரு தள்ளியிருக்கிற ஸ்கூலுக்கு ஆட்டோவா? வெட்டிச் செலவு. முன்னூறு நானூறு ரூபாய் கேட்பான்" என்றாள் அனுராதா.

"இத பார்றி! இனிமே எனக்கு நிறைய வேலையிருக்கும். கம்ப்யூட்டர் கோர்ஸ் ஒண்ணு பண்ணப் போறேன். லேட்டாத்தான் வருவேன்" என்றான் முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக் கொண்டு.

"அப்ப சரி. எனக்கு ஒரு வண்டி வாங்கிக் கொடுங்க. டி.வி.எஸ். ஸ்கூட்டி" என்றாள் அனுராதா.

"நீயா? ஓட்டுவியாடி?" என்றான்.

"ம். பழகிக்கறேன். சைக்கிள் ஓட்டுவேன். எங்க வீட்ல எல்லாப் பொண்ணுங்களும் சைக்கிள் ஓட்டுவோம். வண்டிக்கு எங்க போறது?" என்றாள்.



"எங்கயும் போக வேண்டாம். டி.வி.எஸ் ஷோ ரூம்லயே டூ வீலர் ஓட்டறதுக்கும் சொல்லித்தராங்க. ஒரு வாரம் போனாப் போதும். முடிச்சா லைசென்ஸ் வாங்கிக் கொடுத்தர்றாங்க. நீ மட்டும் ஓட்டப் பழகி லைசென்ஸ் வாங்கு. அடுத்த நிமிஷம் வண்டி வாங்கித் தரேன்" என்றான்.

முரளிதரனுக்கும் மனதுக்குள் உற்சாகம் பொங்கிய போதும் அவன் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

"பரவாயில்லையே வண்டி ஓட்டுவாளாமே!" என்று மனதுக்குள் சற்று மகிழ்ச்சிதான்."

"ஆமா பழகிக்க. எப்ப வேண்ணா எது வேண்ணா நடக்கலாம். எதுக்கும் எல்லாத்தையும் தனியா சமாளிக்கப் பழகிக்கணும்.

அவள் முகம் வாடி விட்டது. "இத பாருங்க. நான் வண்டி ஓட்டிப் பழகிக்கறேன். அதுக்காக இப்படியெல்லாம் பேசாதீங்க." என்று சொல்ல வேண்டுமென மனது துடித்தது. ஆனால் சொல்லவில்லை.

அப்படியெல்லாம் சொன்னால் அவன் மனதுக்கு எவ்வளவு இதமாக இருக்கும் என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

◆ ◆ ◆

வீராசாமி யோசனையாகவே இருந்தார்.

ஐந்து வயதுக் குழந்தையைத் தோளில் ஏந்திக் கொண்டு அவனும் அந்தப் பெண்ணும் இணையாக நடந்து வந்த போது அந்தக் காட்சி பார்ப்பதற்குப் பாந்தமாகவே இருந்தது.

நன்றாகப் படித்த பெண் என்பது அந்தப் பெண்ணின் நடை உடை பாவனையிலேயே இருந்தது.

முரளிதரன் கலகலவெனச் சிரித்துக் கொண்டு அந்தக் குழந்தையைக் கொஞ்சியபடி அந்த ரயில்வே பிளாட்ஃபாரத்தில் நடந்து வந்த காட்சி அழகாகவே இருந்தது.

அந்தப் பெண்ணும் பளிச்சென்று இருந்தாள். நடையிலே ஒரு கம்பீரம் இருந்தது. முகத்திலே ஒரு அறிவுக்களை இருந்தது. "இப்படிப் பொண்ணு முரளித் தம்பிக்கு அமைஞ்சா நல்லாத்தான் இருக்கும். அதுக்காக ஆறு வயதுக் குழந்தையை வச்சகிட்டு இன்னொரு பொண்ணைத் தேடிட முடியுமா?"

அவருக்கே கவலையானது.

அனுராதாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்தார். வேண்டாம். பெரிய குழப்பமாயிடும். சரி. வீட்ல அவருக்கு வைஃப் திருப்தியா அமையலே. வெளியில ஆதரவு தேடறாரோ? சேச்சே. முரளித் தம்பி அப்படியெல்லாம் இல்லே. என்று ஒரு மனது சொன்னது.

"என்ன முரளித் தம்பி அப்படியில்லே. வெளியூரிலிருந்து ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்து இங்க செட்டில் பண்றாரு. அதுவும் வயசுப் பொண்ணு. விடோ வேற. அப்படின்னா ஒரே அர்த்தம் தான் இருக்க முடியும்" என்று இன்னொரு மனது வாதாடியது.

"வேண்டாப்பா ஊர் விவகாரம் வேண்டாம். எதுவும் சரியாத் தெரியற வரைக்கும் இதைப் பத்தி அனுராதாம்மாகிட்டே பேசக் கூடாது" என்று முடிவு செய்து கொண்டார்.

அவர் முடிவு செய்தால் என்ன? காலம் வேறு வகையில் பிரச்சினைகளைக் கொண்டு வரப்போகிறது என்பது அப்போது யாருக்குமே புரியவில்லை.

♦ ♦ ♦

அநு அன்றைக்கு உற்சாகமாக இருந்தாள்.

காலையில் வண்டி பழகிக் கொள்கிறேன் என்று சொன்னவுடனே கணவன் உற்சாகமாகி விட்டான். அது மட்டுமில்லாமல் உடனே வங்கிக்கு போன் செய்து அரை நாள் விடுமுறை சொன்னான்.



அநுவை அப்போதே டி.வி.எஸ். ஷோ ரூமுக்கு அழைத்துப் போனான். அன்றைக்கே பயிற்சியில் சேர்த்து விட்டதோடு எல்லாவற்றிற்கும் சேர்த்துப் பணமும் கட்டிவிட்டான்.

முதல் நாள் பயிற்சிக்கு அரை நாள் கூட இருந்து விட்டு வந்தான்.

இவரை என்னவென்றே புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாள் எரிமலையாய் வெடிக்கிறார். மறுநாள் பனிக்கடலாய் மாறி விடுகிறார். இன்றைக்கு மகிழ்ச்சியாய் ஆபீசுக்குப் போகிறார் என்று எண்ணிக் கொண்டாள்.

கடந்த ஒரு மாதமாகவே தன்னிடம் நெருக்கம் காட்டுவதில்லை என்று பயந்து போயிருந்தாள். முன்பெல்லாம் வீட்டில் இருந்து கிளம்பினாலே இன்ன இடத்துக்குப் போகிறேன். இன்ன நேரத்துக்கு வருவேன் என்று சொல்லுவான். இப்போதெல்லாம் எதுவும் சொல்லுவதில்லை.

"போடி. அவனவனுக்கு ஆயிரம் வேலை இருக்கும். எல்லாத்தையும் உன்கிட்ட சொல்லிகிட்டு இருக்க முடியுமா?" என்கிறான்.

அவளுக்கே மனதுக்குள் தன்னுடைய மரியாதையைத் தானே கெடுத்துக் கொள்கிறோம் என்று தோன்றியது.

இன்றைக்கு மட்டுமல்ல எப்போதுமே அவனோடு சண்டை போடுகிற துணிவு தனக்கு வராது என்று தோன்றியது.

இப்போதெல்லாம் மாலை நேரங்களிலும் லேட்டாக வந்தான்.

அன்றைக்கு மாலை பரபரப்பாக வந்தான்.

"பையனை சீக்கிரம் ரெடி பண்ணு" என்றான்.

"எதுக்கு?" என்றாள்.

"ட்யூஷன் சேர்த்திருக்கேன்."

"எந்த டைம்?"

"சாயங்காலம் ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரைக்கும்."

"சாயங்காலம் அவனையும் அனுப்பிட்டு நான் தனியா மொட்டு மொட்டுன்னு முழிச்சுட்டு இருக்கணும். நீங்களும் லேட்டா வருவீங்க" என்று முணுமுணுத்தாள்.

"உன்னைத்தான் டிராயிங் கிளாஸுக்கு போகச் சொல்லு நில்லே. சேர்ந்துக்க. எப்படியும் நான் வர எட்டு மணியாகும். நீயும் டிராயிங் கிளாஸுக்குப் போ" என்றான்.

பேச்சை முடித்து விட்டான்.

அவளுக்குத் தெரியும். அதற்கு மேல் அவனிடம் வாதம் வைத்துக் கொள்ள முடியாது என்று.

அமைதியாகப் பணிவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அவளுக்கு அப்போது தெரியவில்லை. ஏதோ ஒரு விஷயத்தை எதிர்கொள்வதற்குத் தன் கணவன் தன்னை மெல்ல மெல்லத் தயார் படுத்துகிறான் என்று.

## 9

அநுராதா பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தாள்.

"தினம் வேணும்னா டிராப் பண்ணட்டுமா?" என்று கேட்ட கணவனிடம் "வேண்டாம். நானே பஸ்ஸில போய்க்கறேன்.நீங்க வேற இதுக்கா பர்மிஷன் கேட்கணும்." என்றாள். அவனும் சரியென்று விட்டு விட்டான்.

ஒரு வாரம் ஓடி விட்டது. ஓரளவுக்கு ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டாள். அநேகமாக அடுத்த மாதம் தனக்கு வண்டி வாங்கிக் கொடுத்து விடுவான் என்று உற்சாகத்தில் இருந்தாள்.



அதே நேரம்!

"மாலா! இது பாரு! இந்த பெட்ஸ்ப்ரெட் நல்லா இருக்கில்லே?" என்று சொல்லிக் கொண்டிருந்தான் முரளிதரன்.

மாலை நேரங்களில் போய் மாலாவின் வீட்டை ஒழுங்குபடுத்த உதவி செய்தான்.

மாலா அரசாங்க உத்தியோகத்தில் இருந்தாள். அதிலும் லஞ்சம் வாங்குவதற்கு வசதியான அலுவலகம். ஆனால் பத்துப் பைசா வாங்க மாட்டாள்.

மாறாக யாராவது தானாகக் கொண்டு வந்து தந்தாலும் "பாருங்க! எனக்கு ஏதாவது செய்யணும்னு நினைச்சீங்கன்னா உதவும் கரங்கள் அமைப்பு மாதிரி ஏதாவது அமைப்புக்கு செய்ங்க" என்று சொல்லி விடுவாள்.

லஞ்சம் வாங்குவர்களுக்கெல்லாம் அவள் மேல் எரிச்சல். "ஏதோ இவதான் உத்தமி மாதிரி" என்று பேசிக் கொள்வார்கள்.

அவள் அதையும் சட்டை செய்ய மாட்டாள்.

தேவேந்திரன் அவளை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டான்.

அவன் ரியல் எஸ்டேட் தொழிலில் இருந்தான். பெரிய அளவில் செய்து வந்தான்.

இவளது நேர்மையையும் - சுறுசுறுப்பையும் தொடர்ந்து கவனித்து வந்தான். அதுவே அவள் மேல் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது என்று சொல்லலாம்.

அதற்காக லஞ்சம் வாங்குபவர்களைக் குறைவாகவும் பேச மாட்டாள்.

யாராவது அவளிடம் "பாருங்கம்மா அந்த ஆள் இவ்வளவு லஞ்சம் வாங்கறாரு" என்று பேசினால் "பாருங்க எனக்கு அதைப்

பத்திபெல்லாம் தெரிய வேண்டாம். எனக்கு அந்த மாதிரிப் பணம் வேண்டாம். ஆளை விடுங்க" என்று சொல்லி விடுவாள்.

தேவேந்திரனிடமும் இயல்பாகப் பேசுவாள். அவன் அவளைப் பற்றிய விவரங்களையெல்லாம் திரட்டிக் கொண்டான். ஒருநாள் அவளிடம் பேசினான்.

"மேடம்! உங்ககிட்டே பேசணும்" என்றான்.

"என்ன விஷயமாப்!" என்றாள். அப்போதுதான் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள்.

"மேடம். நீங்க எதுவும் வாங்கிக்க மாட்டேங்கறீங்க. அட்லீஸ்ட் ஒரு காபியாவது சாப்பிடக் கூடாதா?"

"சாரி சார்" என்றாள்.

"ஆஸ் எ ஃபிரண்ட் ஒரு காபி சாப்பிடுங்களேன்" என்றான் கெஞ்சுதலாக.

அவன் முகத்தை வைத்துக் கொண்டு நின்ற விதம் பார்த்து அவளுக்குள் புன்னகை மலர்ந்தது.

"ஓ.கே சார். லைட் டிபன். லேட்டாப் போனா எங்க வீட்ல கவலைப்படுவாங்க."

"நான் டிராப் பண்றேன் மேடம்!"

"அதெல்லாம் வேண்டாம். நான் ஆட்டோவில் போய்க்கறேன்."

மாலாவுக்கே வியப்பு எப்பேர்ப்பட்டவர்கள் கூப்பிட்டாலும் நிர்த்தாட்சண்யமாக மறுத்து விடுவாள். ஆனால் இன்றைக்கென்ன இந்த ஆள் அழைத்தவுடன் ஒத்துக் கொண்டோமேயென்று

ஹோட்டலில் தனியறைக்கு அழைத்துச் சென்றான்.

"பிடிச்ச ஸ்வீட் என்ன மேடம்?" என்றான்.

"எது வேண்ணா சொல்லுங்க" என்றாள்.



அவளுக்குப் பிடித்த மக்கன் பேடா ஆர்டர் செய்தான்.

"மேடம். உங்களைப் பத்தின எல்லா விஷயங்களையும் சேகரிச்சு வச்சிருக்கேன். பிடிச்ச நிறம் ரோஸ். புத்தகங்கள் நிறையப் படிப்பீங்க. அடிக்கடி படிக்கிற புத்தகம் "சத்திய சோதனை" ஸெல்ப் டிஸிப்ளின்ட். அப்பா அம்மாவுக்கு ஒரே மகள். ஒரு சகோதரன் ஃபாரின்ல இருக்காரு. வசதிக்கு ஒண்ணும் குறைவு இல்லை. உங்களுக்குன்னு சில கொள்கைகள் இருக்கு. ரொம்ப நேர்மை." என்றான்.

அவள் குபீரென்று சிரித்தாள்.

"சார். பெருசா ஏதோ தில்லு முல்லு பண்ணப் போறீங்கன்னு நினைக்கறேன். ஏதாவது இல்லீகல் ரெஜிஸ்டிரேஷனா? நான் ஒத்து வர மாட்டேன் சார்" என்றாள்.

"மேடம். என் விஷயத்துல எல்லாமே லீகல்தான். சுற்றுவட்டாரத்துல விசாரிங்க. தேவேந்திரனோட டீலிங்கன்னா எல்லாம் பக்காவா இருக்கும்னுதான் பேச்சு" என்றான் சற்றே ரோஷத்துடன்.

அவளும் கேள்விப் பட்டிருந்தாள். "ஆமா சார். கேள்விப்பட்டிருக்கேன். சாரி. நான் சும்மா தமாஷுக்கு சொன்னேன்."

"நோ பிராப்ளம்" என்றான்.

ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டுக் கொள்ள அவன் ரவா ரோஸ்ட் ஆர்டர் செய்தான்.

"என்ன விஷயம் சொல்லுங்க?" என்றாள்.

"மேடம். உங்க அம்மா அப்பாகிட்டே பேசினேன். உங்க பிரதர்கிட்டே பேசினேன். இனி உங்ககிட்டே பேசணும்." என்றான்.

அவள் கேள்விக் குறியாய் பார்த்தாள். "என்ன சார் பேசணும்?" என்றாள்.

"உங்க கல்யாண விஷயமா!" என்றான்.

"வ்வாட்?!" என்று அதிர்ந்து போனாள். அவன் குறும்பாகச் சிரித்தான்.

அவள் ஏதோ பேச ஆரம்பிக்குமுன் அவனே பேசினான்.

"என் கல்யாண விஷயம் பேச நீ யாருப்பான்னு கேட்கறீங்களா? அதை நம்ம கல்யாண விஷயமா மாத்தறதுக்கு வாய்ப்பிருக்கான்னு பார்க்கறதுக்குத்தான்."

அவள் இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அமைதியாக சற்று நேரம் வேறு பக்கம் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"மேடம்" என்றான். குரல் நெகிழ்ந்து போனது.

"ம்." என்றாள்.

"கிட்டத்தட்ட ஒரு வருஷமா உங்களை நான் கவனிச்சிட்டிருக்கேன். சத்தியம் ஓடற இந்த லஞ்சச் சாக்கடையில சிக்கிக்காம... ஒரு மென்மையான பூ மாதிரி நீங்க நடமாடறீங்க. நடைமுறை உலகத்தைப் புரிஞ்சுகிட்டு அதைக் கண்டு ஓடாம ஆனா தன் எல்லைக்குள் தன்னோட கொள்கைகள்ல உறுதியா நிக்கறதே பெரிய விஷயம். அது சாதாரண விஷயமில்லே மேடம். ஐ லைக் இட். அப்புறமாத்தான் ஆல் ஃ பர்ஸனாவும் உங்களை எனக்குப் பிடிச்சிருக்குன்னு புரிஞ்சது" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் பார்வையால் கவரப்பட்டவளாய் சற்று நேரம் நிறைந்த பின் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். அந்தக் கணத்தில் ஏதோ ஒரு உணர்வு மின்னலைப் போல் அவள் மனதில் தாக்கியது.

சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். அவனும் ஒரு விதமான சிரிப்புடன் சுற்று முற்றும் பார்த்தான்.



திரும்பவும் ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள். அவன் சட்டென்று சிரித்தான்.

அவள் குரலே எழும்பாத ஒரு குரலில் கேட்டாள். "எங்க அம்மா அப்பா சரின்னு சொல்லிட்டாங்களா?" என்று.

"ம்! உங்ககிட்டே பேசறதுக்கு பர்மிஷன் வாங்கிட்டுத்தான் பேசறேன்" என்றான்.

"ஓ!" என்றாள்.

"டேக் யுவர் ஓன் டைம் மேடம்! ஒன்னும் அவசரமில்லே!" என்றான்.

அவள் மௌனமாகச் சாப்பிட்டாள்.

"நீங்களா பதில் சொல்ற வரைக்கும் உங்களை டிஸ்டர்ப் செய்ய மாட்டேன்" என்றான்.

உண்மையாகவே அவன் அதற்குப் பிறகு அவளைத் தொல்லை செய்யவில்லை.

அந்த வாரத்திலேயே இரண்டு மூன்று முறை வந்தான். அதற்குள்ளாகவே அவளுக்குப் புரிந்து போனது அவனைத் தனக்குப் பிடிக்கிறது என்று.

அவன் பாட்டுக்கு வருவான். வேலை முடித்து விட்டுப் போவான். வேலை முடிந்தவுடன் அவளிடம் நின்று இரண்டு வார்த்தை பேசி விட்டுப் போவான். பெரும்பாலான நேரங்களில் கையெழுத்துப் போடுகிற நேரத்துக்கு வருவான். மற்ற ஏற்பாடுகளையெல்லாம் அவனுடைய உதவியாளர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

சில நேரங்களில் அவன் காத்துக் கொண்டிருக்க வேண்டி வந்தால் தன்னுடன் வந்திருக்கிறவர்கள் கலகலப்பாகச் சிரிக்கிற மாதிரி ஏதாவது பேசிக் கொண்டிருப்பான். இதையெல்லாம் இப்போதுதான் கவனிக்க ஆரம்பித்தாள்.

ஒருநாளைக்கு வேட்டி சட்டையில் வருவான். மற்றொரு நாள் பேண்ட் சட்டையில் வருவான். எல்லாமே அவனுக்குப் பொருந்தி வந்ததைப் பார்த்துத் தனக்குள் புன்னகைத்துக் கொள்வாள்.

பொதுவாக கம்பீரமாக நடமாடுவான். மற்றவர்களிடம் விசாரித்தாள்.

"தெரியாதா? ஏக்கர் கணக்கிலே டீல் பண்றவரு. பெரிய பார்ட்டி" என்றார்கள்.

அவள் வியந்துதான் போனாள்.

பத்து நாட்கள் போயிருக்கும். அவள் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தபோது அவன் காரோடு நின்று கொண்டிருந்தான்.

அவள் நின்றாள். "இன்னைக்கு ஒரு காபி சாப்பிடலாமா?" என்றான். கண்களில் குறும்பு தெரிந்த மாதிரி இருந்தது.

"ம்." என்றாள். அவன் பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்.

"சரி ஏறுங்க." என்று காரின் கதவைத் திறந்தான். ஏறி அமர்ந்தாள்.

"இங்க பக்கத்துல வேணாங்க. வேற எங்கயாவது போகலாம்" என்றாள்.

"என்னோட ஆபீசுக்குப் போயிரலாமா?" என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"ஹல்லோ! அப்படியெல்லாம் ஒன்னும் கடத்திட்டுப் போயிட மாட்டேன். அங்கயும் மனுஷங்க இருக்காங்க" என்றான். அவள் பயம் புரிந்தவன் போல்.

அவள் முகம் சிவந்தது.

பிரதானமான டி.நகர் ஏரியாவில் தனிக் கட்டிடமாக நவீனமாக இருந்தது.



உள்ளே பத்துப் பேருக்கு மேல் வேலை செய்தார்கள். அவனுக்கென்று சுழல்நாற்காலியுடன் கூடிய அலுவலக அறை ஒன்று இருந்தது. அதைத் தவிர அமர்ந்து பேசுவதற்கெனத் தனியாக அலுவலக அறை ஒன்று இருந்தது. அங்கே அழைத்துப் போனான். அதிலே வசதியாக சோபாக்கள் இருந்தன.

எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள்.

அழைப்பு மணியை அழுத்தினான். வந்த உதவியாளரிடம் பக்கத்து ஓட்டலில் டிபன் வாங்கி வரச் சொன்னான்.

அவள் அமைதியாகச் சாப்பிட்டாள். அதற்குள் அவன் வெளியே போய் ஏதோ சொல்லி விட்டு வந்தான்.

அவனுக்கு அவள் தடுமாற்றத்தில் இருந்தே பதில் தெரிந்தது. லேசான ஒரு எதிர்பார்ப்புடன் சோபாவில் சாய்ந்து அமர்ந்தபடி அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் காபியைக் குடித்து முடித்தவுடன் மெல்லத் தடுமாறியபடி, "என்ன அப்படிப் பாக்கறீங்க?" என்றாள்.

அவன் தன்னை மீட்டுக் கொண்டான். கிறக்கமான குரலில் சொன்னான்.

"பத்து நாளா பதில் சொல்வீங்கன்னு பார்த்தேன். ஒன்னும் பதிலே வர்லை. ஆனா இன்னைக்கு பதில் புரிஞ்ச போச்சு" என்றான்.

"நான் ஒன்னுமே சொல்லலையே!" என்று முணுமுணுத்தாள்.

"வாய் திறந்து பதில் சொல்லலேன்னா என்ன? உங்க முகமே சொல்லிடுச்சே" என்றான் குழைந்த குரலில்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அப்ப ஆரம்பிச்சுர்லாமா?" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

"கல்யாண ஏற்பாடெல்லாம் ஆரம்பிச்சர்லாமா?" என்றான்.

அவள் வேறெங்கோ பாத்துக் கொண்டு தலையாட்டினாள்.

"வேற எதை ஆரம்பிச்சர்லாம்னு சொன்னேன்னு நினைச்சீங்க?" என்று சீண்டினாள்.

"நான் ஒன்னுமே நினைக்கலை. ஆளை விடுங்க" என்று அவள் முணுமுணுத்தாள்.

அவன் சட்டென்று எழுந்து அவளைத் தன்னருகே இழுத்தான். மெல்ல அணைக்க முயல்கையில் அவள் "விடுங்க" என்றபடி விலக.

"இப்ப சொன்னியே இது நியாயம். தொடவே இல்லாதப்ப விடுங்கன்னா அது எப்படி நியாயம்?" என்றான். ஆனால் உடனே விடுவித்து விட்டான்.

அவள் புன்னகைத்துக் கொண்டே விலகினாள்.

அவர்கள் இருவர் முகத்திலும் இது போன்ற உணர்வுகளால் தாக்கப்பட்டவர்களுக்கே இருக்கக் கூடிய வெட்கம் கலந்த மிறு மிறுப்பும், புன்னகையும் மிளிர வெளியே வந்தார்கள்.

அதற்குப் பிறகு எல்லாம் வேகமாக நடந்தேறின.

திருமணம் நடந்தேறியது.

மூன்றாண்டுகள் மகிழ்ச்சியாக மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்தார்கள்.

இரண்டாமாண்டுக்குள்ளாகவே குழந்தை பிறந்தாள். திவ்யா என்று பெயரிட்டான்.

குழந்தைக்கு ஆறுமாதம் இருக்கும் போது இரத்தக் காயங்களுடன் வந்தான். ஆக்ஸிடென்ட் என்றான்.

அவள் பயந்து போனாள்.



பிறகுதான் மெதுவாகச் சொன்னான் தொழிலில் போட்டிக்காரர்கள் யாரோ வேண்டுமென்றே ஆள் வைத்து அடித்து விட்டார்கள் என்று.

இடுப்புப் பகுதியில் அடி. அப்போதே டாக்டரிடம் போய் பார்த்தார்கள். ஸ்கேன் செய்தார்கள். அப்போது எதுவும் பிரச்சினையில்லை என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் நான்கு மாதங்கள் கழித்து இடுப்புப் பகுதியில் திடீரென்று வலி பரவியது.

மருத்துவ மனைக்குப் போனார்கள். உள்ளே ஜீவமைக்காயம் இருந்திருக்கிறது. இரத்தக் குழாய் சேதமடைந்திருக்கிறது என்று இரண்டு மூன்று காரணங்களைச் சொன்னார்கள். யார் என்ன சொன்னால் என்ன ஒரு வயதுக் குழந்தையை அவள் கையில் கொடுத்து விட்டு நெருங்கிய நண்பர்கள் சூழ்ந்து நிற்க அவன் தனது உயிரை விட்டான்.

வாழ்க்கையே வெறுமையாகிப் போனது மாலாவுக்கு. மாலாவின் சகோதரன் வெளி நாட்டில் இருந்ததால் மகனுடன் போய் இருக்க நினைத்த அவளது பெற்றோர்கள் உடன் வந்து இருந்தார்கள்.

தனியாய் இருக்க வேண்டியிருக்கவில்லை. கணவன் வேண்டு மட்டும் சொத்து வைத்துவிட்டுப் போயிருந்தான். ஆனால் அவனில்லாத வெறுமை அவளைச் சுட்டது.

எப்படியோ நாளை ஓட்டி விடலாம் என்றுதான் நினைத்தாள்.

நான்காண்டுகள் ஓடியும் விட்டது. மெதுமெதுவாக நிதர்சனத்தை ஏற்றுக் கொள்கிற பக்குவமும் வந்தது.

அப்போதுதான் அந்தப் பிரச்சினை ஏற்பட்டது. பயந்து போனாள். பெற்றோர்களே அவளுக்கு நேர் எதிராக நின்றார்கள்.

கோபித்துக் கொண்டு சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்து விட்டாள்.

தேவேந்திரனின் நெருங்கிய நண்பர்களில் முரளிதரனும் ஒருவன். கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். அந்த உரிமையில் திருச்சிக்கு வந்து விட்டார்கள்.

முரளிதரனும் தனது முழுமையான ஆதரவைக் கொடுப்பதென்று முடிவு செய்து விட்டான்.

மாலாவும் அவனும் சிரித்துக் கொண்டே வெளியே வந்த போது நேர் எதிரே பல் நிறுத்தத்தில் நின்று அனுவின் கண்களில் முழுமையாகப் பட்டார்கள்.

அதிர்ச்சியும் கோபமும் போட்டியிட கண்களில் நீர் திரள அவள் அவர்களை வெறித்துப் பார்ப்பதை அவர்கள் அறியவில்லை.

## 10

நொறுங்கிப் போய் அழுகிற ஓரகத்தியை ஆழ்ந்த அனுதாபத்துடன் பார்த்தாள் ஷீலா.

நான்கு நாட்களுக்கு முன்புதான் மகிழ்ச்சியாக ஷீலாவிடம் பேசி விட்டுப் போனாள். ஆனால் இன்றைக்கு இப்படி மனமொடிந்து விட்டாளே என்று அவளுக்குள் அனுதாபம் பொங்கியது.

"அக்கா என்னோட பொறந்த வீட்ல போய் இதெல்லாம் சொன்னா ரொம்பக் கேவலமாய்ப் போயிடும்.நான் வேற யாருகிட்டே அழுவேன்" என்றாள்.

"தாராளமா என்கிட்டே சொல்லலாம்மா. நான் யாருகிட்டேயும் சொல்ல மாட்டேன். ஆனா எனக்கென்னமோ தம்பி அப்படியெல்லாம் செய்யற ஆளு மாதிரி தெரியலே. ஏதோ ஒரு கடையிலே



ஒரு பொண்ணு கூட சிரிக்கப் பேசிகிட்டு நின்னா, சேர்ந்து வந்தா, அதுக்காகத் தம்பி மோசம்னு ஆயிடுமா?" என்றாள் ஷீலா.

"அக்கா ரெண்டு பேரும் வாய்கொள்ளாச் சிரிப்போட வெளியே வந்தாங்க. அதுவும் அந்தப் பொண்ணைப் பாத்தா விடோ மாதிரித் தெரியுது. இந்த பாக்யராஜ் படத்துல இப்படித்தானே ஒரு விடோ கூடத் தொடர்பாயிடும். ஒரு விடோவுக்கும் அவருக்கும்" என்றாள் கவலையாக.

ஷீலா சிரித்தாள்.

ஆனா அதே படத்துலதானே அவரு அஞ்சு வருஷம் காத்திருந்து மறுபடியும் அந்த ஹீரோயின் கூட ஒன்னா சேருவாரு" என்றாள்.

அனுராதாவின் கண்களில் மறுபடியும் நம்பிக்கை ரேகை தெரிவதைப் பார்த்த ஷீலாவுக்கு மறுபடியும் சிரிப்பு. தொடர்ந்து சொன்னாள்.

"ஐயோ அசட்டுப் பொண்ணே! நீயா ஏதாவது கற்பனை செஞ்சுகிட்டு அனாவசியமாகக் கவலைப்படாதே!" என்றாள்.

"அக்கா அவரு தகுதிக்கு நான் எந்த விதத்துல சேத்தி. அதான் எனக்குப் பயம்மாவே இருக்கு." என்றாள்.

"இங்க பாரு! உன்னைப் பத்தி தம்பிக்கு எந்தக் குறையும் இருக்கற மாதிரித் தெரியலே. வீட்டைத் துடைச்சத் துடைச்ச கண்ணாடி மாதிரி வச்சிருப்பா எங்காளு. சமையல்னா அவளுதுதான் சூப்பர் சமையல்னு பெருமையாத்தான் சொல்லும்" என்றாள். ஆறுதலாக.

"போங்கக்கா! என்ன இருந்தாலும் அவரு படிப்புக்கு என்று மறுபடியும் ஆரம்பிக்க ஷீலா இடையில் புகுந்தாள்.

"போடி அசடு. நீ வண்டி ஓட்டக் கத்துக்கறேன்னு ஒரே சந்தோஷம். அனு வண்டி ஓட்டக் கத்துகிட்டா நான் ஃப்ரீயாயிடு

வேன். நான் கம்ப்யூட்டர் கிளாஸ் இன்கம்டாக்ஸ் சம்பந்தமா ஒரு டிப்ளமா கோர்ஸ்ன்னு போயிடுவேன்னு சொல்லுச்சு'' என்றாள்.

"பாத்தீங்களா ஃப்ரீயாகறதுலயே இருக்காரு. என்னைக் கழட்டி விடறதுலயே இருக்காரு." என்று மறுபடியும் புலம்பினாள்.

ஷீலா ஒன்றும் பேசவில்லை. தன் கொழுந்தனைக் குறித்து சற்றே பரிதாபம் கூடத் தோன்றியது.

''பாரு அனு. இப்படிப் புலம்பறதுல அர்த்தம் இல்லை. நீ எந்தெந்த விதத்துல அவருக்குத் தகுதியில்லைன்னு நினைக்கறயோ அதையெல்லாம் சரி செய்ய முடியுமான்னு பாரு'' என்றாள்.

''அக்கா போங்கக்கா. இனிமேப் போய் அதை எங்க சரி செய்றது." என்றாள். நம்பிக்கையில்லாமல்.

அப்போதுதான் ஷீலா சில யோசனைகளைச் சொன்னாள்.

"யோசி அனு. சும்மா புலம்பறதுல ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆனா ஒன்னு சொல்றேன். எடுத்தேன் கவுத்தேன்னு சண்டைக்கு நிக்காதே. ஏன்னா அதுல உண்மையில்லன்னு வச்சுக்க. தம்பி ரொம்ப சீரியஸாக் கோபப்பட்டுரும். உண்மையிருந்ததுன்னு வச்சுக்க துளிர் விட்டுப் போகும். அதான் தெரிஞ்சு போச்சே. இனி என்ன பயம்னு ஆயிரும். மனிதன் வெட்கம் பாக்காத விஷயங்கள்ல இதுவும் ஒன்னு. அதனால நான் சொல்ற மாதிரி தயாராயிக்க.'' என்றாள்.

அனு வீட்டுக்குத் திரும்ப நடக்கும் போது யோசித்துக் கொண்டே நடந்தாள்.

✤ ✤ ✤

''ஹலோ! முரளி இருக்காரா?'' என்றது பெண்குரல்.

''நீங்க...?''



''நான் கிறிஸ்டினா பேசறேன். அவரு வந்தா... நான் கூப்பிட்டேன்னு சொல்லுங்க. நீங்க யாரு...?''

''நான் அவரு வைஃப்'' என்றாள்.

''ஓ! ப்ளீஸ்... மறக்காம சொல்லுங்க. நான் நாளைக்கு நான் அவரை ரொம்ப எதிர்பார்க்கறேன்னு சொல்லுங்க."

அனு ஒன்றும் பேசவில்லை. பொட்டென்று வைத்தாள்.

"ஆமாடி. நாங்க இங்க வீட்ல இருந்துகிட்டு நொந்து நூலாயிட்டிருப்போம். அங்கே நீங்க காத்துகிட்டிருப்பீங்க.'' என்று கடுப்பானாள்.

இது நடந்து மூன்று நாட்களாகியிருக்கும்.

ஷீலாவிடம் போய் எல்லாவற்றையும் கொட்டிவிட்டு வந்ததற்குப் பிறகு ஒருமாதம் ஓடியிருந்தது.

பிற்பகலில் நேரங்களில் பக்கத்திலிருக்கிற ஒரு லைப்ரரியில் போய் புத்தகங்களை எடுத்து வந்து படிக்க ஆரம்பித்திருந்தாள்.

மாலையில் மகனைக் கொண்டு போய் ட்யூஷனுக்குக் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து ஓவிய வகுப்புக்குப் போவாள்.

தஞ்சாவூர் பெயிண்டிங் ஒன்று வரைந்தாள். ஆலிலைக் கண்ணன் அழகாகச் சிரித்துக் கொண்டு இருந்தான்.

அதைப் பார்த்தவுடன் அன்றைக்கு மட்டும் முரளிதரனிடம் அவனிடம் சற்று மகிழ்வாகப் பேசினான்.

''நல்லா வந்திருக்கு அனு...'' என்றான்.

''குடு... நான் போய் அம்மா அப்பாகிட்டே போய் காட்டிட்டு வரேன்" என்றவன் மீண்டும் ஏதோ நினைத்துக் கொண்டவன் போல்.

"ஹேய். அனு உன்னோட வண்டியில கூட்டிட்டுப் போயேன்." என்றான்.

"டபுள்ஸா. பயமா இருக்குங்க" என்றாள் தயக்கத்துடன்.

ஒன்னும் பயப்படாதே அனு. நான்தான் பின்னாலே உட்கார்ந் திருக்கனே பாத்துக்கறேன்."

அவளும் பயத்தோடயே அனுமதித்தாள்.

அடுத்த தெருதானே என்று சற்று தைரியமாகவே ஓட்டினாள். அவள் போய் வண்டியை நிறுத்தியவுடன் அவன் வேகமாக ஹார்ன் அடித்தான்.

அம்மா என்னவோ ஏதோவென்று வந்தாள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டு இறங்கினான்.

"பாத்தியாம்மா. உன்னோட மருமக... வண்டியில கூட்டிட்டு வந்திருக்காப்ல" என்றான். ஒரே கலாட்டா செய்தான்.

அம்மா சிரித்தாள்.

உள்ளே போனதற்குப் பிறகு "அம்மா இன்னொரு அதிசயம்... பாரு... டன்டடய்ங்" என்று குரல் கொடுத்தபடி திரையை விலக் கினாற் போல் கட்டுக்குள் இருந்து எடுத்து ஓவியத்தைக் காட்டினான்.

அம்மாவும் அப்பாவும் மகிழ்ந்து போனார்கள்.

"நம்ம வீட்ல வச்சுக்கறோம்ப்பா." என்று ஆசையாய்க் கேட்க அவன் தயக்கத்துடன் அனுவைப் பார்க்க அவள் அவள் கையில் இருந்து வாங்கி மாமியாரின் கையில் கொடுத்தாள்.

"ஹேய் அனு உங்கிட்டயும் மேட்டர் இருக்கு!" என்று குஷியாக இருந்தான்.

"சரி. சரி. அதுக்குன்னு சும்மா... மீட்டர் போடாதீங்க" என்றாள்.

"மேட்டர். மீட்டர். அட்றா சக்கை" என்று வெடிச் சிரிப்பு சிரித் தான்.

அடுக்களைக்கு வந்தான். இரண்டு மாதங்களுக்குப் பிறகு இன்றைக்குத்தான் சீண்டி விளையாடினான்.



"மணி எட்டாச்சு... பையனை ட்யூஷன்ல இருந்து கூட்டிட்டு வரணும்" என்றாள்.

"சரி நான் போய்க் கூட்டிட்டு வர்றேன். நீ அதுக்குள்ளே டிபன் ரெடி பண்ணு" என்று போனான்.

உள்ளே நுழையும் போதே குமரன் "அப்பா மிஸ் நாளைக்கு எல்லா நோட்டுக்கும் அட்டை போட்டுட்டு வரச் சொல்லியிருக்காங்க" என்றான்.

பையனோடு சமமாக அமர்ந்து அட்டை போட்டுக் கொடுத்தான். லேபிள் ஒட்டிக் கொடுத்தான்.

"அப்ப இந்த ராணி இல்லே.... எங்க கிளாஸ்ல? எப்பப் பாரு என் கூட சண்டை போடறாப்பா."

"அப்பா அடுத்த வாரம் எங்க ஸ்கூல்ல பாட்டுப் போட்டி நடத்தறாங்க." என்று அவனுக்குச் சொல்வதற்கு நிறைய இருந்தது.

சளசளவென்று பேசிக் கொண்டே இருந்த குழந்தையிடம் பேசிக் கொண்டே அவனும் காரியங்கள் செய்தான்.

கட்டிலில் சாய்ந்து கொண்டே அமர்ந்து குழந்தையை மடியில் சாய்த்துக் கொண்டே உறங்கச் செய்தான்.

ஆழ்ந்து உறங்கியபின் கட்டிலில் படுக்க வைத்து விட்டு மனைவியைத் தேடி வந்தான்.

அனுராதா பாத்திரங்களை ஒழுங்குபடுத்தி விட்டு சமையல் மேடையைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"ஹேய் அனு அசத்தறடி. வண்டி வேற ஸ்மார்ட்டா ஓட்டறே. ஓவியம் வேற. குட். குட்" என்று பின்னாலிருந்து கட்டிக் கொண் டான்.

"ஐயோ என்ன இது விடுங்க. கையெல்லாம் அழுக்கு." என்று அவன் விலக அவள் மௌனமாக வேலையை முடித்து விட்டு வந்தாள்.

"வா வா சீக்கிரம் வா" என்று தலையணையை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டு தாளமிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அனுவுக்கும் அவன் ஆர்வம் புரிந்திருந்தது. தயக்கத்துடன் தான் போனாள்.

கவனமாக எதுவும் பேசுவதைத் தவிர்த்தாள். ஆனாலும் உள்ளே ஒரு வருத்தம் இருந்து கொண்டே இருந்தது.

அன்றைக்குக் கடைத்தெருவில் ஒரு பெண்ணோடு பார்த்தாளே அது யார் என்று இதுவரையிலும் சொல்லவில்லை.

யதார்த்தமாக விளக்கம் சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் இன்றைக்குத் தன்னிடமும் கொஞ்சுகிறாரே என்று அவளுக்கு உள்ளூர வருத்தம். ஆனாலும் பல நாட்களுக்குப் பிறகு இயல்பாகவும் பிரியமாகவும் இருக்கும் அவனை ஏமாற்றவும் மனம் வரவில்லை.

"ஹேய் அனு! ஈவ்னிங் டைம்ல ஒரு கோர்ஸ் சேர்ந்திருக்கேன். அதான் வீட்டுக்கு சீக்கிரம் வர முடியறதில்லே" என்றான்.

அவள் எதுவும் பேசவில்லை.

"இப்பவே இன்கம்டாக்ஸ் மேட்டர்ல நான் எக்ஸ்பர்ட்ன்னு எல்லாம் சொல்றாங்க அதிலயே ஸ்பெஷலைஸ் பண்ணி ஒரு கோர்ஸ் எடுத்துக்கறேன்" என்றான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள்.

"தலையை நல்லா ஆட்டு. தஞ்சாவூர் பொம்மை மாதிரி" என்று சிரித்தான் அருகில் இழுத்தான்.



இரண்டு மாதப் பிரிவின் ஏக்கத்தையும் சேர்த்து வைத்திருந்தாற் போல் உணர்வுகளையெல்லாம் கொட்டினான்.

அனுராதா கொஞ்சம் திணறித்தான் போனாள். எப்போதும் போல் ஆழ்ந்த அமைதியில் அனுராதாவைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

அனுராதா மெல்லக் கண்ணயர்கிற நேரம் போன் மணியடித்தது. எடுத்தான்.

"ஹல்லோ கிறிஸ்டினா என்னம்மா?" என்றான் அன்பொழுக.

அனுராதாவிற்கு திக்கென்றிருந்தது. என்ன இந்தப் பொம்பளை நேரங்காலம் இல்லாம போன் பண்றா என்று எண்ணிக் கொண்டாள்.

கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அந்தப் பக்கம் அவள் என்ன சொன்னாளோ தெரியவில்லை.

"ம்... ம்" என்று மட்டும் பதில் சொன்னான். கடைசியாக.

"இங்க பாரும்மா! என்னைக்கிருந்தாலும் இல்லைன்னு ஆயிடப் போறதில்லே. அனுசரிக்கப் போனீன்னா நல்லது. லைஃப் நல்லா இருக்கும்" என்றான்.

அனுராதா மூச்சுவிடவும் பயந்தவள் போல் கவனித்துக் கொண்டு படுத்திருந்தாள்.

"அப்படித்தாம்மா இருக்கும். அட்ஜஸ்ட் பண்ண வேண்டியது தான்... அதுசரி. இப்ப என்ன? நாளைக்கு உங்க வூட்டுக்காரன் வேற வந்தர்றான். இனிமே நான் தேவையில்லே. ஆளை விடு" என்று சிரித்தான்.

அனுராதாவுக்குக் கோபம் பொங்கியது. மனைவியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகிறாரே என்று கோபம் பொங்கியது.

தன் மீதே வெறுப்பானது.

சட்டென்று எழுந்தாள். பாத்ரூமுக்குள் நுழைந்து தலையோடு தண்ணீரை ஊற்றிக் கொண்டாள்.

வெளியே வரும்போது அவன் கட்டிலில் அமர்ந்து கொண்டு ஏதோ புத்தகம் புரட்டிக் கொண்டிருந்தான்.

"என்ன அது? திடீர்க் குளியல்." என்றான்.

"இல்லே திடீர்னு குளிக்க வேண்டியதாப் போச்சு." என்று ஹாலில் பாயை விரித்துப் படுத்தாள்.

"ஏன் அனு?" என்று அவன் வர அவளுக்கு எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை.

"இல்லே. இரண்டு மூனு நாளைக்கு இங்கதான்" என்றாள்.

அவன் இயல்பாகவே எடுத்துக் கொண்டான்.

"ஓ சரி" என்று உள்ளே போய் படுத்துக் கொண்டான்.

சற்றுக் கழித்து "அனு இந்தக் கிறிஸ்டி இல்லே. ரொம்ப அழகான பொண்ணு." என்று ஏதோ சொல்ல அவள் ஆழ்ந்து உறங்குவதைப் பார்த்தவுடனே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

◆ ◆ ◆

"என்ன தம்பி சாப்பாடு கொண்டு வர்லையா?" என்று கேட்டார் வீராசாமி.

"இல்லைங்க. வீராசாமின்னே! இன்னைக்கு அனுவுக்கு உடம்பு சரியில்லை. நான் ஓட்டலுக்குப் போறேன்" என்று நகர்ந்தான்.

"டேய் வாடா இங்கயே ஷேர் பண்ணலாம்" என்று அழைத்தான் கண்ணன்.



"இல்லடா வேண்டாம். நீங்களும் சாப்பிட்ட மாதிரி இருக்காது. நானும் சாப்பிட்ட மாதிரி இருக்காது. ஒரு நாள்ல என்னடா ஆயிடும். நான் வெளிய சாப்பிட்டுக்கறேன்" என்று புன்னகைத்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.

பைக் சாவியைச் சுழற்றிக் கொண்டே வெளியே வரவும் கண்கள் ஆச்சரியத்தில் மலர்ந்தன.

அனுவின் வண்டி வந்து நின்றது.

"ஹேய்! அனு!" என்றான் வாய்கொள்ளாச் சிரிப்புடன்.

"இல்ல மாமா! உங்களுக்கு ஹோட்டல் சாப்பாடு பிடிக்காதே. அதான் சிம்பிளா சாப்பாடு கொண்டு வந்தேன்" என்றாள்.

"ஓ.கே. ஓ.கே. எதுன்னாலும் சரி. என்ன ஐட்டம்?"

"சாம்பார் சாதம். தயிர் சாதம். காய் மட்டும் இல்ல. அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க."என்றாள்.

"அது ஒன்னும் பிராப்ளம் இல்லே. இப்பத்தான் கண்ணன் கூப்பிட்டான். காய் மட்டும் ஷேர் பண்ணிக்கறேன்" என்றான்.

"நான் கிளம்பறேன்" என்று வண்டியைக் கிளப்ப, அவன் உள்ளே போனான்.

திரும்பவும் உள்ளே நுழையவும் கண்ணன் கேட்டான்.

"என்னடா சாப்பாடு வர்லேன்னே?"

"அனு வண்டியில கொண்டு வந்து கொடுத்தாப்ல" என்றான் பெருமையாக.

"பரவாயில்லை. உங்க வீட்டு மேடம். வண்டி வேற ஓட்டிப் பழகிட்டாங்களா?"

"ஆமா! இப்ப அவளே பையனை ஸ்கூல்ல கொண்டு போய் விட்டர்றா. எனக்கு அந்த வேலையும் மிச்சம்" என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

அனுராதா வண்டியைக் கிளப்பு முன்னர் அவளிடத்தில் போய், "அனும்மா. நான் உங்ககிட்டே பேசனும். எப்ப வீட்டுக்கு வரட்டும்? ஆனா - தம்பில்லாத நேரமா சொல்லுங்க" என்று வீராசாமி பேச்சு வார்த்தை நடத்தி விட்டு வந்திருப்பதையும் அதனால் நேரப் போகிற விபரீதங்களையும் அவன் அப்போது அறியவில்லை.

## 11

அந்தத் தெரு வழியாகப் போயிருக்கவே வேண்டாம் என்று இப்போது கூட வீராசாமி நினைத்துக் கொள்வார்.

போன மாதத்தில் ஒரு நாள்!

ஒரு ஏழுமணிவாக்கில் அந்தத் தெருவில் போய்க் கொண்டிருந்தார்.

எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தபோது அந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான் முரளிதரன். அதுவும் ஒரு குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு.

வித்தியாசமாகக் காட்சியளித்த விஷயம் என்னவென்றால் ஏதோ தன் வீட்டில் இருப்பது போல் வெறும் பனியனோடு மேல் சட்டை போடாமல் நின்று கொண்டிருந்தான்.

அந்தப் பெண் கையிலே அவன் சட்டையை வைத்துக் கொண்டு உதறிக் கொண்டு நின்றிருந்தாள். இருவரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சாதாரணமாக நின்றிருந்தாலும் கூட வீராசாமி பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார். ஏதோ சொந்த வீட்டில் நிற்கிற மாதிரி நிற்கிறாரே என்று மனத்துக்குள் வருத்தமாகிப் போனது.



அந்தப் பெண்தான். அன்றைக்கு ஸ்டேஷனில் பார்த்தாரே அதே பெண்தான்.

வீராசாமி கொஞ்சம் கவலையானார்.

முரளிதரன் மிகவும் நல்லவன் என்று அவன் மேல் மிகவும் அன்பு, பிரியம். ஆனால் இப்போது நிஜமாகவே ஏதோ வழி மாறுகிற மாதிரித் தோன்றுகிறதே என்று எண்ணிக் கொண்டார்.

"சேச்சே! உடனே முடிவு கட்டி விட முடியாது" என்றும் எண்ணிக் கொண்டார் எதுக்கும் தொடர்ந்து கண்காணிப்போம் என்று முடிவு கட்டிக் கொண்டார்.

* * *

அந்த வாரமெல்லாம் தொடர்ந்து கண்காணித்தார். தினமும் அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய்விட்டுத்தான் அதுவும் எட்டு மணிக்கு மேல்தான் வீட்டுக்குப் போனான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு தொடர்ந்து போவதை விட்டுவிட்டார். அவ்வப்போது இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறை போனான்.

ஒரு மாதத்திற்குப் பிறகு அடிக்கடி போவதை விட்டு விட்டான். எப்போதோ போகிறார் போலும் என்று எண்ணியவர் அதற்குப் பிறகு கண்காணிப்பதை விட்டுவிட்டார்.

"வீராசாமியண்ணே! இன்னைக்குக் கிளாஸுக்குப் போகனும்" என்று சொல்லிக் கொண்டிருப்பான். சரி. ஏதோ கிளாஸுக்குப் போகிறான் போலும் என்றெண்ணிக் கொண்டு தனது முயற்சியை விட்டு விட்டார்." அதுசரி அந்தச் சாப்டர் முடிஞ்ச போச்சு போல இருக்கு. நாமளே எதுக்குப் பிரச்சினையைக் கிளப்பனும்" என்றெண்ணிக் கொண்டார்.

இடையில் ஒரு மாதம் கழிந்தவுடனே மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறினாற்போல் மறுபடியும் ஒரு பெண்ணோடு பார்த்தார்.

இந்தப் பெண்ணைப் பார்த்தால் கிறிஸ்தவப் பெண்ணைப் போல் தெரிந்தது.

போனவாரத்தில் இது பற்றி வெகுவாக யோசித்து தெளிவாக ஒரு முடிவுக்கு வந்தார்.

அனுராதாவிடம் சொல்லி விட வேண்டியது என்ற முடிவுதான் அது. அதற்குப்பிறகு தனது சொத்தைக் காப்பாற்றிக் கொள்ள அந்தப் பொண்ணுதான் முடிவெடுக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

❖ ❖ ❖

முரளிதரன் சிந்தனையிலேயே இருந்தான். அலுவலக வேலை பாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் உள்ளே சிந்தனை ஓடிக்கொண்டே இருந்தது.

நேற்றிரவு!

திடீரென்று அனு தனக்கு உடம்பு சரியில்லையென்று படுத்துக் கொண்டது நினைவுக்கு வந்தது.

அவள் அப்படிப் போய் படுத்துக் கொண்டது முதலில் அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. சற்றுக் கழித்து எதற்காகவோ வெளியில் வந்தான்.

வழக்கமாக வீட்டுக்கு விலக்காகிற நாட்களில் பயன்படுத்துவதற்கென்றே ஒரு படுக்கை வைத்துக் கொண்டிருப்பாள். ஒவ்வொரு முறையும் சுத்தமாகத் துவைத்து எடுத்து வைத்துக் கொள்வாள். அதற்கென்று ஒரு இடமும் ஒதுக்கி வைத்திருந்தாள்.

இன்றைக்கு அந்தப் படுக்கை அதனுடைய இடத்திலேயே இருந்தது.

அவனுக்குள் ஏதோ உறுத்தியது.



ஹாலில் ஏதோ ஒரு படுக்கையிருக்க அதிலும் அவளைக் காணவில்லை.

மெல்ல எட்டிப் பார்த்தான்!

சமையலறையில் கால்களில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள். ஆனால் சத்தம் வராமல்.

முதுகு குலுங்குவது தெரிந்தது.

அவன் திகைத்துப் போய் நின்றான்.

ஒருவேளை கிறிஸ்டியிடம் பேசியதைக் கேட்டிருப்பாளோ?

அப்படித்தான் இருக்கும்!

அவன் குற்ற உணர்வுடன் திரும்பவும் வந்து படுக்கையில் படுத்துக் கொண்டான்.

அதனால்தான் காலையில் கூட "ரெஸ்ட் எடு" என்று சொல்லி விட்டு வந்தான். ஆனால் பகல் சாப்பாடு கொண்டு வந்து நிற்கிறாள்.

பகல் சாப்பாடு பரிவினால் கொண்டு வந்தாளோ? இல்லை. அலுவலகத்தில்தான் இருக்கிறானா என்று பார்ப்பதற்குக் கொண்டு வந்தாளோ?

மாலா. கிறிஸ்டினா இவர்களிடம் தனக்கு இருக்கிற நட்பைச் சொல்லி விடலாமா என்று நினைப்பான். ஆனால் மறுநிமிடமே மாற்றிக் கொள்வான்.

"ஐயோ நல்ல நாள்லயே தில்லை நாயகம். இப்ப இந்த மாதிரித் தொடர்பெல்லாம் சொன்னா திடீர்னு ஏதாவது தூக்கில தொங்கினாலும் தொங்கிடுவா" என்று எண்ணிக் கொண்டான்.

அன்று மாலை!

சகோதரன் வீட்டிற்குப் போகலாம் என்று போனான். ஒரு நல்ல செய்தி காத்திருந்தது.

சசிதரன் அவனைக் கண்டதும் உற்சாகமானான்.

"டேய்! முரளி! உன் வீட்டிற்கும் வரலாம்னு இருந்தேன். நீயே வந்துட்டே!" என்றான்.

"டேய் உன் வைஃப் வரைஞ்சாப்ல இல்லே... அந்த ஓவியம் அது எங்க முதலாளி வைஃப்க்கு ரொம்பப் பிடிச்சது. விலைக்குக் கேட்கறாங்க" என்றான்.

முரளிதரன் மகிழ்ச்சியானான்.

"அப்படியா என்ன? ஆனா அனு எப்படி எடுத்துக்குவாளோன்னு தெரியல. அதுவும் அம்மா அப்பாவுக்குன்னு அவ பிரஸன்ட் பண்ணினது" என்றான்.

"நல்ல விலை குடுக்கறேங்கறாங்க" என்றான் சசிதரன்.

"அம்மா அப்பாகிட்டே கேட்டேன். தாராளமா குடுங்கப்பா. அனு கிட்டே சொல்லி அதே மாதிரி வேற ஒன்னு வரைஞ்சு குடுக்கச் சொன்னாப் போச்சுங்கறாங்க."

"அப்படியா...என்ன? எவ்வளவுக்குக் கேட்கறாங்க?"

சசிதரன் தொகையைச் சொன்னான். முரளிதரன் குடும்பமே மகிழ்ந்து போனது.

"இவ்வளவு விலைக்குப் போகுமா என்ன?" என்று ஆச்சரிய மானான்.

"போகுதே! அதுவும் எங்க ஓனரோட வைஃப்புக்கு இந்த மாதிரிப் பொருட்கள் வாங்கறதுல ஆர்வமுள்ள ஃபிரண்ட்ஸ் நிறையப் பேர் இருக்காங்களாம். அவங்களும் லைக் பண்ணுவாங்க அப்படீங் கறாங்க" என்றான்.

"ஓஹோ இப்படி ஒரு வாய்ப்பு அனுவுக்குக் கிடைச்சா நல்லது தானே? ஆனா எதுக்கும் இந்த பர்ட்டிகுலர் பீஸ் குடுக்கறது மட்டும் அனுகிட்டக் கேட்டுக்கலாம்" என்றான்.



"இந்தா... இந்த அமௌன்டைக் காட்டு. அப்புறம் முடிவு செய் யட்டும்." எனவும் அந்த நோட்டுக் கட்டை வாங்கிக் கொண்டான்.

"அனு! அனுக் குட்டி" என்று கூவிக் கொண்டே போய் அவளைக் கட்டிக்கொள்ள அவளோ "விடுங்க" என்று விலகினாள்.

"ஹேய்! இத பாரு. நீ வரைஞ்ச ஓவியத்துக்கு விலை வந் திருக்கு. அண்ணனோட முதலாளிம்மா இவ்வளவு விலை ஆஃபர் பண்றாங்க..." என்று நோட்டைக் காட்டினான்.

உண்மையாகவே திகைத்துப் போனாள்.

"நிஜம்மாவா?! ஐயோ! அத்தை மாமாவுக்கு பிரசன்ட் பண்ணியதாச்சே" என்றான்.

"அவங்களே சரின்னுட்டாங்க. அவளோட வொர்க்கு மதிப்பு கிடைக்குதுன்னா அதுதான் முக்கியம். எங்களுக்கு வேண்ணா இதேமாதிரி ஒன்னு அவ செஞ்சு குடுக்கட்டும். அதுவும் அவளுக்கு ஃப்ரீ டைம் கிடைக்கும்போது. அப்படீங்கறாங்க" என்றான்.

அவன் முகம் மலர்ந்தது.

"சரிங்க" என்றாள்.

"இந்தா இதை நீயே வச்சுக்க" என்று நீட்டினான்.

"ஐயோ. என்னங்க இது! என் பணம்னு பிரிச்சுப் பேசறீங்க" என்றாள்.

"பிரிச்சுப் பேசலே. இது உன் கலைப் படைப்புக்குக் கிடைச்ச பாராட்டு. அது உனக்குச் சேர வேண்டியது நியாயம். உனக்குன்னு ஒரு அக்கவுண்ட் ஆரம்பிச்சு அதுல போட்டர்றேன். அடுத்த வொர்க்குக்குத் தேவையான பொருள் நீ வாங்கிக்கலாம். இப்படி வர்ற பணத்தையெல்லாம் நீயே வச்சுக்க" என்றார்.

"ம்ஹூம் உங்களுதுதான்" என்று தயங்க அவன் புன்னகைத் தான்.

"சரி பையனுக்கும் எனக்கும் ஏதாவது ஒரு சின்ன கிஃப்ட் வாங்கித் தரலாம் ஒ.கேவா? தெரியும்டி. நீ அன்னைக்கு ஒரு ரேடியோ மாடல் செஞ்சியே அப்பவே நினைச்சேன். உனக்கு இந்த மாதிரித் திறமையெல்லாம் இருக்குன்னு." என்று மறுபடியும் அருகில் இழுத்துக் கொண்டான்.

"விடுங்க. பையனைக் கூட்டிட்டு வரணும்" என்று முணு முணுத்தாள்.

பையனை தரணி கூட்டிட்டு வருவான்டி" என்று சற்று நேரம் சீண்டிக் கொண்டிருந்தான்.

அவளும் இடம் கொடுத்தாள். ஆனால் உள்ளே மட்டும் வீரா சாமி போட்டுக் கொடுத்த விஷயங்கள் எல்லாம் ஓடிக் கொண் டிருந்தது. ஒரு பக்கம் உள்ளம் எரிமலை போல் கொதித்துக் கொண்டிருந்தது.

அன்றைக்கு மாலை!

"அம்மா! தம்பி ஆபீஸ்ல இருக்கு. பர்மிஷன் கேட்டுட்டு வந்தேன்" என்று மாலா வீட்டில் வைத்து முரளிதரனைப் பார்த்ததை விவரித்துச் சொன்னார்.

அனுராதாவின் கண்களில் கண்ணீர் கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

"ஒரு மாசம் தீவிரமாப் போயிட்டு வந்திட்டிருந்தாரு. அப்புறம் குறைஞ்சிடுச்சு." என்றார்.

"ஆமா. இப்ப வேற ஏற்பாடு போல இருக்கு." என்று முணு முணுத்தாள்.

"ஓ!"



"ஆமா! யாரோ பத்து நாளைக்கு முன்னாடி கிறிஸ்டினான்னு போன் பேசினாங்க. நேத்திக்கு நைட் நேரங்காலம் பாக்காம அந்தப் பொம்பளை பேசுது. இவரும் குழைஞ்சு குழைஞ்சு பேசறாரு. இது என்ன வாழ்க்கைன்னு இருக்கு..." என்றாள். தேம்பினாள்.

"அம்மா அவசரப்படாதீங்க. அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போறதை நிறுத்தின மாதிரி இதுவும் நின்னு போகும். ஆனா நீங்க கொஞ்சம் கண்டிக்கப் பாருங்கம்மா." என்றார்.

"ஐயோ நீங்க வேற. நான் கண்டிக்கப் போய் அப்படித்தான்னு சொல்லிட்டா.... என்ன செய்ய? ஏதோ இப்பவாவது தெரிஞ்சும் தெரியாமலும் போக்குவரத்து இருக்கு. அப்புறம் சுத்தமாக் குளிர்விட்டுப் போயிடும்" என்றாள்.

"அதுவும் அப்படித்தான்."

"அதுவும் இல்லாம நான் எங்கம்மா வீட்டுக்குப் போய் உட் கார்ந்து கிட்டா... அவங்களுக்குக் கேவலமாப் போயிடும். கொண் டான் கொடுத்தான் வீட்ல எல்லாம் கேவலமாப் பேசுவாங்க" என்றாள்.

"அதுவும் அப்படித்தான்" என்றார் வீராசாமி குழப்பத்துடன்.

"நடக்கட்டும். நடக்கட்டும். எல்லாத்துக்கும் ஒரு முடிவு வந்துதானே ஆகணும்" என்றாள் வெம்பிய மனதுடன்.

"ஆமம்மா. ஆண்டவன் துணையிருப்பான். கவலைப்படாதீங் கம்மா." என்று ஆறுதலும் சொல்லிவிட்டுப் போனார்.

புகைந்து கொண்டே இருந்தாள்.

நேர்மாறாக இன்றைக்கு வந்து இப்படிக் குழையடிக்கிறானே என்றும் இருந்தது.

* * *

"அண்ணா நிஜமாவா? சின்ன அண்ணி வரைஞ்ச பிலாக்கு இவ்வளவு வரவேற்பா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான் தரணிதரன்.

"ஆமாப்பா" என்றார் அம்மா.

"ஐயய்யோ அசத்தறாங்க" என்றான்.

"ஏன்னா. நான் எப்ப இப்படி என் வைஃபைப் பத்தி பெருமையாப் பேசறது?" என்றான் சந்தடி சாக்கில்.

சசிதரனும் முரளிதரனும் சிரித்தார்கள்.

"அலையாதடா. அது பத்தின ஏற்பாடு பத்தித்தான் அம்மா அப்பாகிட்டே இப்பப் பேசிகிட்டிருக்கோம்" என்றான் முரளிதரன்.

"ஓஹ்! அண்ணா சும்மா சொன்னேன். இன்னும் கொஞ்ச நாள் ஃப்ரீயாய் இருந்துக்கறனே!" என்றான்.

"இல்லடா. இது ரைட் டைம். ஒரு பொண்ணு மனசிலே வச்சிருக்கேன். உன் டேஸ்ட்டுக்குத் தகுந்த மாதிரி இருக்கும்னு நினைக்கிறேன்."

"ஆமாப்பா. இவனுக்கும் முடிச்சர்லாம்" என்றார் அப்பா.

உற்சாகமாக அம்மா அப்பாவிடம் பேசி விட்டுக் கிளம்பும்போது மணி பதினொன்றாகி விட்டது.

"அனு. அடுத்த காண்டம் ஆரம்பம்" என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தான். அவளோ ஆர்வமே இல்லாமல் பார்த்தாள்.

இத்தனை நேரம் எங்கெங்கே அட்டெண்டென்ஸ் குடுத்துட்டு வர்றாரோ என்று குமுறிக் கொண்டிருந்தாள்.

"என்ன அனு?" என்றான்.

அனு "தலையை வலிக்குது" என்றாள்.

அவன் இயல்பாகத்தான் எடுத்துக் கொண்டான்.



"ஓ.கே. டா. தூங்கு!" என்று சொல்லி விட்டு அவன் டி.வி. பார்க்க அமர்ந்து விட்டான்.

அனு தீவிரமாக யோசிக்க ஆரம்பித்து விட்டாள்.

இவருக்குத் தெரியாமல் இதை ஆராய்ந்து பார்த்து விட வேண்டியதுதான்.

என்றைக்கிருந்தாலும் தனக்கு வேட்டு வைக்கப் போகிறவர் தானே என்று கோபம் பொங்கியது.

"சரி. பொறுத்தது. பொறுத்தாயிற்று. இன்னும் ஒரே ஒரு முறை ஏதாவது பேர் அடிபட்டால் கூட விலகி விட வேண்டியதுதான். உயிர் வாழ்வதற்கு வழியில்லாமலா போய் விடும். நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்தாவது பிழைத்துக் கொள்ள வேண்டியது தான். இல்லாவிட்டால் இந்த ஓவியம் கீவியம்னு ஏதாவது செஞ்சு பிழைச்சுக்க வேண்டியதுதான்" என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

மனதில் தெளிவு ஏற்பட்டது.

## 12

"நீ என்ன வேண்ணா சொல்லு. எங்க வீட்டுக்காரரு முசுடு தான். கோபக்காரர்தான். ஆனா என்னைத் தவிர வேற யாரையும் நினைக்கக் கூடப் பாக்க மாட்டாரு." என்றாள் ஷோபனா. அனுராதாவின் அக்கா.

"ஆமா நினைச்சா மட்டும் நடக்குமாக்கும். வர்ற வருமானம் வீட்டுச் செலவுக்கே பத்தாது. ஒரு வீட்டை ததிகிணத்தோம் தாளம். இதுல ரெண்டு வீட்டுக்கு வழியேது." என்றாள் ரேகா.

"அதில்லடி... பாயின்ட்... காசே இருந்தாலும் அப்படி யெல்லாம் நடந்துக்க மாட்டாருன்னு சொல்றேன்" என்றாள் ஷோபனா.

இத்தனைக்கும் அனுராதா தன் சகோதரிகளிடம் தன்னுடைய பிரச்சினையைச் சொல்லவேயில்லை.

வராகசாமி கதையை ரேகாவின் நாத்தனார் சொன்னதைத்தான் சொன்னாள். அதற்குத்தான் இந்தப் பட்டிமன்றம் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

"அனுக்கா... அந்தம்மா சொல்றதை வச்சு நீ சீரியஸாகாதே. யாராவது நல்லாப் பொழச்சாலே அந்தம்மாவுக்குப் பொறுக்காது. காது வழியாப் புகை வர ஆரம்பிச்சுடும். நம்ம அம்மா ஏதாவது உங்க வீட்டுக்காரரைப் பத்திப் பெருமையா சொல்லியிருக்கும்" என்றாள் ரேகா.

"சரி. வராகசாமி ஏன் துரோகம் செஞ்சாரு. குழந்தை வேணுங் கறதால. ஆனா முதல் சம்சாரத்தைக் கைவிட்டாரா? இல்லையே? ரெண்டாவது சம்சாரத்துகிட்டே எல்லா விவரமும் சொல்லித் தானே இருக்காரு. ஏன். இப்படி யோசிங்களேன். இந்தம்மா கூட இருக்கனும்கறதுக்காகத்தானே குழந்தைகளைக் கூட அப்பப்பப் போய்ப் பாத்துட்டு வந்திருக்காரு. அவரு இறந்ததுக்கப்புறம் இந்தம்மா என்ன சொல்லிச்சாம் தெரியுமா? பாவி. மனுஷன் விஷ யம் சொல்லியிருந்தா குழந்தைங்களோட ஒன்னா இருந்திருக் கலாம்னு சொல்லிச்சாம். அது மட்டுமில்ல. அந்தப் பசங்களும் பெரியம்மா பெரியம்மான்னு உயிராத்தான் இருக்காங்க. தன் னோட சொத்துப் பூராவையும் அந்தக் குழந்தைகளுக்குத்தான் எழுதி வச்சிருக்கு தெரியுமா?" என்றாள் ரேகா.



"போடி. நீ என்ன சொன்னாலும் சரி. துரோகம் துரோகம்தான்" என்றாள் ஷோபனா.

"ஐயோ! எனக்குத் தலையே வெடிச்சுடும்போல இருக்கு. விடுங்கடி இந்தப் பேச்சை" என்றாள் அனுராதா.

அதற்கப்புறம்தான் அந்தப் பேச்சு நின்றது.

* * *

ஒரு மாதம் போயிருக்கும்.

ஒருநாள்!

வீராசாமி ஒரு போன் செய்தார்.

"அனும்மா!" என்றார் பரபரப்பாக.

"என்ன வீராசாமியண்ணா." என்றாள் அனுராதா.

"அடிக்கடி... எங்க தெருவுக்கு அடுத்த தெருவில ஒரு வீட் டுக்கு முன்னாடி முரளித் தம்பியோட பைக் நிக்குது" என்றார்.

"ஓ!" என்றாள் சுரத்தேயில்லாமல்.

"எப்போலேயிருந்து" என்றாள்.

"ஒரு வாரமாத்தான்! இன்னைக்கு அங்க பைக் நிக்கும்போது நான் போன் பண்றேன். நீங்க வேண்ணா உங்க வண்டியை எடுத் துட்டு வாங்கம்மா" என்றார்.

"ஐயோ. நான் வரலே!" என்றாள்.

"அம்மா. என்னம்மா நீங்க! இதுவரைக்கும் நான் சொன்னதைத் தானே கேட்டீங்க. இன்னைக்கு நீங்களே பாருங்க. ஒரு ஆறரை மணி வாக்கிலே நான் போன் செய்யறேன்" என்றார்.

"சரி." என்றாள் அரை மனதாக.

ஆறரை மணிவாக்கில் திக் திக்கென்று அடிக்கிற நெஞ்சோடு காத்துக் கொண்டிருந்தாள்.

போன் வந்தது.

புறப்பட்டு அவர் சொன்ன அடையாளத்துக்குப் போனாள்.

அங்கே தெருவின் நடுவிலேயே ஒரு சிறிய அம்மன் கோயில் இருந்தது. வண்டியை மறைவாக நிறுத்தி விட்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்திலேயே வீராசாமி நின்றார்.

சற்றுக் கழித்து முரளிதரன் வெளியே வர ஒரு பெண்ணும் அவனோடு கூட வெளியே வந்தாள்.

அநேகமாக முரளிதரனுக்கு சம வயதாக இருக்க வேண்டும் அந்தப் பெண்ணுக்கு.

அழகாக சிரித்தபடி பேசினார்கள். சற்று நின்று பேசினார்கள்.

சிரித்தபடி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

முரளிதரன் வண்டி புறப்பட்டுப் போனபின் அவளும் வேறுவழி யாக வந்தாள்.

வீட்டில் பார்த்தாள்.

அவன் இன்னும் வரவில்லை.

உடனே மாமியார் வீட்டுக்கு போன் செய்தாள். "அத்தே! அவரு அங்க இருக்காரா?" என்று கேட்டாள்.

"ஆமா இப்பத்தான் வந்தான்" என்றாள் மாமியார். அவன் உடனே லைனில் வந்தான்.

"என்ன அனு?" என்றான்.

"இல்லே! வரும்போது குமரனைக் கூட்டிட்டு வந்துருங்க" என்று வைத்து விட்டாள்.

✦ ✦ ✦



இன்று மூன்றாவது நாள்!

நேற்றும் அவனை அந்த நேரத்தில் அந்த வீட்டில் பார்த்தாள். ஆனால் என்ன? இந்தப் புறம் முகம் காட்டாமல் முதுகுப் புறம் காட்டியபடி நின்றான்.

அவள் நின்ற திசைக்கு எதிர்த்திசையில் புறப்பட்டுப் போனான்.

இன்றும் அதே திசையில் புறப்பட்டுப் போனான். ஆனால் என்ன? காலையில் உடுத்திக் கொண்டு போன உடை வேறு. இப்போது அணிந்து கொண்டு செல்கிற உடை வேறு.

அந்த வீட்டில் போய் உடை மாற்றிக் கொள்கிற அளவுக்கு சுவா தீனமா என்ன? இப்போது அவளுக்கு வீராசாமி சொன்னது எல்லாம் நினைவுக்கு வந்தது.

அப்போது இன்னொரு வீட்டில் இதே போல சுவாதீனமாக இருந்தது.

தினமும் சட்டை அழுக்காகி இருக்கும்.

"ஏங்க. சட்டை இப்படி கசங்கி இருக்கு?" என்றாள்.

"அனும்மா. ஃப்ரெண்டு வீட்டுக் குழந்தை மேல விழுந்து புரண்டு கசக்கிடுச்சு" என்பான்.

அவளும் நம்பிக் கொள்வாள்.

திட்டம் போட்டே தன்னை ஏமாற்றிக்கொண்டு வந்திருக்கிறான்.

"அப்புறம் இந்தத் தாம்பத்தியத்துக்கு என்னதான் பொருள்? இந்த வாழ்க்கைக்கு என்னதான் மதிப்பு?"

புழுங்கிக் கொண்டிருந்தாள்.

இன்றைக்கு எரிமலை வெடிக்கத்தான் போகிறது. எத்தனை நாளைக்குத்தான் இப்படிப் புழுங்குவது என்று காத்துக் கொண்டிருந் தாள்.

முரளிதரன் வந்தான்.

உள்ளே நுழையும்போது பார்த்தால் காலையில் அணிந்திருந்த அதே டிரஸ்!

அவளுக்குத் தலையே வெடித்து விடும்போல் இருந்தது.

எந்தப் பாயின்டைப் பிடிக்கலாம் என்று இருந்தாளோ அதுவே ஆட்டம் கண்டு விட்டதே. ஆனாலும் விடக் கூடாது என்று முடிவு செய்து கொண்டாள்.

"அனு டிபன் குடுறி!" என்றான்.

"ஏன் வெளிய சாப்பிடலயாக்கும்?" என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். "நான் எப்படி வெளிய சாப்பிட்டிருக்கேன்?" என்றான்.

"இல்லே! அத்தை வீட்ல?"

"சாப்பிடத்தான் சொன்னாங்க. நான்தான் அனு காத்திட்டிருப்பான்னுட்டு வந்துட்டேன்" என்றான்.

இயல்பாக டைனிங்டேபிளில் அமர்ந்தான்.

"பரவாயில்லே. என்னோட ஞாபகம் இருக்கே!" என்று முணுமுணுத்தாள்.

"என்னடி சொல்றே? சத்தமாச் சொல்லு" என்றான்.

"ஒண்ணுமில்லை" என்றாள்.

ஒரு மனது கொதித்துக் கொண்டிருந்தது. இன்னொரு மனது சாப்பிட்டு முடிச்சுட்டு அப்புறம் பேசலாம் என்றது.

அவன் சாப்பிட்டதற்குப் பிறகு தனக்கு பரிமாறிக் கொள்வதற்காக தட்டைக் கொண்டு வந்தவள் தட்டை ணங்கென்று வைத்தாள்.

ஒரு கரண்டியில் உப்புமாவை அள்ளி மறுபடியும் சத்தம் செய்து கொண்டே பரிமாறினாள்.



வாஷ் பேசினில் கை கழுவிக் கொண்டு நின்றவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் பரபரவென்று நாலு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு அவசரமாய்ப் பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள்.

வழக்கமாக சத்தமே வராமல் வேலை செய்பவள் இன்றைக்கென்னவோ உருட்டித் தள்ளினாள்.

அவன் சமையலறை மேடைக்கருகில் வந்து நின்றான்.

"அனு! உனக்கு என்ன ஆச்சு?" என்றான்.

அவள் திரும்பி உக்கிரமாக அவனைப் பார்த்தாள்.

"அந்த மாலா யாரு?" என்றாள்.

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

"மாலான்னா?"

"அதான் ஃபிரண்டு வீட்டுக்குப் போறேன். ஃபிரண்டு வீட்டுக்குப் போறேன்னு போயிட்டு வரும்போதெல்லாம் சட்டை கசங்கி வருவீங்களே அந்த மாலா" என்றாள்.

அவன் முகத்திலும் கடுமை ஏறியது.

"அனு. ரொம்ப இன்டிசன்ட்டாப் பேசறே!"

"சரி. இதுதான் ரொம்ப இன்டிசன்ட்டாப் போச்சு. அந்தக் கிறிஸ்டினா ராத்திரி பதினோரு மணிக்குக் கூப்பிடறா. அதான் உங்க வீட்டுக்காரர் வந்துட்டாரு இல்லே. என்னை ஆளை விடும்மான்னு சொல்றீங்க. அந்தப் பொம்பளை யாரு?" என்றாள்.

ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தான். பிறகு கடகடவென்று சிரித்தான்.

"மாலா வீடு நம்பர் ரெண்டு. கிறிஸ்டினா வீடு நம்பர் மூணு." என்றான் நக்கலாக.

"அப்ப இந்த மாரியம்மன் கோவில் தெருவுக்கு ஒரு வாராமப் போயிட்டு வர்றீங்களே அது எத்தனையாவது நம்பர் வீடு?" என்றாள் அவளும் கோபமும் நக்கலும் தொனிக்கும் குரலில்.

அவன் முகத்தில் மீண்டும் கோபம் ஏறியது. கட்டுப் பாட்டை இழந்தவன்போல் முகம் சிவக்கக் கையை ஓங்கினான். ஆனால் என்ன நினைத்தானோ திடீரென்று கையைத் தாழ்த்திக் கொண்டான்.

"சே" என்ற கதவுக்கருகில் போனான். "தெரியும்டி. நீ வராக சாமி கதையைச் சொன்னவுடனே எனக்குத் தெரியும்டி. உன்னைத் திருத்தவே முடியாதுன்னு. அப்பவே நான் புரிஞ்சிருக்கணும். உன்னைத் துரத்தியிருக்கணும். அப்படி செஞ்சிருந்தா விஷயம் முடிந்திருக்கும்."

"துரத்தி விட்டாத்தானே ஆட்டம் போட வசதியா இருக்கும். நீங்க என்ன துரத்தறது? நானே போறதுன்னு முடிவு பண்ணிட்டேன். இப்படி நம்ம புருஷன் நம்மளுக்கில்லேன்னு புழுங்கிப் புழுங்கிச் சாகறதுக்குப் பதிலா ஒரேயடியாப் போயிடறேன்." என்று வேக மாகத் தங்களது படுக்கையறைக்குப் போனாள்.

ஒரு சூட்கேஸை எடுத்துத் துணிமணிகளை அடுக்கினாள்.

அவன் நொந்து போய் சோபாவில் கையை முட்டுக்கொடுத்த படி அமர்ந்தான். முகத்தில் சொல்லவொண்ணாத வருத்தம் தெரிந்தது. எழுந்து வந்தான்.

கதவை அடைத்தாற்போல் நின்றான். "அனு. சந்தேகம்கறது கொடிய வியாதி.... அது நிம்மதியைக் கெடுத்துரும்."

"ஆமா. நான்தான் ரொம்ப சந்தேகக்காரி. நீங்க ரொம்ப யதார்த்தம்." என்றாள்.

சூட்கேஸை எடுத்துக் கொண்டாள். அவன் மறித்தான். சூட்கேஸைப் பிடுங்கினான்.



"சரி இதையும் நீங்களே வச்சுக்கங்க" என்று விலகினாள்.

அவளுடைய ஆவேசத்தைப் பார்த்து அவனே ஒரு கணம் மிரண்டு போனான்.

"அனு! ப்ளீஸ்" என்று வாசல் வரை வந்தவனை அவள் பத்ரகாளியைப் போல் திரும்பிப் பார்த்தாள்.

"பேசாம என்னைப் போக விட்டுங்க. உயிரோடவாவது இருப் பேன். இல்லேன்னா ஏதாவது பஸ்ல கிஸ்ல பாஞ்சு உசுரையே விட்டுருவேன்" என்றாள்.

பதறிப்போய் விலகினான்.

"அனு! என்றான் கவலையுடன்.

"கவலைப்படாதீங்க... வழியை விடுங்க. உங்களுக்கு முன்னாலேயே வாழ்ந்து காட்டுவேன். மாசத்துக்கு ஒருத்தின்னு மாத்தறீங்களே. அவங்கள்ளாம் யாரும் காலத்துக்கும் கூட வர மாட்டாங்க. கட்டை வேகற வரைக்கும் இந்தத் தாலி கட்டினவ தான்னு புரிஞ்சுக்கற காலம் வராமயா போயிடும்" என்றாள் புலம்பலாக.

செருப்பை மாட்டிக் கொண்டு நடந்தாள்.

இப்படி ஒரு புயலை எதிர்பார்க்காத முரளிதரன் பெரிதும் அதிர்ந்து போய் அமர்ந்து விட்டான்.

ஒருவாறு தேறிக் கொண்டு போனை எடுத்தான்.

◆ ◆ ◆

கண்ணில் நீர்வழிய நடந்தாள். இலக்கில்லாமல் நடந்தாள்.

இதே மனநிலையில் போனால் சரி வராது! யார் வீட்டுக்கும் போக வேண்டாமென்று முடிவு செய்தாள்.

அம்மன் கோயிலுக்குப் போனாள்.

துர்க்கை சன்னதிக்கு முன்னால் நின்று மனமுருகி வேண்டினாள்.

"உனக்கு விளக்கேத்தி வைக்கப் போய்ப் பாத்துத்தானே அவருக்குப் புடிச்சுப் போய்க் கல்யாணம் செஞ்சாரு. அவரைக் குடுத்த நீ ஏன் எனக்கே எனக்குன்னு குடுக்கலை" என்று மனம் உருகிக் கேட்டாள். மனதுக்குள் அழுதாள்.

சற்று நேரம் கோவில் மண்டபத்திலே அமர்ந்திருந்தாள்.

அர்ச்சகர் வந்தார்.

"என்னம்மா அனு! மணி ஒம்பதாறதே! நடை சாத்தணுமே! அம்பாளை விட்டுப் பிரியறதுக்கு மனசு வர்லையா குழந்தே." என்றார்.

அவரைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு எழுந்தாள்.

"வா. வா குங்குமம் தர்றேன். வாங்கிக்க." என்று பரிவுடன் கொடுத்தார். அந்தப் பரிவு அந்த நேரத்துக்கு இதமாக இருந்தது.

பிரசாதம் வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

அம்மா வீடு. மாமியார் வீடு. கணவனின் அலுவலகம் எல்லாமே அந்த நாலைந்து தெருவுக்குள்ளே அடங்கி விடுகிற மாதிரி இருந்தது. நகரின் மையப் பகுதி அது.

பதினோரு மணி வரை கூட ஆள் நடமாட்டம் இருக்கும் என்பதால் பயமில்லாமல் நடந்தாள்.

மிகுந்த யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தாள்.

'என்ன நினைத்துக் கொண்டார் இவரு. ஒவ்வொருத்திக்கா தாரை வாத்துக் கொடுத்துட்டு இவருக்கு சோறு வடித்துக் கொட்டறதுக்கு மட்டும் நானா?' என்று பொருமிக் கொண்டே நடந்தாள்.



கடைசியில் அவள் கால்கள் இழுத்துக் கொண்டு போன இடம் குறித்து அவளுக்கே ஆச்சரியமாகிப் போனது.

திகைத்துப் போய் நின்றாள்.

வழக்கமில்லாத வழக்கமாய் வந்து அதுவும் இந்த எதிர்பாராத நேரத்தில் நிற்கிற அவளைப் பார்த்தவுடன் அவள் யாரைப் பார்க்க வந்திருந்தாளோ அவர்களிடத்திலும் அதிர்ச்சி தெரிந்தது.

அவள் கோவென்று கதறியபடி பேச ஆரம்பித்தாள்.

## 13

குழந்தையின் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டே மார்பில் சாய்த்துக் கொண்டபடி அமர்ந்திருந்தான். யோசனையில் ஆழ்ந்திருந்தான். சற்றே கவலையில் ஆழ்ந்திருந்தான்.

ஒரேயடியாக சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு அனுராதா வெளியே கிளம்புவாள் என்பது அவன் எதிர்பாராதது.

அமைதியாக இருக்கறவங்க கோபப்பட்டா வெடித்து எழுந்தா விளைவு இப்படித்தான் இருக்கும். ரொம்பச் சீண்டிட்டடா பயலே" என்று ஒரு மனம் எச்சரித்தது.

இன்னொரு மனது கேட்டது. "அவள் மட்டும் என்ன? வாழ்க்கைன்னா பரஸ்பரம் நம்பிக்கை இருக்கணும். எப்பவும் சந்தேகப் பட்டுட்டே இருந்தா வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். நீ செஞ்சதுதான் கரெக்டுடா..." என்றது.

இன்னொரு மனது மறுபடியும் கேட்டது. "சரி. நீ செய்யற மாதிரி அந்தப் பொண்ணு நடந்திருந்தா... ஒத்துக்குவியாடா?" என்றது கேட்டது.

யோசனையிலே இருந்தான். இனிமேல் தனக்கு ஒரு சோதனைக் காலம் என்று புரிந்தது. 'வீட்டுக்குள்ளே நடக்கற விவகாரம் வீட்டுக்குள்ளயே இருக்கறவரைக்கும் அது வேற கணக்குத்தான். எப்ப அது வெளிய வருதோ அப்ப எல்லாருக்கும் பதில் சொல்லனும். அவளோட அம்மா அப்பாவுக்குப் பதில் சொல்லனும்.' என்று மனதுக்குள் கவலை மண்டியது.

பதினோரு மணியானது.

காலிங்பெல் ஒலித்தது.

குழந்தையை நகர்த்தி வைத்து விட்டு எழுந்து போனான்.

கதவைத் திறந்தான்.

மாமனாரும் மனைவியும் நிற்கக் கண்டான்.

உள்ளத்தில் சங்கடமும். மகிழ்வும் ஒரு சேர குப்பென்று பொங்கியது.

''வாங்க. வாங்க'' என்று மாமனாரை மகிழ்வுடன் வரவேற்றான். அனுராதா முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். நேராகப் படுக்கையறைக்குப் போய் முடங்கிக் கொண்டாள்.

ஒரு நிமிடம் கனத்த மௌனம் நிலவியது. சங்கடமான மௌனம்.

''உட்காருங்க மாமா!'' என்றான்.

உட்கார்ந்தார். பிறகு மெதுவான குரலில் ''உலகம் தெரியாத புள்ளே! சட்டுன்னு வெளிய வந்துட்டா. மன்னிச்சுக்குங்க மாப்பிளே!'' என்றார்.

அவன் பதறிப்போனான். ''யாரை யார் மன்னிக்கறது மாமா! இது அவளுக்கு உரிமையுள்ள வீடு. ஆனா என்ன இது அவளுக்கு மட்டும்தான் உரிமையுள்ள வீடுன்னு நம்ப மாட்டேங்கறா'' என்றான். ஒரு பெருமூச்சு விட்டான்.



அவரும் பதிலுக்கு ஒரு பெருமூச்சு விட்டார். ''மாப்பிளே! உங்க மேலே உயிரையே வச்சிருக்கா. ஆனா உங்க அளவுக்குத் தகுதியில்லேன்னு நினைக்கறா. எங்க கை நழுவிப் போயிடுவீங்களோன்னு பயம்.'' என்றார்.

''மாமா'' என்று அவன் பதற்றத்துடன் விளக்கம் சொல்ல ஆரம்பிக்க அவர் தடுத்தார். ''வேண்டாம் மாப்பிளே! உங்க குடும்ப விவகாரம். நீங்கதான் சரி செஞ்சுக்கனும்'' என்றார். ''நான் புறப்படறேன்'' என்றார்.

விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

வேகமாக உள்ளே போனான். ''அத்தனை தடுத்தேன். கேட்காமல் புறப்பட்டுப் போனே'' என்று உள்ளே வந்தான்.

திகைத்து நின்றான்.

உறங்கிக் கொண்டிருக்கிற மகனை அணைத்துக் கொண்டு பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருந்தாள்.

''அனு!'' என்று குழைந்து போன குரலில் சொல்லிக் கொண்டு நெருங்கினான்.

அவள் அவன் கையை உதறினாள்.

''இவனுக்கு அம்மாவாத்தான் நான் வந்திருக்கேன். உங்களுக்குப் புரியாதுங்க. உங்க மேலே நான் உயிரையே வச்சிருக்கேன். ஒவ்வொரு இடத்துல ஒவ்வொருத்தியோட பாத்தேன்னு ஒவ்வொருத்தரும் வந்து சொல்றப்ப நெஞ்சில எப்படி கத்தி மாதிரிப் பாயும்னு புரியாதுங்க'' என்று வெடித்து அழுதாள்.

நீண்ட பெருமூச்சு விட்டான்.

''விடு. அனு. நீ நான் என்ன சொன்னாலும் ஒத்துக்கப் போறதில்லே. இப்பப் பேசினா சரி வராது. எடுபடவும் செய்யாது'' என்றான்.

* * *

குழந்தைக்கு மறுபுறம் படுத்துக் கொண்டான். ஆனாலும் இருவரும் உறங்குவதற்கு வெகுநேரமானது.

* * *

"நீ ஏன்டா அவ மனச நோகற மாதிரி நடந்துக்கறே. அப்படி என்ன உனக்கு வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள்?" என்று படு கோபமாகத் திட்டுகிற சகோதரன் முன்பு குற்றம் புரிந்த குழந்தையைப் போல அமர்ந்து கொண்டிருந்தான் முரளிதரன்.

"அண்ணா! என்ன நீ... ஏதாவது வழி சொல்லுன்னா... இப்படிப் பேசறே!" என்றான்.

"போடா. உன்னைப் பத்தித்தான் பெருமையாப் பேசிட்டிருந்தேன். ரொம்ப அருமையாக் குடும்பம் நடத்தறேன்னு" இரண்டு பேருமே சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்தார்கள்.

பிறகு அவன் சங்கடமானதொரு குரலில் சொன்னான்.

"அண்ணா. நானும் மனுஷன்தானே! சும்மா சீண்டிகிட்டேயிருந்தா கோபம் வருதில்லே! அதான்!" என்றான்.

"அதுக்காக இப்படியா நடந்துக்கறது. தப்புடா. மகா தப்பு. பொம்பளைங்க இந்த மாதிரி வழியிலே கோபம் காட்ட ஆரம்பிச்சா நம்ம கதி என்ன ஆகறது?" என்று பொரிந்து தள்ளி விட்டான்.

முரளிதரன் அடி வாங்கியவன் போல் அமர்ந்து விட்டான்.

"சரி. விடு. மேற்கொண்டு என்ன செய்யலாம்னு பார்க்கலாம்" என்றான்.

முரளிதரன் புறப்பட்டான்.

"டேய். கோபத்தில் இருக்கும் போது சும்மா குத்திக் குடைஞ்சு பேசாதடா! ஆறப்போடு" என்றான்.

முரளிதரன் தலையை ஆட்டிக் கொண்டு நகர்ந்தான்.

* * *



இரண்டு மூன்று நாட்கள் போயிருக்கும்...!

இப்போதெல்லாம் அவன் ஆறு மணிக்கே வீட்டுக்கு வந்து விடுகிறான். அவன் பாட்டுக்கு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தவன் ஒரு நாள் திடீரென்று முடிவு கட்டி பையனுக்கு ட்யூஷனை நிறுத்தினான்.

தானே பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான். அனுராதா என்ற பெண் அந்த வீட்டில் இருப்பதை மறந்தவன் போல் குழந்தையிடம் முழு கவனத்தையும் செலுத்தினான். இருவரும் பேசிக் கொள்வதுமில்லை.

கிளிப்போடு கூடிய அட்டை ஒன்று மாட்டி வைத்திருந்தான். ஏதாவது வேண்டுமென்றால் அதில் எழுதி வைத்து விடுவாள். அவனும் வாங்கிக் கொடுத்து விடுவான்.

நேரத்துக்கு டைனிங் டேபிளில் சாப்பாடு இருக்கும். அவனும் குழந்தையிடம் மட்டும் கலகலப்பாகப் பேசுவான். ஒரு விதமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் அவனுக்குள் அந்த சந்தேகம் எழுந்தது.

பாங்குக்குப் போனவன் வீராசாமி அண்ணனை அழைத்தான். அந்தக் கேள்வியைக் கேட்டான். அவர் பதில் சொல்லி முடித்தவுடன் அதிர்ந்து போய் விட்டான்.

இன்றைக்கு இரண்டில் ஒன்று பார்த்து விடலாம் என்று கிளம்பிப் போனான். சரியான கடுப்புடன் உள்ளே போனால் அங்கே அம்மாவும் அப்பாவும் அமர்ந்திருந்தார்கள்.

"வாடா. வா உனக்காகத்தான் காத்திருக்கிறோம்" என்று உற்சாகமாக வரவேற்றார்கள்.

அவனும் வருவித்துக் கொண்ட உற்சாகத்துடன் ''அம்மா அப்பா வாங்க வாங்க!'' என்று வரவேற்றான்.

மனைவி ஏதும் அவர்களிடம் சொல்லியிருப்பாளோ என்று கலவரமாகப் பார்த்தான். ஆனால் மாறாக அவள் அவர்களிடம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்கக் கண்டான்.

சசிதரனும் சற்று நேரத்தில் வந்தான்.

''டேய்! நாங்க எதுக்கு இன்னைக்கு வந்தோம் தெரியுமா? இந்தத் தடவை நவராத்திரி உங்க வீட்ல. நாங்க எல்லாரும் பத்து நாளும் இங்கதான் தங்கப் போறோம். ஆமா...! பத்து நாள் இங்கதான் டேரா.'' என்றார்கள்.

''ஐயோ ரொம்ப நல்லதாப் போச்சு. இல்ல அனு?!'' என்று திரும்பிப் பார்த்தான்.

எங்கே காலை வாரி விடுவாளோ என்று அஞ்சிக் கொண்டே முகம் பார்க்க,

''ஆமங்க! நமக்கும் நல்லாத்தான் இருக்கும்'' என்றாள். உற்சாகமாகவே சொன்னாள். அவன் நிம்மதியானான்.

♦ ♦ ♦

பொழுது கலகலப்பாகப் போனது.

அனுராதா அசத்தினாள்.

தங்கள் ஏரியாவையே மாடலாகச் செய்தாள்.

அச்சு அசலாகவே அவர்கள் வீட்டைப் போலவே ஒரு மாடல். மாமனார் வீடு. சசிதரன் வீடு. அம்மா வீடு. முரளிதரன் அலுவலகம். மகனது பள்ளிக்கூட நுழைவாயில் என்று நாலைந்து தெருவுக்குள்ளே இருக்கிற அத்தனை விஷயங்களையும் கொண்டு



வந்திருந்தாள். ''எங்கள் சிறிய உலகம்'' என்று அதற்குத் தலைப்புக் கொடுத்திருந்தாள்.

சசிதரனும் அவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்னுடைய உலகமே இதுதான். புரிஞ்சுக்குங்க'' என்று அவள் செய்தி விடுப்பது போல் இருந்தது.

இங்கே பிரச்சினை... அன்பில்லாமையோ, வெறுப்போ அல்ல அளவு மீறிய அன்புதான் என்பது புரிந்தது.

இந்த பனிப்பாறையை எப்படி உடைப்பது? என்ற கவலை அவனுக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

வீடு முழுமையும் இரண்டு மூன்று நாட்களுக்கு அலங்கரித்தார்கள்.

வீடே கலகலப்பாக இருந்தது.

அனுராதாவைக் கூட உற்சாகம் தொற்றியது. தனது தாய் வீட்டை அழைத்து விட்டு வந்தாள். சகோதரிகளை அழைத்தாள். அக்கம் பக்கத்தை அழைத்தாள். முதல் இரண்டு நாட்கள் நெருங்கிய உறவினர்கள் எல்லாம் வந்து சென்றார்கள்.

ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பலகாரம் செய்தார்கள்.

ஷீலாவும் அவளும் கடைக்குப் போய் சிறிய கிண்ணங்கள், மஞ்சள், குங்குமக் கிண்ணங்கள், பிளவுஸ் பிட் என்று வாங்கி வந்தார்கள். இந்த விஷயங்களுக்காகத் திட்டமிடுதல் - செயல்படுத்துதல் என்று பரபரப்பாக இருந்தது.

''ஏங்க அண்ணி. இன்னைக்கு சாயங்கால டிபன் என்ன? காலைல டிபன் என்ன?'' என்று தரணிதரன் அவ்வப்பொழுது தனியாக காக்கா அடித்தான்.

"இன்னைக்கு ஜவ்வரிசி உப்புமா" என்றாள்.

"என்னது. ஜவ்வரிசி உப்புமாவா? கேள்விப்பட்டதே இல்லையே? உங்களை நம்பி எங்க வயித்தையே ஒப்படைக்கிறோம். பெரிய அளவில சேதம் இல்லாம பாத்துக்குங்க" என்றான்.

"டேய்! போடா. உங்க சின்ன அண்ணிதான் செஞ்சிருக்கா அவகிட்டே போய்க் கேளு. போ." என்றாள் ஷீலா!

"கவலைப்படாதீங்க. ரொம்ப சாதாரண பிரிப்பரேஷன். ஜவ்வரிசியை ஒரு அஞ்சாறு மணி நேரம் மோர்ல ஊற வச்சதுக்கப்புறம் பொரியல் தாளிக்கற மாதிரி தாளிக்க வேண்டியதுதான்" என்றாள்.

"ஐயோ. மெத்தடாலஜியெல்லாம் வேண்டாம். ரிசல்ட் நல்லா இருந்தாப் போதும்" என்று உறுதிப்படுத்திக் கொண்டான்.

"என்ன தம்பி! நம்பிக்கைதானே வாழ்க்கை. உங்க வயித்தைக் கெடுப்போமா?" என்றாள்.

"டேய்! அதை இன்னொரு தடவை சொல்லச் சொல்லு" என்று அந்தப் பக்கம் இருந்து குரல் கொடுத்தான் முரளிதரன்.

"அண்ணா! இந்தப் போஸ்ட்மேன் வேலை எல்லாம் நமக்கு வேண்டாம். நீயே போய்ச் சொல்லு" என்று நகர்ந்தான் தரணி தரன்.

"பாட்டி நவராத்திரி எதுக்குக் கொண்டாடறோம் சொல்லு?" என்று குழந்தைகள் கேட்க தாத்தாக்களுக்கும் பாட்டிகளுக்கும் அதற்கு நேரம் சரியாக இருந்தது.

"லஷ்மின்னா செல்வம். சரஸ்வதின்னா கல்வி. சக்தின்னா வீரம். இந்த மூன்று தெய்வங்களையும் வழிபட்டா... நமக்கு இதெல்லாம்... கிடைக்குமாம்" என்று ஒரு புறம் விளக்கங்கள் சொல்லப்பட்டுக் கொண்டிருந்தன.



சூழ்நிலை எவ்வளவு அழகாக இருக்கிறது. அனு மட்டும் மகிழ்ச்சியாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்று எண்ணிக் கொண்டான் முரளிதரன். அதே நேரம் அனுராதாவும் அதையே எண்ணிக் கொண்டிருந்தாள்.

தாத்தாவும் பாட்டியும் இங்கேயே தங்கவும் குமரனுக்கு ரொம்பவும் குஷியாகி விட்டது.

தரணிதரன் தினமும் பதினோரு மணிவரை இருந்து விட்டு வீட்டைப் பூட்ட வேண்டாமே என்பதற்காக தங்கள் வீட்டுக்குப் போனான். ஷீலாவும் சசிதரனும் அப்படித்தான்.

மற்றபடி குழந்தைகள் எல்லாரும் முரளிதரனின் வீட்டிலேயே தங்கினார்கள். அதனால் முரளிதரனுக்கும் அனுவுக்கும் தனியாய் இருக்க நேரம் அமையவில்லை. வசதியாகத்தான் இருந்தது.

ஒவ்வொரு நாளும் வேகமாக ஓடியது. வருகிறவர்களை வரவேற்று அவர்களோடு நேரம் செலவழித்து என்று முதல் இரண்டு நாட்களும் வேகமாக ஓடி விட்டது.

வீராசாமி கூட வேலை நேரம் முடிந்தவுடன் அவர்கள் வீட்டுக்கு வந்து விடுவார்.

வருகிறவர்களில் ஆண்கள் அந்த விசாலமான சிட் அவுட்டில் அமர்ந்து கொண்டால். வீராசாமிதான் அவர்களுக்கு எல்லாம் கொண்டு போய்க் கொடுப்பது. காபி, டீ சப்ளை எல்லாம் அவர் தான். அப்படித்தான் அன்றைக்கும் உதவி செய்து கொண்டிருந்தார்.

அப்போது ஏழு மணியிருக்கும் அன்றைக்கு வந்த விருந்தினர்களைப் பார்த்தவர் பரபரப்பாக ஓடி வந்து "முரளித் தம்பி.

இங்க பாருங்க. யாரு வந்திருக்காங்கன்னு'' என்று குரல் கொடுக்க முரளிதரன் வெளியே வந்தான்.

உள்ளே நுழைந்த அந்த இளம்பெண் யாரென்று அடையாளம் தெரியாமல் அனுராதா விழிக்க வீராசாமி அருகில் வந்து

''அனும்மா. இவங்கதான் மாலா'' என்றார்.

மாலாவின் அருகில் ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

''டேய். பயங்கரமான ஆள்றா நீ! இவ்வளவு தடபுடலா உன் வீட்ல கொலு வச்சட்டு விசேஷம் நடக்குது. எங்களைக் கூப்பிடவே இல்லை. பாத்தியா நீ மறந்தாலும் சசி அண்ணன் வந்து கூப்பிட்டுட்டாங்க.'' எனவும் முரளிதரன் சகோதரனை வியப்புடன் திரும்பிப் பார்க்க அவன் கண்ணமர்த்திச் சிரித்தான்.

ஆண்கள் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டு கலகலவெனச் சிரிக்க அவன் கையிலிருந்த குழந்தை அவனிடம் தாவியது.

அனுராதா கண்கள் தெறித்து விழுவது போல் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

## 14

''ஹலோ. சந்தர்ராஜ்.! என்னடா இந்த நேரத்துல...'' என்றான் முரளிதரன்.

மாலை ஆறு மணி இருக்கும்.

''முரளி! நான் கேக்கறதுக்கு பதில் சொல்லு. மழுப்பாம பதில் சொல்லு.'' என்றவன் ஒரு கேள்வி கேட்டான்.



முரளிதரன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். ''டேய். இந்தக் கேள்விக்கு எதுக்கு மழுப்பணும்.'' மாலா இங்கதான் இருக்கா. திருச்சியில.'' என்றான்.

''ஓ!''

''என்ன விஷயம்?''

சந்தர்ராஜ் விவரமாகச் சொன்னான்.

''ஓஹ்ஹோ. அப்படியா விஷயம்? என்கிட்ட இதெல்லாம் சொல்லலையே! என்னமோ சேன்ஜ் ஆஃப் பிளேஸ் வேணும்னாப்பல. நிம்மதி வேணும்னு வந்திருக்கேன்னு சொன்னாப்ல. தேவேந்திரனுக்காக எதுவும் செய்யலாமேடா!'' என்றான் முரளிதரன்.

''அதேதான்டா நானும் சொல்றேன். நான் சொன்னதை யோசி.'' என்று போனை வைத்து விட்டான்.

முரளிதரன் நிஜமாகவே யோசிக்க ஆரம்பித்தான்.

* * *

முரளிதரன். சந்தர்ராஜ். தேவேந்திரன். இவர்களோடு சாமுவேல் நல்லதம்பி இவர்கள் எல்லாரும் நெருங்கிய நண்பர்கள்.

தேவேந்திரனுக்கும், மாலாவுக்கும் திருமணத்தை ஜாம் ஜாமென்று நடத்தியவர்களே இவர்கள்தான். அதே சமயத்தில் சந்தர்ராஜனின் திருமணமும் நடந்து முடிந்திருந்தது. இடையிலே போக்குவரத்து நின்று போயிருந்தது. ஆனால் அவ்வப்போது போனில் பேசிக் கொள்வார்கள்.

சந்தரராஜின் திருமண வாழ்க்கையில் ஒரு கசப்பான சம்பவம் நடந்திருந்தது. அவன் மனைவி லேகா பெரிய பணக்கார வீட்டுப்

பெண். அவளால் இந்தக் குடும்பத்தின் வாழ்க்கை முறையில் ஒத்துப் போக முடியவில்லை.

ஆரம்பத்தில் இருந்தே பிரச்சினைகள் செய்து கொண்டிருந் தாள்.

ஒருமுறை தீ வைத்துக் கொள்கிறேன் என்று ஆர்ப்பாட்டம் செய்தாள். தற்கொலை செய்து கொள்கிறேன் என்று தொடர்ந்து மிரட்டவே சுந்தர்ராஜுக்கு அச்சம் ஏற்பட்டது. அவளுடைய மனநிலையில் மாற்றம் ஏற்படும் என்று தோன்றவில்லை.

பெரியவர்களை வைத்துப் பேசி மணவிலக்குப் பெற்றுக் கொண்டான்.

லேகா இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்ட போது கூட அவன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. ''விட்டது சனியன்'' என்றுதான் தோன்றியது.

மறுபடியும் ஒரு வருடம் கழித்து அந்தத் திருமணமும் முறிந்து போனது என்று கேள்விப்பட்ட போது அவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

இது ஒருபுறமிருக்க மூன்றாண்டுகள் முடிவதற்குள்ளாக தேவேந்திரனின் இழப்பு அவர்கள் எல்லாரையும் பெரிதாகப் பாதித்தது. அதிலும் இறக்கிற தருவாயில் தனது கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் பேசிய வார்த்தைகள் அவன் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்து கிடந்தது.

இப்போது நினைத்தாலும் அவன் நெஞ்சில் ரத்தம் கசியச் செய்யும் வார்த்தைகள் அவை. அதன் அடிப்படையில்தான் அந்தக் காரியம் செய்தான். ஆனால் அந்தச் செயல் மாலாவை ஊரை



விட்டே விரட்டும் அளவுக்குப் போகும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

* * *

''ஹல்லோ திவ்யாக் குட்டி!'' என்று அள்ளிக் கொண்டான் முரளிதரன்.

அதே நேரம் ஃபிரிட்ஜை நகர்த்த முடியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தாள் மாலா.

''என்னம்மா நகர்த்த முடியலையா? நான் ஹெல்ப் பண்றேன். நீ தள்ளு. எனக்கு சூடா ஒரு கப் டீ போட்டுக் கொண்டு வா'' என்று சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு அவன் உதவி செய்தான்.

''மாலா! இந்த டேபிளை இங்க போடலாமா? இந்த ஃபிளவர் வாஸை இங்க வைக்கலாமா? என் வைஃப் அனுவை விட்டா பிரமாதமா அலங்காரம் பண்ணிடுவா. ஆனா அவ ஒரு மூடி டைப்'' என்று பேசிக் கொண்டே உதவிகளைச் செய்து முடித்து விட்டு களைத்துப் போய் சோபாவில் அமர்ந்தான்.

''ஏம்மா? இந்த சோபா எடுக்கும் போது நானும் கூட இருந்தேன். ஞாபகம் இருக்கா? சென்னைக்கு வந்திருந்தேன். நான். நீ தேவ் மூணு பேரும் சேர்ந்து இந்தக் கலர் செலக்ட் செஞ் சோம்'' என்றான்.

முகத்தில் ஆழ்ந்த வேதனை தெரிந்தது. அவன் கண்கள் கலங்கின.

''அங்கிள் உங்க மடியில உட்காந்துக்கறேன்'' என்று தாவி அவன் மடியில் அமர்ந்தாள் குழந்தை.

அவன் குழந்தையைக் கொஞ்சி மடியில் அமர்த்திக் கொண் டான்.

"ஏன் அங்கிள். எங்க ஸ்கூல்ல எல்லாரையும் அப்பா கொண்டு வந்து விடறாங்க. எனக்கு மட்டும் ஏன் அப்பா சாமிகிட்டே போனாங்க." என்றாள்.

மாலாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

"கவலைப்படாதே! தங்கம். அப்பா சாமிகிட்டே போனா என்ன? உன்னைப் பாத்துக்க அங்கிள் நான் இருக்கேன். புதுசா ஒரு அப்பா சாமி அனுப்பி வைப்பாங்க." என்றான் முரளிதரன்.

மாலா திடுக்கிட்டுப் போய் பார்த்தாள். 'என்ன பேசறீங்க?' என்பது போல்.

அவன் புன்னகைத்தான். "மாலா எதுக்கு அதிர்ச்சியாகறே? என்கிட்டே உண்மையைச் சொல்லு... நீ எதுக்காக சென்னையை விட்டு வந்தே?" என்றான்.

"நான்தான் சொன்னேனே சேன்ஜ் ஆஃப் பிளேஸ் வேணும்னு வந்தேன்னு." என்றாள்.

"பொய்!" என்று சிரித்தான்.

அவள் மௌனமாகக் கீழே பார்த்தாள்.

"அப்ப ஏன் உங்க மாமனார் மாமியார் உங்கிட்டே கோபிச் சுட்டுப் போனாங்க..." என்றான்.

"ஆமா உலகத்துல இல்லாத மாமனார் மாமியார். எங்கயாவது யாராவது இப்படிச் சொல்வாங்களா? வேற கல்யாணம் பண்ணிக்க அப்படிங்கறாங்க" என்றாள்.

முரளிதரன் சிரித்தான். "கண்டிப்பா அவங்க உலகத்துல இல்லாத மாமனார் மாமியார்தான். வேற எந்த மாமனார் மாமியார் இப்படி நினைப்பாங்க" என்றான்.



"என்ன முரளி இப்படி சொல்றீங்க?" என்றாள் மனத்தாங்கலுடன்.

மேலும் சொன்னாள். "அஞ்சே வருஷத்துல மறந்துட்டு அடுத்த வாழ்க்கையை நினைக்கிற மாதிரியா நான் தேவ் கூட வாழ்ந்தேன். இனிமே வேற யாரையும் இந்த இடத்துல நினைக்க முடியுமா?"

"உனக்காக நினைக்க வேண்டாம். இந்தக் குழந்தை அப்பா வேணும்னு ஏங்குதே!" என்றான்.

"இது அதை விட அபத்தம். அப்படியே ஒருத்தர் வந்தாலும் இவளைத் தன் குழந்தையா நினைப்பாங்களா? நிச்சயமா மாட்டாங்க. இதெல்லாம் கற்பனைக்கு நல்லா இருக்கும். விடுங்க முரளி." என்றாள்.

"மாலு! உங்க மாமனார்கிட்டே நேத்துப் பேசினேன். உங்களுக்கும் வயசாயிட்டே போகுது. இத்தனை சொத்தோட இந்தப் பொண்ணை எப்படித் தனியா விடறது. அவளோட எதிர்காலம் எப்படி இருக்குமோன்னு பயம்மா இருக்குன்னு ரொம்ப வருத்தப்பட்டார்."

"அப்புறம் ஏன் கோபிச்சுகிட்டுப் போனாங்களாம்."

"அப்படியாவது நீ வழிக்கு வருவேன்னுதான். ஆனா நீ இப்படி டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வருவேங்கறதை அவங்க எதிர் பார்க்கலை. நல்ல வேளை. பாதுகாப்புக்கு நீயிருக்கேப்பா. புத்தி சொல்லு. அப்படிங்கறாரு." என்றான்.

அவள் மௌனமாக எதிர் சோபாவைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அவன் பேச்சை மாற்றி வேற விஷயங்கள் பேசி விட்டு எழுந்தான்.

குழந்தைக்கு முத்தம் வைத்து அவள் கையில் கொடுத்தான். புறப்பட்டான்.!

இரண்டு எட்டு வைத்தவன் நின்று "மாலு! ராஜ் நேத்து பேசினான்" என்றான்.

"முரளி ப்ளீஸ். அந்தப் பேச்சை எடுக்காதீங்க" என்றாள்.

"மாலு நான் ஒரு விஷயம் சொல்றேன் புரிஞ்சுக்க. நல்லா போசி. தேவும் எனக்கு ஃப்ரெண்டுதான். ராஜும் எனக்கு ஃப்ரெண்டுதான். தேவ் அற்புதமானவன். ஆனா அவன் உன்னோட கடந்த காலம். உன்னோட கடந்த காலத்துக்கு நாங்க மறுப்பு சொல்லலே. மதிக்கறோம். ஆனா ராஜ் நிகழ்காலம். போசி. மாலு." என்றான்.

மாலா ஏதும் பேசவில்லை. ஆனால் முகத்திலேயே மறுப்புத் தெரிந்தது.

அந்தக் கணத்தில் முரளிதரனுக்குப் புரிந்தது மாலாவைப் பேச்சினால் பணிய வைக்க முடியாது என்று. வேறு ஏதாவதுதான் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

◆ ◆ ◆

அடுத்த வாரத்தில் ஒரு நாள்!

"அப்பாடா! இன்னைக்குத்தான் ஒரு வழியா... அரேன்ஜ்மென்ட்ஸ் முடிஞ்சது. இனிமே நீ எந்தப் பொருளை வச்சாலும் வச்ச இடத்தில் இருக்கும்." என்றான் முரளிதரன்.

"ஆமா" என்றாள் மாலு.

ஒரேபொரு நடுத்தரமான வீடு. அதற்கு நேர் பின்னே... ஒரே பொரு போர்ஷன் இருக்கற மாதிரி வீடாகப் பார்த்திருந்தான். வய



தான பெரியவர்கள், ஒரே மகன், மருமகள், இரண்டு குழந்தைகள் என்று அந்தக் குடும்பம். அவர்கள் முரளிதரனுக்கு நண்பர்கள்.

இன்றைக்கு புறப்படும்போது அவன் பெரியவரிடம் பேசினான்.

சுந்தரராஜைப் பற்றிப் பகிர்ந்து கொண்டான்.

எதிர்பாராதவிதமாக அவர் சொன்னார். "சரிப்பா. அந்தக் காலத்து நிலவரம் வேற. இந்தக் காலத்து நிலவரம் வேற. ஒன்னுமில்லே! ஒரு புகழ் பெற்ற ஜோதிடப் பத்திரிகை. அதுல ஒரு பெரியவர்கிட்டே நிறைய குடும்ப விஷயங்கள் பத்தி ஆலோசனை கேட்கறாங்க. அதுல எங்க மக இளம் வயதிலேயே விதவையாயிட்டாங்க. அவளுக்கு இன்னொரு முறை திருமணம் செய்யலாமான்னு கேட்கறாங்க. அவரும் அழகாப் பதில் சொல்றாரு. தாராளமாப் பண்ணி வைக்கலாங்கறாரு" என்றான்.

முரளிதரன் அசந்து போனான். பெரியவர்கள் வேறு விதமாகப் பேசுவார்கள் என்று நினைத்தான்.

அவர்கள் குடும்பத்தாரிடம் அமர்ந்து விவாதம் செய்தான்.

அதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். ஒரு திட்டமும் போட்டுக் கொண்டான்.

ஏதோ நினைத்துக் கொண்டே வெளியே வர குழந்தை திவ்யா குறுகுறுவென்று ஒரு சிறிய பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

அவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் மேல் தண்ணீரை ஊற்றினாள்.

"மாமா! ஏமாந்தீங்களா?" என்று கட்டை விரலை ஆட்டிக் கொண்டே ஓடினாள்.

முரளிதரனுக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. "வர்றேன் இரு." என்று அவனும் ஒரு சிறிய பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடிப் போய் அவள் மேல் ஊற்ற குழந்தை அவனை அடிக்க வந்தான்.

"அடிப்பியா நீ? இரு சொல்றேன்!" என்று அவனும் நடித்துக் கொண்டே பொய்ச்சண்டை போட சத்தம் கேட்டு மாலா வெளியே ஓடி வந்தாள்.

அதே நேரம் ஒரு சிறிய செம்பில் தண்ணீரை எடுத்து அவன் தலையில் ஊற்றினாள் திவ்யா.

மாலா ஏதோ சொல்லிக் கொண்டு தடுக்க வர அவன் வேண்டாம் என்பது போல் சைகை காட்டி விட்டு அவனைத் துரத்திக் கொண்டு ஓட அவர்கள் வீட்டு ஹாலில் கட்டிப் புரண்டு சண்டை போட்டார்கள்.

அவன் தோல்வியடைந்தாற் போல் நடித்துக் கொண்டு விழ "சதக். சதக்..." என்று வாயால் குரலெழுப்பிக் கொண்டு அவன் குத்துவது போல் நடித்தான்.

ஐந்து பத்து நிமிடங்களுக்கு மேல் ஒரே களேபரமாக இருந்தது. இரண்டு பேரும் சிரித்துக் கொண்டு எழுந்தார்கள்.

"முரளி. சட்டையைக் கழற்றிக் கொடுங்க" என்று மாலா வாங்கிக் கொண்டு போய் அலசிக் கொண்டு வந்தாள்.

மறுபடியும் ஒரு துண்டு எடுத்துக் கொண்டு வர அவன் தலையைத் துவட்டிக் கொண்டான்.

"மாமா! மறுபடியும் சண்டை போடலாமா?" என்றான் குழந்தை.



"ஐயோ. நீ ரொம்ப பலசாலியா இருக்கே. நாளைக்குப் பார்க்கலாம்." என்றான்.

"அம்மா. அங்கிள் பயந்துட்டாங்க." என்று அவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

முரளிதரனுக்கு அந்தக் குழந்தையின் சிரிப்பைப் பார்த்து உள்ளம் பறிபோனது. அள்ளிக் கொண்டான்.

முத்தங்களை அள்ளியிறைத்து மகிழ்ந்தான்.

பனியனோடு அவன் வாசலில் நிற்க அவன் சட்டையை உதறிக் காய வைத்துக் கொண்டு நின்றாள். மாலா உதறிக் கொண்டு நிற்கிற அந்தக் கணத்தில்தான் வீராசாமி பார்த்தது...

அப்போதுதான் குழந்தை சொன்னான்.

"மாமா! எங்க ஸ்கூல்ல என்னோட எனிமி இருக்கா இல்ல. அவ சொல்றா. அவளுக்கு அப்பா இருக்காங்களாம். எனக்கு இல்லையாம். நான் சொன்னேன். போடி எனக்கு அப்பா இல்லைன்னா என்ன. மாமா இருக்காங்க. அப்படின்னேன். அதுக்கு சொல்றா மாமாவெல்லாம் கூட விளையாட மாட்டாங்க. அப்பாதான் கூட விளையாடுவாங்கன்னு. நாளைக்கு நான் சொல்லுவேன் எங்க மாமாவும் என் கூட விளையாடறாங்கன்னு."

"சொல்லுடா ராஜா. அவங்க வீட்ல மாமா விளையாட மாட்டாராயிருக்கும்.... ஆனா எங்க மாமா நல்லா விளையாடறாங்கறான்னு சொல்லு." என்றான்.

புறப்பட்டான்.

"ப்ச" என்று உச்சுக் கொட்டினாள் திவ்யா.

அவள் சோகமாக முகத்தை வைத்துக் கொள்வதைப் பார்த்து முரளிதரனுக்குச் சிரிப்பு வந்தது.

"என்னடா! திவ்யா?"

"போங்க மாமா! எப்படின்னாலும் அப்பான்னா வீட்லயே இருப்பாங்க. நீங்க மாமாதானே? அதான் நீங்க இங்க இருக்கவே மாட்டேங்கறீங்க. வந்துட்டு வந்துட்டுப் போறீங்க." என்றாள் திவ்யா.

பொருள் பொதிந்த ஒரு பார்வையை வீசினான் முரளிதரன் மாலாவை நோக்கி.

மாலா அவசரமாக முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண் டாள்.

அன்றிரவு!

வெகுநேரம் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தாள் மாலா.

குழந்தை புரண்டு படுக்கும்போது அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். உறக்கத்திலேயே முணுமுணுத்தாள்.

"போடி. அம்மு. மாமாவும் நல்லா விளையாடறாங்க தெரியுமா? என்கூட விளையாடறதுக்கு அப்பாவும் வருவாங்க. பாரு." என்றாள்.

மாலாவின் கண்களில் கண்ணீர் வழிய குழந்தையின் நெற்றி யில் முத்தம் வைத்தாள்.

## 15

"பாத்து... பாத்து... இறக்குங்கப்பா." என்ற குரல் கேட்டது. பழகிய குரல் போல் இருந்தது.



அதிகாலை ஆறு மணியிருக்கும்....

குழப்பத்துடன் விழித்தாள் மாலா! அவர்கள் வீட்டுக்கு முன்பாக ஒரு மினிடார் நின்று கொண்டிருந்தது.

தனது போர்ஷன் வாசலில் இன்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையிலேயே வண்டியிலிருந்து இறங்கி வந்த சுந்தரராஜனைக் கண்டு மாலாவுக்கு வயிற்றில் பீதி கிளம்பியது.

நேரே தனது வீட்டுக்குள் நுழைந்து இங்கேதான் தங்குவேன் என்று ரகளை செய்வாரோ என்று அச்சம் ஏற்பட்டது.

லேசான நடுக்கத்துடன் உள்ளே ஓடினாள். தான் யாருக்காக பயந்து கொண்டு ஊரை விட்டு ஓடி வந்தோமோ... அவரே இங்கே வந்திருக்கிறாரே!" என்ற அச்சம்.

நன்றாக நினைவு வந்தது.

இங்கே முரளிதரன் பழகுவதைப் போல்தான் சுந்தரராஜும் வீட்டிற்கு வரப்போக இருப்பான்.

திவ்யாவும் அவனிடம் அங்கிள்... அங்கிள்... என்று ஒட்டிக் கொண்டாள்.

தேவேந்திரனின் நினைவு நாளில் அந்த வருடம் அவனும் வந்திருந்தான்.

பிற்பகல் நான்கு மணிவரை இருந்தான்.

மாலா எதற்கோ அந்தப்புறம் போன பின்பு தேவேந்திரனின் தந்தையுடன் பேசினான்.

"அப்பா. ரொம்ப நாளா உங்ககிட்டே ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கு. ஆனா எப்படிப் பேசறதுன்னுதான் தெரியலே." என்றான்.

"சொல்லுப்பா" என்றார்.

"தேவ் எனக்கு ஒரு பொறுப்பு கொடுத்துட்டு போயிருக்கான்." என்றான்.

"அப்படியா. என்ன அது?" என்றார் அவர்.

சுந்தாராஜ் வாயால் சொல்லவில்லை. கையிலிருந்த கடிதத்தை அவர் கையில் கொடுத்தான். அவர் சாதாரணமாக வாங்கினார். ஆனால் படிக்கப் படிக்க அவர் முகம் மாறியது.

"இது எப்பக் குடுத்தது?" என்றார் தழுதழுத்த குரலில்.

"சாகறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னாடி. அதே மாதிரி ஒரு லெட்டர் உங்களுக்கும் குடுத்திருக்கான். அது உங்ககிட்டே இருக்கிற அவனோட கைப்பையில் இருக்கும்."

"ஓ! அதானா அந்தக் கைப்பையை பத்திரமா வைக்கச் சொன்னான்?" என்றார் கலங்கிய குரலில்.

தேவேந்திரனின் அம்மா அதைப் படித்து விட்டு அழுதார். இப்போது சுந்தாராஜ் கேட்டான்.

"அப்பா. நான் இப்ப என்ன செய்யட்டும்?" என்று கேட்டான். அவர்கள் நீண்ட பெருமூச்சு விட்டனர்.

"ஒரு வாரம் டைம் குடு." என்றார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்களே அழைத்துப் பேசினார்கள். ஆனால் இது எதுவும் மாலாவுக்குத் தெரியாது. அதனால் திடீரென்று சுந்தாராஜ் தன்னிடம் பேசிய போது அவள் வெகுவாகக் கோபமுற்றாள்.

"மாலா உன்னைக் கல்யாணம் பண்ணலாம்னு நினைக்கிறேன்." என்றுதான் கேட்டான்.



அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"சே! நீங்கள்ளாம் ஒரு ஃபிரெண்டா! ரொம்பக் கேவலமா இல்லே. என்னன்னு நினைச்சீங்க. வெளியே போங்க முதல்லே." என்று சீறினாள்.

அவன் வேதனையுடன் அவளைப் பார்த்தான்... ஆனால் அடுத்த கணம் வெளியேறி விட்டான்.

இரண்டு மூன்று முறை அலுவலகத்திற்கு வந்தான். பேசிப் பார்த்தான். ஆனால் நிர்த்தாட்சண்யமாய் மறுத்து விட்டாள்.

அதற்குப் பிறகுதான் அப்படி ஒரு முடிவை எடுத்து திருச்சிக்கு வந்து விட்டாள். ஆனால் இங்கே இப்படி அவன் வந்து நிற்பான் என்பது அவள் எதிர்பாராதது.

முரளிதரனுக்கு போன் பண்ணலாமா என்று நினைத்தாள். பிறகு அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டு கதவைச் சாத்தி இரண்டு தாழ்ப்பாளையும் அழுத்தப் போட்டாள்.

உள்ளே அச்சத்துடனேயே வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

ஐந்து நிமிடமாயிற்று!

பத்து நிமிடமாயிற்று!...

அரைமணி நேரமாயிற்று. கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே இல்லை.

ஒரு வேளை கதவைத் திறக்கட்டும் என்று அழிச்சாட்டியமாய் காத்துக் கொண்டிருக்கிறானோ என்று என்று மெதுவாக அச்சத்துடன் கதவைத் திறந்து பார்த்தாள்.

அச்சத்துடன் முன்னே பார்வையை ஓட்டினாள். கதவுக்கு முன்னாலே எதுவும் இல்லை.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்த்தவள் தூரத்தில் கேட்டைப் பார்த்தாள்....

திகைத்துப் போனாள்.

அந்த கேட்டுக்கு முன்பாகத்தான் சற்று நேரத்துக்கு முன்பு மினிடோர் நின்றிருந்தது. இப்போது நடமாட்டத்தின் சுவடே இருக்கவில்லை.

திகைத்துப் போய் விட்டாள்!

கனவு கினவு கண்டு விட்டோமா என்று யோசனையாக இருந்தது.

மகள் எழுந்திருக்கவும் "திவ்யாக் குட்டி" என்று அவளைக் கொஞ்சிச் சீராட்டிக் குளிக்கச் செய்து புறப்பட வைக்க சரியாக இருந்தது. அவள் குழந்தைக்கு டிபன் எடுத்து வைத்து விட்டு வருவதற்குள்ளாக குழந்தை முன்போர்ஷனுக்கு ஓடி விட்டு வந்தாள்.

அவளது வீட்டுச் சொந்தக்காரர் வீட்டில் போர்ட்டிகோவைத் தொட்டாற் போல் ஒரு அலுவலக அறை மாதிரி இருந்தது. அந்த அலுவலக அறைக்கு அவர்களது ஹாலில் இருந்தும் உள்ளே போகலாம். அந்தக் கதவை மூடி விட்டால் அது தனி அறையாக இருக்கும். அந்த விஷயம் அவள் யோசிக்கவில்லை.

குழந்தை காலையில் புறப்படுவதற்குள்ளாக இரண்டு மூன்று முறையாவது முன் வீட்டுக்கு ஓடி விட்டு வருவாள். "அம்மா இவளைப் பாரு." என்று முன் வீட்டுக் குழந்தையைப் பத்தி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பாள்.

இன்றைக்கு அப்படி ஓடிவந்த குழந்தை "அம்மா. அம்மா. சுந்தர் அங்கிள் இங்கயே வந்துட்டாங்க." என்று குரல் கொடுக்க



அவள் அதிர்ச்சியுடன் பார்வையைத் தொடர விட்டாள். ஆனால் யாரும் வரவில்லை.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. போன வாரத்தில் ஹவுஸ் ஓனர் அவர்களது வீட்டுக்கு முன்பாக ஏதோ தட்டிக் கொண்டிருந்தார்கள். அவள் பெரிதாக எதுவும் கவனிக்கவில்லை.

இப்போது நினைவுக்கு வந்தது. அந்த அலுவலக அறை தனியாக இருக்கிற மாதிரி ஏதோ கதவு வைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை அதில்தான் சுந்தர்ராஜ் வந்திருப்பாரோ என்று.

அது எதுக்கு சந்தேகம். அப்புறம் போய்ப் பார்த்து விட்டு வந்தால் போகிறது என்று எண்ணிக் கொண்டாள்.

குழந்தையை ஆட்டோவில் ஏற்றி விட வந்தவள் திரும்பிப் பார்த்தாள். சரியாக அவன் குழந்தைக்கு டாட்டா காட்டிக் கொண்டிருந்தான். குழந்தை அவளைக் கூட கவனிக்காமல் அவனுக்குச் சுவாரசியமாக டாட்டா காட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு நிமிடம் என்று சொல்லி விட்டு ஓடிப் போய் அவன் அருகில் நிற்க அவன் குனிந்து கன்னத்தைக் காட்ட முத்தம் வைத்தாள். திரும்பக் கிடைத்த முத்தத்தை வாங்கிக் கொண்ட குழந்தை அவள் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை என்றால் அவனும் அவள் பக்கம் திரும்பவில்லை.

ஆட்டோ புறப்படும் வரை பார்த்துக் கொண்டிருந்தவள் முகம் மலர்ந்து கிடந்தது.

மெதுவாகத் திரும்பியவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். "ஹல்லோ மாலா!" என்றான்.

"ஹல்லோ" என்றாள் சுரத்தே இல்லாமல்.

"ஒரு ரெண்டு மூணு மாசம் இங்கதான் இருக்கப் போறேன். ஏதாவது ஹெல்ப் வேண்ணாக் கேளு" என்றவன் மேற்கொண்டு அவள் முகத்தையும் பார்க்காமல் சென்று அறைக் கதவைச் சாத்திக் கொண்டான்.

* * *

"முரளி! என்ன நடக்குது இங்கே! ராஜ் வந்திருக்காரு." என்றாள் மாலா போனில்.

முரளிதரன் இதை எதிர்பார்த்திருந்தான்.

"என்னம்மா... கேள்வி இது. அவன் ஏதோ வேலையாய் வந்திருக்கான்."

"நீங்கதான் இந்தப் போர்ஷன் வாடகைக்கு வாங்கிக் குடுத்ததா?" என்றாள்.

"ஆமா?"

"ஏன்?"

"அம்மா. தேவ் மாதிரி அவனும் எனக்கு ஃபிரண்டு?"

அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. விழித்தாள்.

பிறகு இறங்கிய குரலில் சொன்னாள்.

"அப்ப எனக்கு வேற வீடு பாருங்க."

"மாலு!" என்றான் சலிப்பான குரலில். "இவ்வளவு பாதுகாப்பான இடம் எங்கயும் கிடைக்காது. அதுவுமில்லாம குறைஞ்சது ஆறு மாசம் காலி பண்ணமாட்டேன்னு சொல்லியிருக்கேனேம்மா" என்றான் கெஞ்சலாக.

"................?"



"மாலு! ஒரு கர்ட்டஸிக்காக அவன் கிட்டே பேசிக்க. நானும் அவன்கிட்டே சொல்லிடறேன். மறுபடியும் பழைய பேச்சே பேசக் கூடாதுன்னு. சரியா? கண்டிப்பா அவன் நாகரீகமா நடந்துக்குவான்." என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள்.

"மடியில கனம் இருந்தாத்தானே பயப்படணும்? நீ எதுக்கு அவனை விட்டு விலகி ஓடணும். இந்த பிரபோஸல் வேண்டாம்னு நினைச்சா உறைக்க நில்லும்மா. உறுதியா வேண்டாம்னு சொல்லிடு. அதை விட்டுட்டு நீ ஏம்மா பயப்படறே?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் யோசித்தாள் "அதுதானே எதுக்கு நாம பயப்படணும்?" என்று எண்ணிக் கொண்டாள்.

"சரிங்க முரளி." என்று அரைமனசாக போனை வைத்தாள்.

முரளிதரன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அன்று மாலை சந்தித்த சுந்தர்ராஜிடம்,

"ஏதோ பாதிக் கிணறு தாண்டிருக்கடா! பாத்துடா கண்ணாடிப் பாத்திரம் மாதிரி. ரொம்ப ஜாக்கிரதையா ஹேண்டில் பண்ணணும்டா." என்றான் முரளிதரன்.

"முரளி. மாலாவைக் கஷ்டப் படுத்தறமோன்னு இருக்கு. ஆனா இந்த திவ்யாக் குட்டியை என் குழந்தையா நினைச்சுப் பழகிட்டன்டா. அவளைப் பார்க்காம இருக்க முடியலைடா?" என்றான்.

"அந்த உண்மையான பிரியத்தை அப்படியே காட்டு. கடவுள் ஏதாவது வழி விடுவாரு." என்றான்.

* * *

பரபரப்பாக வாசலில் நின்று கொண்டிருந்தாள் மாலா. கேட்டருகில் அரைமணி நேரமாக நின்று கொண்டிருந்தாள்.

ஆட்டோக்காரர் வந்து "அம்மா. சந்தர்ராஜ் சாரு ஸ்கூலுக்கு முன்னாடி நின்னுகிட்டிருக்காரு. நான் கூட்டிட்டு வந்தர்றேன். நீங்க போங்கன்னு சொல்லிட்டாரு" என்றார்.

அவர் போனதற்குப் பிறகு கேட்டில் நின்று கொண்டிருந்தாள். அரைமணி நேரத்துக்குப் பிறகு கடுப்பாகித் தன் போர்ஷனுக்குப் போகத் திரும்பினாள். ஹவுஸ் ஓனர் நின்று கொண்டிருந்தார்.

"என்னம்மா. ரொம்பப் பரபரப்பா இருக்கறே. என்ன விஷயம்?" என்றார்.

"ஆட்டோவில குழந்தை வர்ல. சந்தர்ராஜ் கூட்டிட்டு வந்தர்றேன்னு சொல்லியிருக்காரு. அதான் நிக்கறேன்" என்றாள்.

"ராஜ் தம்பிதானே! கூட்டிட்டு வந்துருவாரு. நீ போய் வேலையைப் பாரும்மா. அப்பா இல்லாத குழந்தை. முரளித்தம்பி, சந்தர்ராஜ் மாதிரி ஆளுங்ககிட்டே பழகறதுக்கு பிரியப் படுது" என்றார்.

மாலாவின் முகம் வாடியது!

பெரியவரிடம் எதுவும் பேச வழியில்லாமல் நகர்ந்தாள்.

உள்ளே போனவுடன் அழுகை கண்களில் நிரம்பியது.

"எனக்கிருக்கிற ஒரே சந்தோஷத்தை, பிரியமான மகளைக் கூட பிரிந்து விடுவார்கள் போல இருக்கே" என்ற கவலை தோன்ற ஆரம்பித்திருந்தது.

கவலையுடன் உள்ளே போனாள்.

பத்து நிமிடம் போயிருக்கும்!

"அம்மா. அம்மா! கதவைத் திற!" என்ற குழந்தையின் குதூகலமான குரல் கேட்டவுடன் அவளுக்கு ஒரு பக்கம் வேகம் இதயத்தில் குத்துகிற மாதிரி இருந்தது.



முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு திறந்தாள்.

குழந்தை "தொப்" "தொப்" பென்று குதித்துக் கொண்டிருந்தாள். அப்படியே உள்ளேயும் குதித்துக் கொண்டு வந்தாள்.

"அம்மா. இங்கே பாருங்க. பலூன் பொம்மை என்று குதிக்க அவன் சட்டென்று திரும்பி நடந்தான்.

"அங்கிள். போகாதீங்க. உள்ளே வாங்க. அம்மா டீ போடுங்க" என்று ஆணையிட்டாள் குழந்தை.

அவள் மௌனமாகக் கதவைத் திறந்து கொண்டு நின்றாள்.

அவன் உள்ளே வந்தான்.

மாலா மௌனமாக உள்ளே போய் தேநீர் கலந்து கொண்டு வந்தாள். அதற்குள் குழந்தை தன் ஹோம் வொர்க்கை எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் சந்தேகம் கேட்டாள். தீவிரமான கவனம் கொடுத்து குழந்தைக்கு அவன் சொல்லிக் கொடுப்பதைப் பார்த்து அவளுக்கே ஒருமாதிரியாகிப் போனது.

எதிரில் வந்து அமர்ந்தாள்.

"நான்... நானே... போய் தினமும் கூட்டிட்டு வரட்டுமா? இந்த ரூ மன்த்ஸ் மட்டும்..." என்று தயங்கினான்.

"உங்களுக்கு எதுக்கு சிரமம்?" என்றாள் கீழே பார்த்துக் கொண்டு.

"மாலா நான் உங்கிட்டே ஒரு ப்ரபோஸல் சொன்னேன். அது உனக்கு பிடிக்கலேங்கறதுக்காக நீ ஊரை விட்டே வந்திருக்க வேண்டாம். நீ மறுத்ததுக்கப்புறமும் உன்னைத் தொல்லை பண்ற அளவுக்கு நான் ஒண்ணும் இன்டீசன்ட் இல்லேங்கறதைப் புரிஞ்சுக்கம்மா. ப்ளீஸ்!" என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்து கொண்டாள்.

"என்னால குழந்தையைப் பார்க்காம இருக்க முடியலை. இன்ஃபாக்ட் அந்தப் ப்ரபோஸலையே நான் குழந்தையோட நன்மைக்காகத்தான் சொன்னேன். ஒரு தடவை கல்யாணம் பண்ணினதிலேயே நான் பாடம் கத்துகிட்டேன். குழந்தைக்காக ஒரே இடத்துல இருக்கலாம்கற ஒரே காரணத்துக்காகத்தான் இந்த ப்ரபோஸலைச் சொன்னேன். வேற எந்தக் காரணத்துக்காகவும் இல்லை." என்றான்.

அவள் தொடர்ந்து மௌனம் காத்தாள்.

"நான் இனிமே அதைப் பத்திப் பேசலே. குழந்தை கூடப் பழக மட்டும் அனுமதிச்சீன்னா போதும். ஏதோ மனசுக்குக் கொஞ்சமாவது அமைதி கிடைக்கும்."

தேநீரைத் தொடவேயில்லை. எழுந்து போய் விட்டான்.

புத்தகப் பையில் தனது புத்தகங்களை வைத்து விட்டு வரப் போன குழந்தை அறையை விட்டு வெளியே வந்து "அம்மா, எங்கே ராஜ் அங்கிள்" என்றது.

அவள் "போயிட்டாரு" என்றாள். திவ்யா அவள் சொல்கிற எதையும் கேட்கவில்லை." அங்கிள் அங்கிள் என்று அவன் போர்டிகோக்கு ஓடி விட்டாள்.

அவளிடம் கோபமாகப் பேச வேண்டும் என்று நினைத்தது போக அவன் தான் சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்லி விட்டுப் போய்விட்டான்.

அந்தக் கணத்தில் அவளுக்குத் தோன்றியது குழந்தை தனது அப்பா ஏக்கத்தை தனக்கே உரிய விதத்தில் வெளிப்படுத்துகிறது என்று.



ஆழ்ந்த கவலையுடன் அமர்ந்து விட்டாள். குழப்பம் மிஞ்சியது.

குழந்தையை மிரட்டியாவது அழைத்து வந்து விடலாம் என்று போனாள். அவனது அறை வாசலில் அவன் கதை சொல்லும் குரல் கேட்டது. குழந்தையின் கலகலச் சிரிப்புக் குரல் கேட்ட அவள் தயங்கி நின்றாள்.

பிறகு மெல்ல தன் அறை நோக்கிச் சென்றாள்.

## 16

செல்போனை காதுக்குக் கொடுத்து அந்த செய்தியைக் கேட்ட மாலா பதறிப் போனாள்.

மேலாளரிடம் சொல்லி விட்டு கண்ணீரும் கம்பலையுமாக அந்தப் பிரபலமான ஆஸ்பத்திரிக்கு ஓடினாள்.

குழந்தைகள் எல்லாம் ஆட்டோவில் குதித்துக் கொண்டும், ஆடிக் கொண்டும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்கையில் எதிரே ஒரு பஸ் வேகமாக வரவே ஆட்டோ டிரைவர் சற்றே ஆட்டோவை வளைத்து ஒதுக்க.... குழந்தைகள் இரண்டு பேர் வெளியே விழுந்து விட்டார்கள்.

இடது பக்கம் நெற்றியில் அடி. இரத்தம் வழிய ஆரம்பித்தவுடன் பயந்து போய் டிரைவர் ஆஸ்பத்திரிக்கு ஓட்டினார். அந்த இரண்டு குழந்தைகளில் திவ்யாவும் ஒருத்தி.

ஆட்டோ டிரைவர் எதிரே வந்த ஆட்டோ டிரைவரிடம் விவரம் சொல்ல அவர் மாலாவின் வீட்டுக்கு வந்து சொல்லலாம் என பார்க்கையில் அவள் புறப்பட்டுப் போயிருந்தாள்.

இப்போதெல்லாம் குழந்தையை இந்தப் புறம் அனுப்பியவுடன் அவள் புறப்பட்டுப் போய் விடுகிறாள். ஒரு வகையில் இது ஒரு தற்காப்பு ஏற்பாடு என்று சொல்லலாம். காலை நேரத்தில் ஏதாவது உதவி தேவை என்று சந்தர்ராஜ் வந்து நின்றால் என்ன செய்வது என்ற பயம்.

அவள் என்னவோ இவள் இருக்கிற பக்கமே திரும்பியும் பார்ப்பதில்லை.

ஆட்டோ டிரைவர் வந்து சொல்ல அடித்துப் பிடித்துக் கொண்டு பைக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். குழந்தைகள் இருவருக்கும் தையல் போட வேண்டுமென்றார்கள்.

களைப்பாக குழந்தை படுத்திருப்பது கண்டு அவன் மனம் உருகிப் போனது.

"அங்கிள்" என்று பலவீனமாக முணுமுணுத்தபடி குழந்தை அவனிடம் தாவிக் கொண்டாள்.

டாக்டர் வந்து "முதலுதவி மட்டும் செஞ்சிருக்கோம். பெரிய காயம் இல்லை. ஸ்டிச்சஸ் போடணும். ஆனா ஸ்கேன் எடுத்துப் பார்த்துரலாம்" என்றார். இந்த இடைவெளியில் அவன் முரளிதரனுக்கு போன் செய்திருந்தான்.

"முரளி நீயே மாலுவுக்கு போன் பண்ணிச் சொல்லிடுடா. என் குரல் கேட்டா கட் பண்ணினாலும் பண்ணிடுவா" என்றான்.

முரளிதரன் போய் மாலாவை பைக்கில் அழைத்து வந்தான்.



அதற்குள்ளாக மரத்துப் போக ஊசி போட்டு தையல் போட்டார்கள். சின்னத் தையல் என்றாலும் ரத்தக் கறை அங்கங்கே இருக்க கட்டுப்பாட்டை இழந்தாள் மாலா.

ஆதரவு தேடுபவள் போல் சுற்று முற்றும் பார்த்தாள். இதழ்கள் பிதுங்க ஒரு தேம்பல் ஒன்று கிளம்பியது.

நிலைமை புரிந்த முரளிதரன் "போடா. போடா. போய் ஆறுதல் சொல்லு." என்று முன்னால் தள்ளி விட்டான்.

"மாலு" என்றான் அருகில் போய் ஆதரவாக நிற்க அவள் சட்டென்று அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். தேம்பித் தேம்பி அழுதாள். "மாலு. ப்ளீஸ்! அழாதே! ஒன்னும் பெரிய காயமில்லை. தையல் போட்டாச்சு. எதுக்கும் ஒரு ஸ்கேன் எடுக்கறோம். ஒரே நாள்தான். நாளைக்கு குழந்தை ஸ்கூலுக்கு போயிரலாம்" என்றான்.

மெல்ல விசும்பல் அடங்கியது. அடங்கினாள். கூச்சத்துடன் விலகிக் கொண்டாள்.

"ஐ ம் சாரி" என்றாள்.

"நோ பிராப்ளம்" என்று அவன் தோளைக் குலுக்கினான்.

சற்றுத் தொலைவில் நின்றபடி இதைப் பார்த்துக் கொண்டு நின்ற முரளிதரன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

ஒருநாள் மட்டும் ஆஸ்பத்திரியில் தங்கினார்கள். மறுநாள் காலை அனுப்பினார்கள்.

உடனிருந்து கவனித்தான் சந்தர்ராஜ். இயல்பாகப் பேசும் நிலைக்கு வந்திருந்தார்கள். வீட்டுக்கு வந்த இரவு!

"நான் அங்கிள்கிட்டே தான் இருப்பேன்" என்று அழுதாள் குழந்தை.

மாலாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

வீட்டுக்காரம்மா வந்து "நான் வேண்ணா கூடத் தங்கறேன். நீயும் இங்கயே தங்கு தம்பி" என்றார்.

சுந்தர்ராஜ் கூடவே தங்கினான்.

குழந்தையை மார்பில் சாய்த்துக் கொண்டு கதை சொல்லி, டி.வி. பார்க்க வைத்து சாப்பிட வைத்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று என்று எல்லாவற்றையும் அவனே பார்த்துக் கொண்டான்.

முரளிதரன் அன்றைக்கு வந்தவன் வீட்டுக்காரம்மாவிடம் போய்ப் பேசி விட்டுப் போனான்.

அன்றைக்கு மாலை!

வீட்டுக்காரம்மா "மாலாம்மா! எனக்கென்னவோ வயிறு சரியில்லை. இன்னைக்கு நீங்களே பாத்துக்கறீங்களா?" என்றார்.

மாலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"மாலு! வொரி பண்ணிக்க வேண்டாம். பாப்பாவை நான் என் ரூம்ல வச்சுக்கறேன்" என்று எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

பாங்காகப் பார்த்துக் கொண்டான். ஆனால் மாலாவுக்குத்தான் உறக்கம் வரவில்லை. அதிகாலையில் போய் எடுத்துக் கொண்டு வந்தாள்.

அன்று பிற்பகலில் மாமனார், மாமியாருக்கு போன் செய்தாள்.

"ஏம்மா. இத்தனை நாளா சொல்லலை. நைட்டே கிளம்பி வர்றோம்." என்றவர் திரும்பவும் ஒரு மணிநேரம் கழித்து மறுபடியும் போன் செய்தார்.

"மாலா! உங்க மாமனார் ரொம்பக் கோபமாக இருக்காங்க. அவனாத்தானே போனான். அவனே வரட்டுங்கறாரு." என்றார்.



மாலா முகம் வாடிப் போனாள். சற்று நேரம் கழித்து சுந்தர்ராஜ் வந்த போது குழந்தை அவனிடம் "அங்கிள். அம்மா பாட்டி தாத்தாவுக்கு போன் செஞ்சாங்க. அவங்க வர்லேன்னுட்டாங்க." என்று ஒப்பித்தாள்.

சுந்தர்ராஜின் முகத்தில் வேதனையின் நிழல் படிந்தது.

அன்றிரவு!

குழந்தை உறங்கியபின் மாலாவிடம் கொண்டு வந்து ஒப்படைத்தான்.

"மாலா! நான் நாளைக்கு ஊருக்குப் போறேன். நீயும் வர்றதானா உங்க மாமனார்கிட்டே கொண்டு போய் சேத்தர்றேன். எனக்காக நீ எங்கயும் ஓடி ஒளிய வேண்டாம். ஒன்னு மட்டும் சொல்றேன். உன்னோட உடல் ரீதியா வாழணுங்கறதுக்காக நான் இந்தக் கல்யாணத்துக்கு ஏங்கலை. நண்பனுக்காக. உயிரைக் கொடுத்து பழகினோமே அவனுக்காக. அவன்கிட்டே கொடுத்த வாக்குறுதிக்காக." என்றவன் குலுங்கி அழுது விட்டான்.

மாலா திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தானே தேறிக் கொண்டான். எழுந்து தேவேந்திரனின் படத்துக்கு முன்பு நின்று தழுதழுத்த குரலில் சொன்னான்.

"டேய். தேவா! நீ சாகும் போது என்கிட்ட வாங்கிகிட்ட வாக்குறுதிக்காக நானும் எவ்வளவோ போராடிப்பாக்க. ஆனா நான் தோத்துட்டேன். நான் மட்டுமல்ல நீயும் தான் தோத்துட்டே." என்றவன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அந்தப் படத்தின் முன்னால் வைத்தான்.

வெளியேறி விட்டான்.

அவள் கடிதத்தை எடுத்துப் படித்தாள்.

அன்புள்ள மாலாவுக்கு!

சுந்தர்ராஜ் எழுதுவது. நீ நினைப்பது போல் உன்மேல் வைத்த ஆசையினால் இந்தத் திருமணத்திற்காக அலையவில்லை. இறக்கும் தருவாயில் தேவேந்திரன் என்னிடம் ஒரு வாக்குறுதி வாங்கிக் கொண்டான். நீயும் உன் மனைவியை பிரிந்து மனசளவிலே நொந்து போயிருக்கே. மாலுவும் என்னைப் பிரிந்து வேதனைப் படப் போறா. உடனடியா இல்லேன்னாலும் கொஞ்ச நாள் கழிச்சாவது நீ அவளை ஏத்துகிட்டீன்னா என் ஆத்மா சாந்தியடையும். பத்திரமான கைகள்ல குழந்தையையும் மாலுவையும் ஒப்படைச்சுட்டுப் போறோம்கற நிம்மதியாவது எனக்கிருக்கும்'னு சொன்னான். நானும் வாக்குறுதி கொடுத்தேன். அவன் கிட்டே வாக்குறுதி கொடுக்கும் போது முரளியும் கூட இருந்தான்.

நீ தேவேந்திரனை மறக்க முடியாம தவிச்சுகிட்டிருந்ததைப் பார்த்து நாங்க நாலு வருஷமா இந்தப் பேச்சையே எடுக்கலை. ஆனா குழந்தைபோட ஏக்கத்தைப் பார்த்துத்தான் இதுக்கப்புறமும் ஒத்திப் போட முடியாதுங்கற காரணத்துனாலதான் நான் இந்தப் பேச்சை எடுத்தேன். நானும் வாழ்நாள் முழுக்கத் தனியாத்தான் இருக்கப் போற முடிவுலதான் இருக்கேன். திவ்யாக் குட்டிக்கு அப்பாவா மட்டும் இருக்கற வாய்ப்புக் கிடைச்சாலே நான் மகிழ்ச்சியடைவேன். தேவின் ஆத்மாவும் சாந்தியடையும். முரளி, உங்க பேரண்ட்ஸ், உங்க மாமனார், மாமியார் எல்லாருக்கும் தேவ் தனித் தனியா கடிதங்கள் கொடுத்திருந்தான். நான் போன மாதம் அவர்கள் எல்லாரிடமும் அந்தக் கடிதங்களை சேர்த்துட்டேன். அதுக்கப்புறம் எல்லாரும் சம்மதம் கொடுத்ததற்குப் பிறகுதான் நான் உன்கிட்டே பேசினேன். ஆனா நீ அடிப்படையையே தப்பாப் புரிஞ்சுகிட்டே.



நீயும் தேவும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தீங்கன்னு எனக்குத் தெரியும். தேவேந்திரனை மறந்துட்டு என்கூட ஒரு வாழ்க்கை வாழ்ன்னு எப்போதும் நான் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன். தேவ் உன் மேல் வைத்த காதலும் என்னிடம் பூண்ட நட்பும் புனிதமானதுங்கறதை என்னைக்குமே எந்தக் குற்ற உணர்வும் இல்லாம நாம மனசுல போற்றி வச்சுக்கலாம்னுதான் நான் இப்பவும் நினைச்சேன். ஆனா நடக்கலை.

இப்பவும் உன்மேல் எனக்குக் கோபமில்லை. நம்ம நாட்டுப் பண்பாடு உன்னதமானதுதான். ஆனா சில விஷயங்கள்ல கரடு முரடானதா இருக்கு.

உனக்கு ரொம்பப் பிடிச்ச காந்திஜி ஒரு முறை சொன்னார். நவகாளி கலவரம் நடந்து முடிஞ்சப்ப சொன்னார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இளைஞர்கள் வாழ்க்கை கொடுக்க முன் வரணும்னு வேண்டுகோள் வைக்கறேன்னு.

இப்பக் கூட நீ யோசிக்கலாம் மாலா என்னை வெறுத்துடாதே. எப்பவும் நான் உன் நண்பன்தான். அப்பப்ப குழந்தையை வந்து பாக்கறதுக்கு மட்டுமாவது அனுமதி. ஏன்னா அவளை நான் என் குழந்தையாவே நினைச்சுப் பழகிட்டேன். வாழ்நாள் முழுக்கத் தனிமையை அனுபவிக்கப் போற எனக்கு அந்தக் குழந்தை ஒன்னுதான் கொஞ்சம் நிம்மதின்னு நினைக்கறேன்.

என்றும் உனக்காகக் காத்திருக்கப்
போகும் உன் அன்பு நண்பன்
சுந்தர்ராஜ்.

கண்களில் கண்ணீர் வழிய அந்தக் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தாள்.

திவ்யா அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கலகலவென சிரிப்பதும், அவன் மார்பில் ஒண்டிக் கொண்டு உறங்கும் போது இருவர் முகத்திலும் தெரியும் எல்லையற்ற நிம்மதியும் அவள் மனதுக்குள் வந்து வந்து போயின.

கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். முரளிதரனுக்கு போன் செய்தாள்.

''ஆமம்மா! அவன் சொன்னதெல்லாம் உண்மை.தேவேந்திரனுக்கு நான் வாக்குக் குடுத்துட்டேன். இங்க மட்டுமில்லடா. மாலு எங்க போனாலும் சரி. நான் போவேன். என்னோட ஒரே வீட்ல இல்லன்னாலும் என்னோட கண் பார்வையிலயாவது இருக்கற மாதிரிப் பாத்துக்குவேன். பாதுகாப்பேன்னு சொல்லிட்டுத்தான் இங்க வந்தாம்மா. அவனும் வசதியானவன்தாம்மா. அவனோட பிஸினஸையெல்லாம் விட்டுட்டு இங்க வந்து உட்காந்திருக்கான். அது மட்டுமில்லம்மா எல்லாருக்கும் கடிதம் குடுத்த தேவேந்திரன் உனக்கும் குடுத்திருக்கான்ம்மா. ஆனா உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்ச ரெண்டு மாசம் கழிச்சுத்தான் குடுக்கச் சொல்லியிருக்கான். அதுக்கும் எங்கிட்ட வாக்குறுதி வாங்கியிருக்கான்'' என்றான்.

சற்று நேரம் அவள் ஒன்றும் பேசவில்லை.

அவனே கேட்டான். ''என்னம்மா!'' என்று.

''முரளி நான் இப்ப என்ன செய்யட்டும்?'' என்றாள்.

''போம்மா போய் சம்மதம் சொல்லு. உனக்கு சம்மதம் இல்லாம உனக்கு எந்தத் தொந்தரவும் தரமாட்டான்ம்மா. உன் பிரதர் வேற தினமும் போன் செய்து என்னாச்சு என்னாச்சுன்னு துளைச்செடுக்கறாப்ல. நீ செட்டிலாகாம அவன் செட்டிலாக மாட்டானாம்.



குழந்தைக்கு உடம்பு சரியில்லேன்னவுடனே ஸ்டேட்ஸ்ல இருந்து புறப்பட்டுட்டான். அவனுக்கும் முப்பதாச்சில்ல. என்னம்மா நீ?'' என்றான்.

''அண்ணா! நான் போய் பேசவா?'' என்றாள் தயங்கிய குரலில்.

''ஆமாம்மா. இனி அவன் வந்து பேச மாட்டான். நீதான் பேசணும்'' என்றான்.

மணி பத்தாகி விட்டது.

தயக்கத்துடன் அவன் அறை நோக்கிப் போனாள்.

அவனது அறையில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. சூட்கேஸில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான். மற்ற சாமான்கள் பேக் செய்யப்பட்டுத் தயாராய் இருந்தன.

அவன் அறையின் வாசலில் படபடப்பாய் நின்றாள். அவன் திரும்பிப் பார்த்தான். பார்வையில் வெறுமை தெரிந்தது.

''வா மாலு!'' என்றான்.

அவள் உள்ளே வந்தாள். ஆனால் மிடறு விழுங்கிக் கொண்டு நின்றாள்.

''சொல்லு மாலு!'' என்றான்.

''நீங்க... நீங்க... இனிமே... இனிமே...'' என்று திணறினாள்.

''ம்...''

''திவ்யாவுக்கு... உங்களை... அப்பான்னு... கூப்பிடப் பழக்கி விடுங்க.'' ஒரு வழியாக சொல்லி முடித்து விட்டாள்.

''மாலு!'' என்றான் நம்ப முடியாதவன் போல்.

''ஆமா! நான் முடிவு பண்ணிட்டேன். ஒரு வாரத்துக்குள்ளே மேரேஜ் ஏற்பாடு செய்ங்க'' என்றாள். போய் விட்டாள்.

பத்து நிமிடம் கழித்து கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு அவன்தானோ என்று கதவைத் திறந்தாள்.

வீட்டுக்காரம்மா குறும்பாகச் சிரித்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

"இப்ப எனக்கு வயிறு சரியாப் போச்சு. அப்பாவையும் மகளையும் பிரிச்ச பாவம் எனக்கு வேண்டாம்." என்றார்.

அவருக்குப் பின்னாலே சந்தர்ராஜ் லேசாக சிவந்த முகத்துடன் நின்றான்.

அவனுக்கும் குழந்தைக்கும் கட்டிலைக் கொடுத்து விட்டு வீட்டுக்காரம்மாவுக்கு கடந்த நாட்களைப் போலவே சோபாவை பிரித்துப் போட்டுக் கொடுத்தாள். அவள் தரையிலே பாயைப் போட்டுக் கொண்டு படுத்தாள்.

குழப்பத்தோடேயே இருந்தாள். நடு இரவில் எழுந்து அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

சந்தரராஜின் கழுத்தைக் கட்டிக் கொண்டு உறங்கிய குழந்தை உறக்கத்திலே ஏதோ கனவு கண்டாள் போலும். சிரித்துக் கொண்டு தூக்கத்தில் ஏதோ பேசிக் கொண்டு புரண்டு அவன் மேல் காலைப் போட அவன் தூக்கத்திலேயே குழந்தையின் முதுகை நீவிக் கொடுத்தான்.

திரும்பினாள். கண்கள் பனிக்கக் கணவனின் படத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள். பிறகு ஹாலில் இருந்த படத்தைக் கழற்றிக் கொண்டு போய் பூஜை அறையில் மாட்டினாள்.



# 17

உலகம் கொஞ்சம் மாறித்தான் போயிருக்கிறது என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான் முரளிதரன். உலகம் பொய்மையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை விடுவித்துக் கொண்டுதான் இருக்கிறது. இல்லாவிட்டால் இந்தத் திருமண ரிசப்ஷனுக்கு இத்தனை பேர் மலர்ந்த முகத்துடன் வந்து வாழ்த்துவார்களா என்ன? மாலாவின் பெற்றோரும், சந்தரராஜின் பெற்றோரும் இந்தத் திருமணத்துக்கு முனைப்பாக இருந்ததில் ஆச்சரியம் இல்லை. தேவேந்திரனின் பெற்றோர்கள் முனைப்பாக இருந்தது தான் ஆச்சரியம்.

மாலாவின் சம்மதம் கிடைத்ததும் உடனடியாக அவர்களை சென்னைக்கு அனுப்பினான். மாலா பத்து நாள் லீவில் போனாள். அவனும் உடன் போய்விட்டு வந்தான்.

பத்தே நாட்களுக்குள்ளாக திருமணம் ஏற்பாடு செய்தார்கள். மாலாவின் சகோதரன் விடுமுறையில் வந்தவன் பத்தே நாளில் செல்ல வேண்டியிருந்தது ஒரு காரணம்.

சிறிய அளவில் ஒரு ரிசப்ஷன். முன்னூறு பேரை மட்டும் அழைத்தார்கள். வந்திருந்தவர்கள் எல்லாரும் நல்ல காரியம் செய்தீர்கள் என்று தேவேந்திரனின் பெற்றோரிடம் போய் சொல்லி விட்டுப் போனார்கள்.

மாலாவின் பெற்றோர் இரண்டு மாதங்கள் கழித்து மகனிடம் போய் கொஞ்ச நாள் இருந்து விட்டு வர முடிவெடுத்தார்கள்.

இப்போது மாலா இருந்த வீட்டையே இரண்டாகப் பிரித்து தேவேந்திரனின் பெற்றோர் உடனிருப்பதாக முடிவு செய்யப் பட்டது. ஆனால் வேறொரு திருப்பம் ஏற்பட்டது.

மாலாவுக்கு டிரான்ஸ்ஃபர் கிடைக்கவில்லை. குறைந்தது ஒரு ஆறுமாதமாவது ஆக வேண்டும் என்றார்கள். அது வரையிலும் திருச்சியிலிருந்தே தன் பினினலை பார்த்துக் கொள்வது என்று சுந்தர்ராஜ் முடிவு செய்தான்.

இப்போது இருக்கிற வீட்டிலேயே இருப்பதாக முடிவு.

முரளிதரன் ரிசப்ஷன் சமயம் சென்னையிலேயே இருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்தான். சட்டப்படி பதிவும் செய்து கொண் டார்கள்.

ரிசப்ஷன் முடிந்து கிளம்பும் போது தேவேந்திரனின் பெற் றோர்களிடம் சொன்னான்.

"அப்பா! உங்களை மாதிரி எல்லாப் பெரியவங்களும் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்." என்று வெகுவாகப் பாராட்டினான். அப்பா அந்தக் கடிதத்தை கொண்டு வந்து கொடுத்தார். படித்தான்.

அன்புள்ள அப்பாவுக்கு.

எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது நான் பிழைக்க மாட்டேன் என்று. ஆனால் மாலாவையும் குழந்தையையும் விட்டு விட்டுப் போகிறேனே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. என்னை மன்னித்து விடுங்கள் அப்பா. உங்களை ஆயுள் முழுவதும் பாதுகாத்து, உங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் எதையும் என்னால் செய்ய முடியாமல் போய் விட்டது. இப்போதுதான் எனக்குத் தோன்றுகிறது உங்களுக்கு இன்னொரு குழந்தை இருந்திருக்கலாம் என்று. ஒரு மாடு உதைத்தாலும் இன்னொரு மாடு



பால் கொடுக்கும் என்பார்களே அது மாதிரி. ஆனால் என்ன? உங்களுக்குத்தான் மாலா இருக்கிறாளே. அவளை மகளாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

நினைத்துப் பாருங்கள் அப்பா! ஒரு இளம்பெண் அதுவும் ஒரு பெண் குழந்தையுடன் எத்தனை நாளைக்குத் தனியாக இருக்க முடியும்.

ஜெயபால்கரன் என்பவரின் கவிதைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. தன் மனைவியைப் பார்த்துச் சொல்வது போல் அமைந்தது.

"நான் போனால் என் நினைவுகளோடு
உன்னை வாழ வைக்கிறார்கள்.
நீ போனால் உன் தங்கையோடு
என்னை வாழ வைக்கிறார்கள்.

அப்பா! உங்களையும் மாலாவையும் வாழ்நாள் முழுக்க பாதுகாக்க வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருக்கிறது. ஆனால் முடியாது. ஆனால் என் நண்பன் சுந்தரராஜால் முடியும். அவனிடம் நான் பேசியிருக்கிறேன்.

* * *

கொஞ்ச நாள் கழித்து அவனுக்கும் மாலாவுக்கும் திருமணம் செய்து வையுங்கள் அப்பா. ஏனென்றால் மாலா உங்கள் மகளும் கூட. அவர்கள் இணைந்தால் என் மகளுக்கு ஒரு அற்புதமான அப்பா கிடைப்பான். உங்களுக்கும் ஆதரவு கிடைக்கும். என் ஆத்மா சாந்தியடையும்.

என் மகளின் சிரிப்பில் நீங்கள் என்னைக் காணலாம். யார்? நானே ஒரு வேளை அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்தாலும் பிறக்கலாம். மீண்டும் என் மாலாவுக்கு புது வாழ்க்கை தாருங்கள்

அப்பா. தூக்கில் இருந்தாவது நான் இந்த மகிழ்ச்சியைப் பார்க்கக் கூடும். அந்த வாய்ப்பை என் ஆத்மா பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள் அப்பா. நான் தேவேந்திரன் அப்பா. தேவ லுலகில் இருந்தாவது நான் அந்த வாய்ப்பை பெறக்கூடும் அப்பா.

அன்புடன்

தேவேந்திரன்.

முரளிதரனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. "அப்பா! தான் தேவேந்திரனுக்கு நண்பன்னு சொல்லிக்கறதுல ரொம்பப் பெருமைப் படறேன்ப்பா. தான் போனதுக்குப் பின்பும் தன் மனைவியின் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நினைக்கறதுக்கு எவ்வளவு பெரிய மனசு வேணும்?" என்றான்.

"என்னவோப்பா எதிர்காலம் எங்களுக்கு என்ன வச்சிருந் தாலும் சரி. அந்தப் பொண்ணாவது நல்லா இருக்கட்டும்" என்றார்.

"அப்பா! கவலையே படாதீங்க! சுந்தர்ராஜ் உங்களை சொந்த மகனாப் பாத்துப்பான். அப்படி இல்லேன்னா என்னப்பா திருச்சி வந்துடுங்க. நான் பாத்துக்கறேன் உங்களை." என்றான்.

ஆறுதல் சொல்லிக் காரில் கிளம்பி வந்தார்கள்.

* * *

இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன!

திருமணம் முடிந்து அவர்கள் ஊர் வந்து சேர்ந்த சமயம்,

"அப்பாடா! நல்லபடியா வந்து சேர்ந்தீங்களா!" என்று வர வேற்றார் வீட்டுக்காரம்மா.

"முரளித் தம்பி நல்ல காரியம் செஞ்சீங்க" என்று சிரிக்கவும் தான் மாலாவுக்கே நடந்த எல்லாவற்றிலும் முரளிதரனுக்கு முக்கியப் பங்கு இருந்தது என்பது புரிந்தது.



"முரளி அண்ணா நீங்களும் இந்தச் சதித் திட்டத்துக்கு உடந்தையா?" என்றாள் பொய்க்கோபத்துடன்.

அவன் சிரித்தான். உள்ளே போனார்கள்.

"அப்படிப் பாத்தா இப்படி ஒரு சதித் திட்டத்தை ஆரம்பிச்சதே தேவேந்திரன்தானே! அவன் போட்ட ஆர்டரும் வாங்கின வாக்குறுதியும்தானேம்மா இத்தனைக்கும் காரணம்" என்றான்.

சட்டென்று ஒரு அமைதி. சற்றே சங்கடமான அமைதி நிலவியது.

மாலா சற்றே சங்கடமாக அமர்ந்திருந்தாள். சட்டென்று சுந்தர் ராஜ் இடையில் புகுந்து "டேய்! முரளி. நம்ம ஹெச்.ஓ.டி. கிட்டே எக்குத் தப்பா ஜோக் சொல்லி மாட்டிக்கிட்டானே ஞாபகம் இருக்கா?" என்று பழைய கதைகளைப் பேச ஆரம்பிக்கவும் மீண்டும் சூழ்நிலையில் கலகலப்பு பரவியது.

"ஆமா! மாலா ஏகப்பட்ட குறும்பு செய்வான். ஆனா எல்லாருக் கும் அவனைப் பிடிக்கும். யாருக்காவது ஏதாவதுன்னா முதல் ஆளா நிற்பான். நாங்க கூட அவனுக்கு ஆக்ஸிடென்ட் ஆனப்ப கோபத் தில குதிச்சோம். அப்பத்தான் சொன்னான். இப்ப எனக்கு கையோ காலோ போயிருந்தாக் கூட நான் உயிரோட இருந்தேன்னா நடக்கறது வேறடா. ரெண்டுல ஒன்னு பாத்துடுவேன். விட்ருங்க. மாலாவும் திவ்யாவும் நிம்மதியா இருக்கட்டும். இதோட விட்ருங்க. அப்படின்னுட்டான்." என்றான்.

சட்டென்று மாலா அழுது விட்டாள். வெடித்து அழுதாள்.

அழ விட்டார்கள்.

அருகில் அமர்ந்து கொண்ட சுந்தர்ராஜ் சொன்னான். "மாலு! இப்ப மட்டும் இல்லே. எப்பவும் நீ எங்ககிட்டே தேவைப் பத்தி

ஃப்ரீயாப் பேசலாம். நீ அவனோட வாழ்ந்ததும் பொய்யில்லே. இந்த வாழ்க்கையும் பொய்யில்லே. இதிலே எந்தக் குழப்பமும் தேவையில்லே. எந்தக் குற்ற உணர்ச்சியும் தேவையில்லே. யு அண்டர்ஸ்டாண்ட்'' என்றான்.

அவள் மெல்லத் தேறினாள்.

முரளிதரன் அடிக்கடி வந்து போனான். ஆனால் இன்னமும் அவர்களுக்கிடையே ஒரு இடைவெளி இருந்தது.

சந்தர்ராஜ் அப்படி ஒரு இடைவெளி இருந்ததையே உணராதவன் போல் மகிழ்ச்சியாக நடமாடிக் கொண்டிருந்தான். இயல்பாகப் பழகினார்கள். ஆனால் உள்ளார்ந்த ஒரு தயக்கம்.

சரியாக அறுபத்தைந்தாவது நாள்!

''ஏங்க. எத்தனை தடவை சொன்னாலும் ஏதாவது ஒரு ஐட்டத்தை மறந்துட்டு வந்தர்ரீங்க.'' என்று குரல் கொடுத்தாள் மாலா.

''ஐயோ! மாலு! சாரிடா. இந்தத் திவ்யாக் குட்டி கடைக்குப் புறப்படற நேரத்துல... ஸ்கெட்ச் பென்சில் கேட்டாளா! அது வாங்கற நினைப்பிலயே இருந்தேன். இதை மறந்துட்டேன்.'' என்றான்.

''எதை மறந்தீங்க?''

''அதைத் தானே மறந்துட்டேன்.'' என்றவன் திரும்பி மகளிடம் கண் சிமிட்டிச் சிரித்தான்.

''ஆமா. எப்பவும் உங்களுக்கு அவதான் உசத்தி. என்னை வசதியா மறந்துடுவீங்களே!'' என்றவள் சட்டென்று நாக்கை கடித்துக் கொண்டாள்.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல் ''என்ன மாலு! இப்படிப் பச்சை மிளகாய் கடி கடிக்கறே.'' என்றான்.



''அதேதான். அதேதான் பச்சை மிளகாய்தான். மறந்துட்டீங்க'' என்றாள்.

சிரித்தார்கள்.

''சரி. விடு. இப்ப என்ன? வரமிளகாயைப் போடு. ஆனா இனி ஞாபகம் வச்சுக்க. நீயும் திவ்யாக் குட்டியும் எனக்கு ஒண்ணுதான். அந்தக் காலத்துல சிரவணன்னு ஒருத்தன் அம்மா அப்பா ரெண்டு பேரையும் சுமந்துகிட்டுப் போனானாமே. அது மாதிரி...'' என்று அவன் முடிக்குமுன்னே அவள் குறுக்கிட்டாள். ''ஐயோ வேண்டாம். இனி சிரவணன் உதாரணமெல்லாம் சொல்லாதீங்க'' என்று.

அவனுக்குப் புரிந்தது. சிரவணன் சிறுவயதிலேயே உயிரை இழந்து விடுகிறான். என்பதால் சொல்கிறாள் என்று.

''சரி விடு. உங்க ரெண்டு பேரையும் என் நெஞ்சிலே சுமக்கிறேன் போதுமா?'' என்று திரும்பியவன் அவள் முகபாவத்தைக் கவனிக்கவில்லை.

திவ்யா எதையோ சீரியஸாக வரைவதைப் பார்த்தான். அவள் அருகில் தரையில் சப்பணமிட்டு அமர்ந்தான்.

இரண்டு பெரிய வட்டம். அதன் அருகில் ஒரு சிறிய வட்டம். குட்டை, குட்டையாக இரு கைகள் போட்டு அம்மா, அப்பா, திவ்யா என்று எழுதியிருந்தாள்.

''மாலு. இங்க வந்து பாரு. எதுக்குடா ஸ்கெட்ச் பென்சில் கேட்டான்னு இப்பப் புரியுதா? எவ்வளவு பெரிய மாடர்ன் ஆர்ட் பாத்தியா?'' என்று சிரிக்க மாலா பெருமையாக சிரித்தாள். அவன் குழந்தையை அள்ளிக் கொண்டு கொஞ்ச அன்றைக்கெல்லாம் சூழ்நிலையில் மகிழ்ச்சி கலந்திருந்தது.

இரவும் வந்தது.

திவ்யா உறங்கி விட்டாள். "தூங்கிட்டா இல்லே" என்று எட்டிப் பார்த்தவள் முகத்தில் கேள்விக்குறி தோன்றியது.

கட்டிலின் மேலே ஒரு கடிதம் இருந்தது.

பிரித்துப் படித்தாள்.

தேவேந்திரனின் கையெழுத்து.

*அன்புள்ள மாலுவுக்கு!*

*உங்கள் இருவருக்கும் திருமணம் ஆன அறுபது நாட்களுக்குப் பிறகு இந்தக் கடிதத்தை உன்னிடம் சேர்க்கச் சொல்லியிருந்தேன்.*

*எனக்கு உன்னைப் பற்றித் தெரிந்தது உண்மையென்றால் இன்னமும் நீயும் ராஜும் முழுமையாக வாழ ஆரம்பித்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.*

*மாலு! வாழ்க்கைப் போராட்டத்தில் சில நேரம் உண்மைகள் கசப்பாக இருக்கும். சில நேரங்களில் சிலவற்றை அலசாமல் இருப்பதே நல்லது.*

*நான் உனது கடந்த காலம். மாலு! ராஜ் உனது நிகழ்காலம். உடல் தேவைகள் பாவமானவை அல்ல. முறைப்படுத்திக் கொள்ள வேண்டிய அளவுக்கு நியாயமானவைதான். சில நியாயமான நேரங்களில் கூட நமது சமுதாய அமைப்பும் சில சூழ்நிலைகளும் இந்த நியாயத்தை மறுக்கின்றன.*

*உன் சகோதரனைக் கேள்! வெளிநாடுகளில் மணமுறிவும் திருமணமும் எப்படி அன்றாட விஷயங்களாக ஆகிப் போய் விட்டன என்று தெரியும். நமது கலாச்சாரம் குடும்ப உறவுகளை மிகப் புனிதமாக மதிக்கின்றது. ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் யாருக்காகவும் அக்கினியில் நீ மூட்டிக் கொண்டு நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.*



*எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் உன் மறுவாழ்வை நீ சீரமைத்துக் கொள்வதே என் ஆன்மாவுக்கு நீ செய்யும் பேருதவி யாகும். அப்பாவுக்கு எழுதியதையே திரும்பவும் எழுதுகிறேன். யார் கண்டது? மறுபிறவி என்று ஒன்று இருக்குமானால் நானே உங்கள் இருவருக்கும் குழந்தையாக வந்து பிறக்கவும் கூடும். வாழக் கற்றுக் கொள் மாலா! அதுவும் இயல்பாக. மகிழ்ச்சியாக. நினைவில் கொள் மாலா. நான் அவனுக்குள்ளே இருக்கிறேன்.*

*அன்புடன்*

தேவேந்திரன்.

அவள் மடித்து பக்கத்தில் இருந்த மேஜை மேல் வைத்தாள். திரும்பி சந்தர்ராஜை பார்த்தாள். அவன் கையில் கொடுத்தாள்.

அவன் ஆழ்ந்த அமைதியுடன் படித்தான்.

குழப்பமாக அவனைப் பார்த்தாள். உள்ளத்து அன்பெலாம் முகத்தில் தேக்கி 'வா' என்பது போல் இரு கைகளையும் நீட்டினான். அவள் தயக்கத்துடன் அடைக்கலமாகிக் கொண்டாள்.

"மாலு! அவசரமேயில்லை. மெதுவாக... கொஞ்ச நாள் கழித்தாலும் கூட... பொறுக்கலாம். எனக்கு உன்னோடு வாழ்கிற இந்த வாழ்க்கையே ரொம்பப் பிடிச்சிருக்கு. அமைதியான இயல்பான வாழ்க்கை. இது நிலைத்தால் இதுவே போதும். தேவ் சொன்னது போல உடல் தேவைகளும் வாழ்க்கையின் ஒரு அம்சம்தான்... இயற்கைதான் என்று ஏற்றுக் கொள்கிற பக்குவம் வரும்வரை." என்று அவள் தலையைக் கோதிக் கொடுத்தபடி வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகும் மென்மையாக ஒரு வித தயக்கத்தோடு... லேசாக அணைத்துக் கொண்டான். தட்டிக் கொடுத்து உறங்கச் செய்தான்.

* * *

அனுராதாவுக்குள் ஒரு மகிழ்ச்சி பரவிக் கொண்டிருந்தது.

'எவ்வளவு நல்லவர் தன் கணவர். எப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறார்' என்று எண்ணிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

கொலுவுக்கு வந்தவர்கள் எல்லாம் ஓரளவு கிளம்பி விட்டார்கள். வீட்டு மனிதர்களைத் தவிர மாலாவும் சுந்தரராஜும் தான் இருந்தார்கள்.

ஆண்களெல்லாம் வட்டமாக அமர்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

எதேச்சையாகத் திரும்பிய முரளிதரன் அனு தன் முகத்தை ஆழ்ந்து பார்ப்பதைக் கண்டு கண் சிமிட்டிச் சிரித்தான்.

அவள் முகம் சிவக்கத் திரும்பிக் கொண்டு எதிரே அமர்ந்திருந்த மாலாவைப் பார்த்தாள்.

"டேய்! சைட் அடிக்கறதை விட்டுட்டு சீட்டைப் போடுடா" என்று ஒரு தட்டுத் தட்டினான் சுந்தர்ராஜ்.

"என்னடா! பாவிகளா! வைஃபைக் கூட பாக்கக் கூடாதுங்கறீங்க." என்று சிரித்துக் கொண்டே விளையாட்டில் கவனம் செலுத்துவதை மாலா ஓரக் கண்ணால் கவனித்தவள் மீண்டும் மாலாவை நோக்கித் திரும்பினாள். அப்போது மாலா சொன்னாள்.

"ஷீலாக்கா, தேவ் மாதிரி ஒருத்தரும் அவரோட ஃபிரண்ட்ஸ் ராஜ் மாதிரி, முரளி மாதிரி... எனக்குக் கிடைச்சது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்னு எனக்குப் புரியுது" என்று.

அன்றைக்கெல்லாம் அனுராதா ஏதோ கனவில் நடப்பது போல் நடந்து கொண்டிருந்தாள்.

◆ ◆ ◆



## 18

"டீ. அனு! உனக்கு மூளை ஜாஸ்திடி... எப்படி டி இவ்வளவு அழகழகா... பொம்மைங்க செஞ்சிருக்கே" என்றாள் ரேகா.

"ஆமா! அது குறுக்கேதான் வேலை செய்யும்." என்றான் முரளிதரன்.

"எது?" என்றாள் ரேகா.

"மூளை! மூளை! அது குறுக்காதான் வேலை செய்யும்." என்றான் முரளிதரன். ஆனால் எப்போதும் அவன் இந்த மாதிரிப் பேசும் போது முகம் வாடிப் போகும் அனு இன்றைக்கு நின்று எதிர்ப்பார்வை பார்த்தாள்.

"எப்படியோ மூளைன்னு ஒன்னு இருக்குன்னு ஒத்துக்கறீங்களே" என்று சிரித்தாள்.

"டுர்... டுர்" என்று ஹாலுக்குள்ளேயே வண்டி ஓட்டிக் கொண்டிருந்த மகன் குமரன் கற்பனையிலேயே வண்டிக்கு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு வந்தான்.

கவலையாக அப்பாவைப் பார்த்தான். "அப்பா எப்படிப்பா மூளை குறுக்கா வேலை செய்யும்?" என்றான்.

அவன் முகம் பார்த்த முரளிதரன் தன் உள்ளம் கொள்ளை போனாற் போல் உணர்ந்தான். அள்ளிக் கொண்டான்.

"அப்பா விடுப்பா. எப்படிப்பா மூளை குறுக்கா வேலை செய்யும்?" என்று திரும்பவும் கேட்டான்.

"இர்றா கண்ணா! இதுக்கு சரியான முறையில பதில் சொல்ற ஆளைக் கொடுக்கறேன். டேய். தரணி இங்க வாடா!" என்று சகோதரனை அழைத்தான்.

"என்னண்ணா?" என்று வந்தவனிடம் "என் மகன் ஒரு கேள்வி கேட்கறான். அதுக்கு பதில் சொல்லு." என்றான்.

தரணிதரன் "என்னடா கேள்வி என்று குமரனைப் பார்க்க அவன் அதே கவலை நிறைந்த தொனியில் அதே கேள்வியைக் கேட்க தரணி சகோதரனை முறைத்தான். "அண்ணா இது வம்பு தானே?" என்றான்.

"என்னத்தைடா வம்பு. இந்த மாதிரி கேள்விக்கெல்லாம் உன்னாலதான் பதில் சொல்ல முடியும்" என்றான்.

"இருங்க! இதுக்கு நான் ஒரு வேலை பண்றேன்." என்றவன் நிஜமாகவே மூளையின் படம் வரைந்து விளக்க ஆரம்பித்தான். ஒரு நிமிடம் கவனித்த குழந்தை போரடிப்பது போல் உணர்ந்து கவனம் மாறி மறுபடியும் வண்டி ஓட்ட ஆரம்பித்தான்.

அதே நேரம்!

"எங்க இங்கே வாங்களேன்." என்று அனு அழைக்க உள்ளே போனான். "எங்க இதில தக்காளி சாதம் வச்சிருக்கேன். போதுமா பாருங்க" என்றாள். அவன் எட்டிப் பார்க்க

"தொட்டுக்க பொரியல் வச்சிருக்கேன்" என்றாள்.

"எதைபோ வை அனு. நீ எது செஞ்சாலும் நல்லாத்தான் இருக்கும்." என்று திரும்ப அவன் சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு காரியம் செய்தாள்.

"பாராட்டுக்கு நன்றி! என் அன்புக் கணவரே!" என்று எட்டி இதழ் பதித்து விலகினாள்.



"ஹேய்! என்ன இது!" என்று அவன் ஆச்சரியமாகிற அதே நேரத்தில் குமரன் ஓடி வர.

"சி. சி. இந்த ஃபங்ஷன் முடியட்டும். இவங்க எல்லாரும் கிளம்பட்டும். அப்புறம் பேசிக்கறேன்" என்று முணுமுணுத்து விட்டுக் கிளம்பினான்.

அவள் சிரித்தாள்.

* * *

இரண்டு நாட்கள் அனுவின் பிறந்த வீட்டு மனிதர்களை அழைத்திருந்தார்கள்.

அப்பா அம்மா... எல்லாரும் வந்திருந்தார்கள். அப்பா ஒரு விதக் குறுகுறுப்புடன் மகளை கவனித்துக் கொண்டிருந்தார்.

போன வாரத்தில் ஒரு நாள்!

இரவு ஒன்பது மணி வாக்கில் கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்ற மகளை நினைவு கூர்ந்தார்.

கண்களில் கண்ணீர் மல்க கடைக்கெதிரில் நின்றவளைப் பார்த்தவர் கடைப்பையனை கல்லாவில் அமரச் சொல்லி விட்டு எழுந்து வந்தார்.

"என்னம்மா!" என்றார்.

"அப்பா இனிமே அந்த மனுஷனோட நான் வாழ மாட்டேன். எனக்கு இந்த வாழ்க்கையே வேண்டாம்" என்று அழுத மகளை வெறித்துப் பார்த்தார்.

சட்டென்று எதிரில் இருந்த கோவிலுக்கு அழைத்துச் சென்றார்.

நடை சாத்தி விட்டார்கள். என்றாலும் அய்யரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு பக்கவாட்டு வழியாக உள்ளே நுழைந்து வெளிப் பிரகாரத்தில் அமர்ந்தார்கள்.

''ஏம்மா!'' என்றார்.

''திரும்பின பக்கமெல்லாம் லேடீஸ் சிநேகம். இந்த சொத்து எனக்கு நக்குமா நக்காதான்னு எத்தனை நாள் கவலைப்படறது? எத்தனை நாள் பயந்து சாகறது?'' என்று வெடித்து அழுகிற மகளை அன்புடன் பார்த்தார்.

''ஏன்? ஏன்? சொத்து கைவிட்டுப் போயிடும்னு ஏன் பயப் படறே?'' என்று கேட்டார்.

''அப்பா. என்னப்பா பொம்பளைங்க தலையெழுத்தே அது தானேப்பா. உங்களையே எடுத்துக்குங்க. நீங்க எப்பவாவது சிரிச்சுப் பேசியிருக்கீங்களா? ஆனா எங்க வீட்டுக்காரரு நேர் மாறானவரு. நல்லா சிரிச்சுப் பேசுவாரு. ஆனா ஊர்ல இருக்கற எல்லாப் பொம்பளைங்க கிட்டேயும் அதே சிரிப்புத்தான். நேத்திக்கு நைட் ஒரு லேடி போன் பண்ணி அவரை நான் ரொம்ப எதிர்பார்க்கிறேன். வரச் சொல்லுங்க. அப்படிங்கறா. போன வாரம் ஒருத்தியை கடைக்கு கூட்டிட்டுப் போய் என்னென்னமோ வாங்கிக் குடுக்கறாரு'' என்றாள்.

தந்தை யோசனையில் ஆழ்ந்தார்.

''ஏம்மா. நேர்ல கேக்க வேண்டியதுதானே.''

''கேக்கப் போய்த்தானே வம்பே வந்தது.''

''இல்லடா. சந்தேகம்கறது கொடிய வியாதி. அது வாழ்க் கையையே கெடுத்துரும்கறாரு. அந்த வராகசாமி கதை சொன்னப் பவே தெரியும்டிங்கறாரு.'' என்றாள்.

''வராகசாமி கதையா? அது என்ன கதை?'' என்றார்.

அவள் சற்றே பிடிபட்டாற் போல் விழித்தாள். பிறகு சொன் னாள்.



அப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''அம்மா... இப்படிக் கதையெல்லாம் சொன்னா யாருக்குமே கோபம் வரும்மா...'' என்றார்.

அவள் திகைத்துப் போய் மௌனமானாள்.

''அம்மா. என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டயே? அது சரிதான். ... என்னமோ எங்க தலைமுறையில சிரிச்சுப் பேசறது இல்லாமப் போச்சு. ஏம்மா. ஒண்டுக் குடித்தன வரிசையில அக்கம் பக்கத்து வீட்டுகள்ல நாம பேசறது கேட்கற நிலைமையில என்னத்தைமா பேச முடியும்? தனியா இருக்கும் போது சிரிச்சுப் பேசாமயா... இத்தனை குழந்தைகள் பிறந்திருக்கும்?''

அனுராதா விழித்தாள். முகத்தில் லேசாக அசடு வழிந்தது.

''ஏம்மா! மாப்பிள்ளையைப் பத்தி தப்பாவே யோசிக்கறே. எனக்குத் தெரிஞ்ச நல்லவரும்மா. உனக்கு கல்யாணம் நிச்சயம் செய்யறப்ப ஒரு குழப்பம். உனக்கு ஞாபகம் இருக்கா? பத்து பவுன் வேணும்னு கேட்டாங்க. மாப்பிள்ளைதான் அஞ்சு பவுன் குடுத்தாரு. அது மட்டுமில்லைம்மா. அன்னையிலருந்து ஒரு மூத்த மகன் மாதிரி நடந்துக்கறாரு. உன் சிஸ்டர்ஸ் ரெண்டு பேருக்கும் மாப்பிள்ளை பாத்தாரு. லேடீஸோட ஃப்ரீயா பழக றாருங்கறதுக்காக தப்பு சொல்லக் கூடாதும்மா. அவ்வளவு ஏன்? உன் கடைசித் தங்கைக்கு பிரசவம் பாத்தமே அப்பக் கூட வந்து அஞ்சாயிரம் குடுத்துட்டுப் போனாரு. என்ன மாமா யோசிக் கிறீங்க? அனுவோட சிஸ்டர்ஸ்னா எனக்கும் சிஸ்டர்ஸ் இல்லையா அப்படிங்கறாரு.''

அனு சற்றே ஆச்சரியமாய் விழித்தாள்.

"எனக்குப் பணம் குடுத்ததால சொல்றேன்னு நினைக்காதே. அடிப்படையில நல்ல மனசு இருந்தாத்தான் அதெல்லாம் செய்ய முடியும். நீ அவரை தப்பாப் புரிஞ்சிருக்கேன்னு நினைக்கறேன்." என்றார்.

அனுராதா குழப்பமடைந்தாள்.

தெளிவில்லாமலேதான் வீடு திரும்பினாள். இன்றைக்கு அதெல்லாம் நினைவு வர மகளை ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கணவரை வழியனுப்பி விட்டு மலர்ந்த முகத்துடன் வருகிற மகளை வியப்பாகப் பார்த்தாள்.

"அப்பா! இந்தப் பொன் குழந்தைகளை புரிஞ்சுக்கவே முடியலை" என்று புன்னகைத்துக் கொண்டார்.

* * *

வீராசாமியோடு மனைவியும் வந்தார். "அனும்மா. இந்தக் கூறு கெட்ட ஆளு. என்னென்னத்தையோ உங்ககிட்ட சொல்லிட்டாராமா" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

அனுராதா புன்னகைத்தாள். "பரவால்லை விடுங்கம்மா. என் மேல அக்கறையினால்தானே சொன்னாரு..." என்று. ஆனால் உள்ளுக்குள்ளே அவளுக்குள்ளே நெருடலாகத்தான் இருந்தது.

அதற்கேற்றாற் போல் அன்றைக்கு வந்த இருவர் இன்னும் அவளை வெட்கப்பட செய்தார்கள்.

கிறிஸ்டினாவும், மாத்யூவும்!

"வாங்க! வாங்க!" என்று வரவேற்றான் முரளிதரன்.



"அனு!" என்று குரல் கொடுத்தான். அனு உள்ளே சிறிய பாக்கெட்டுகளில் கொடுத்தனுப்புவதற்காக பாக்கெட்டுகளில் மஞ்சள் குங்குமம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"இதோ வர்றேங்க!" என்றாள்.

வந்தாள்.

"அனு! இவங்க கிறிஸ்டினா. இது என் ஃப்ரண்ட் மாத்யூஸ்" என்றான்.

குறும்பாக சிரித்தான்.

அனுவுக்குப் புரிந்தது.

அடுத்த படலம் ஆரம்பம் என்று!

* * *

"ஆமாங்க! எங்கப்பா.... அம்மா... பிச்சைக்காரங்கதான்... உங்கப்பா... என்ன பெரிய லண்டன் ரிடர்னா?" என்று பொரிந்த மனைவியைக் கோபமாகப் பார்த்தான்.

"சும்மா வாய் பேசாதடி சர்ச்சுக்கு வர்லேன்னா விட்டுட்டுப் போவாளா?" என்றான்.

"ஏன்... சர்ச்சுக்கு வர்றதை விட அப்படி என்ன முக்கியமான வேலை. என்றாள் கோபமாக.

"இத பாருடி நானும் நல்ல காரியமாத்தான் போறேன். என் ஃப்ரண்டோட அம்மா ஆஸ்பிடல்ல அட்மிட் ஆயிருக்காங்க. ஜீசஸ் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிப்பார்." என்றார்.

"ஓஹ்ஹோ! ஃப்ரண்டோட அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னா மட்டும் போக முடியுது. இதே எங்கம்மா அட்மிட் ஆனப்ப உங்களுக்கு" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

''ஏய்! அப்ப... நான் வேலை விஷயமா வெளியூர்ல இருந்தேன். ஏதோ ஒரு சமயம் சர்ச்சுக்குப் போகலேன்னா ஜீசஸ் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்குவாரு. ஆனா வேலைக்குப் போகலேன்னா... முதலாளி ஒத்துக்க மாட்டாரு.'' என்றான்.

''ஏதோ ஒரு காரணம் சொல்லுங்க...! எப்படின்னாலும் எங்க வீடுன்னா உங்களுக்கு இளப்பம்தான்'' என்றாள்.

''சொல்லுவடி... உன்னோட தங்கச்சி மேரேஜுக்கு... பத்து நாள் லீவு போட்டுட்டு... கூட இருந்து எல்லா ஏற்பாடும் பண்ணலையா?''

''ஆனா... எங்க வீட்ல மத்த ரெண்டு கல்யாணத்துக்கும் எதுவுமே செய்யலே. போனாப் போகுதுன்னு கடைசி நேரத்துக்கு வந்தீங்க'' என்றாள்.

''அதாண்டி விஷயம்! நான் எத்தனை செஞ்சாலும் உனக்கு திருப்தியே ஆகாதுடி. அதுவே உங்கண்ணன் ஒரு லாலிபாப் வாங்கிட்டு வந்து குடுத்துட்டாலே சொத்தையே எழுதி வச்சுட்ட மாதிரி அலட்டிப்படி.'' என்றான்.

''ஆமா! அப்படித்தான்!'' என்றாள் கிறிஸ்டினா காட்டமாக.

''அவ்வளவு தூரம் பிறந்த வீடு உசத்தின்னா எதுக்கு கல்யாணம் பண்ணிகிட்டே?''

''அதான் இப்ப ரிக்ரெட்... பண்றேன்.''

''அடடா! அவ்வளவு தூரம் ரிக்ரெட் பண்றவ எதுக்கு இங்க இருந்துகிட்டு எப்பப் பாரு சண்டை போட்டுகிட்டிருக்கே. கிளம்பு'' என்றான்.

பேச்சு பேச்சாக இருக்க அவள் சட்டென்று எழுந்தாள். பெட்டியில் துணிமணிகளை அடுக்கினாள்.



''மதுரையிலிருந்து திருச்சிக்கு போறதுக்கு எவ்வளவு நேரம் ஆயிடும்? போக மாட்டேன்னு நினைக்கறீங்களா?'' என்றாள் கிளம்பி விட்டாள்.

குழந்தையையும் அள்ளிக் கொண்டாள்.

அவனும் வீம்பாகத் தடுக்கவில்லை.

ஆட்டோ பிடித்தாள்.

போனதற்குப் பிறகுதான் அவனுக்கே ''சே! எதுக்கு இப்படி பேச்சை வளர்த்தோம்'' என்று தோன்றியது.

ஒரு வாரம் ஆனது! இரண்டு வாரம் போனது! மூன்றாவது வாரத்தில்தான்... அவனுக்கு ஆட்டம் கண்டது.

ரொம்பவும்தான் முறுக்கிக் கொண்டிருந்தாள். இரண்டு மூன்று நாட்களில் வக்கீல் நோட்டீஸ் வரவும் அரண்டு போனான்.

அன்றைக்குத்தான் முரளிதரனுக்கு போன் செய்தவன் நடந்த சண்டையை வரி விடாமல் ஒப்பித்தான்.

முரளிதரனும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''சரிதாண்டா. ஊருக்கு போனப்புறம் நீ போன்லயாவது பேசியிருக்கலாம் இல்லே!'' என்றான்.

''முதல் வாரம் பேசலைடா. ஆனா ரெண்டாவது வாரம் கூப்பிட்டேன். இதே மாதிரித்தான் பேசறா. சரி. ஷி இஸ் இன் எ பேட் மூட்னு விட்டுட்டேன். ஆனா ரொம்ப மோசமான மூடுக்கு போயிட்டா... போல இருக்கு. என்னடா இது? புருஷன் பொண்டாட்டின்னா சண்டை வர்றதுதான். அதுக்காக... இப்படியா?... குழந்தையை நினைக்கணுமில்ல. இப்படி இம்மெச்சூர்டா பிஹேவ் பண்றாளேடா'' என்றான் வருத்தத்துடன்.

"அதான். நீயே... சொல்றயே! கிறிஸ்டி ரொம்ப இம்மெச்சூர்டா இருக்குதுன்னு. அப்புறம்... நீ கொஞ்சம்... பொறுத்துப் போயிருக்கலாமில்லே."

"போடா! எத்தனை நாள் பொறுத்துப் போறது. அவங்க வீட்டையே எதுக்கும் சொல்லக் கூடாதுங்கறா."

"எதுக்கு சொல்றே? எப்படிப்பட்ட மோசமான குடும்பம் னாலும்" என்று அவன் முடிக்கு முன்பே அவன் குறுக்கிட்டான்.

"சேச்சே..! மோசமான குடும்பம் எல்லாம் கிடையாது." என்றான்.

முரளிதரன் சிரித்தான்.

"அப்புறம் எதுக்குடா சண்டை?" என்றான்.

"எல்லாம் வாய்க் கொழுப்புத்தான்."

"குட்! என்கிட்டே ஒத்துகிட்ட மாதிரி கிறிஸ்டினாகிட்டேயும் ஒத்துக்க."

மறுபடியும் "போம்மா! கௌரவப் பிரச்சனையா எடுத்துக் காதே! பாப்பாவை நினைச்சுப் பாரு. சில சமயங்கள்ல யாராவது ஒருத்தர் தாழ்ந்து போயித்தான் குடும்பத்தை தூக்கி நிறுத்த முடியும்டா."

"ஆமா!" என்றான் சிந்தனையுடன்.

"சரி. விடு... நான் கிறிஸ்டினா கிட்டே பேசறேன்" என்றான்.

அந்தப் பக்கம் மாத்யூஸ் நிம்மதியானான்.

"எப்பேர்ப்பட்டவர்களையும் பேச்சில் மடக்கி விடுகிற சாமர்த்தியம் முரளிதரனுக்கு உண்டு என்று அவனுக்குத் தெரியும். ஆனால்... அது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.



# 19

"அண்ணா. என்னண்ணா பேசறீங்க? குடும்பம்னா... பரஸ்பரம் அன்பு இருக்கணும்... நிம்மதி இருக்கணும்." என்று பொரிந்து தள்ளுகிற கிறிஸ்டினாவை பேச விட்டான் முரளிதரன்.

எல்லாவற்றையும் கொட்டி விட்டோம் என்கிற முடிவில் அவள் அமைதியானாள். இந்த மாதிரி விவகாரங்களில் மனதில் இருக்கிற கோபத்தையெல்லாம் கொட்டி முடித்து விட்டாலே மனதில் ஒரு வெற்றிடம் தோன்றி விடும் என்பார்களே அது மாதிரி உணர்ந்தாள்.

பேசி முடிக்கு முன்பாகவே எதற்காக இவ்வளவு கோபப்பட் டோம்" என்று தோன்ற ஆரம்பித்து விடும் என்பது அவன் அனு பவத்தில் கண்ட உண்மை.

அது இப்போது கிறிஸ்டினாவுக்கு நிகழ்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

உள்ளுக்குள்ளே ஒரு சிரிப்புடன் ஆனால் அவள் சொல்வதை ஆழ்ந்து கேட்டான்.

ஆவேசமாக ஆரம்பித்து அழுகையில் முடித்த அந்த நீண்ட பேச்சுக்கு பின் மெதுவாகக் கேட்டான்.

"ஏம்மா. இவ்வளவு நேரம் எத்தனையோ குற்றம் சொன்னே? இதைத் தவிர அவன் கிட்டே வேற ஏதாவது மோசமான பழக்கம் இருக்கா?"

"மோசமான பழக்கம்னா?"

"செபின் ஸ்மோக்கிங்... மொடாக்குடி... அப்புறம் வேற தொடர்புகள்... திருட்டு... பொய்..." என்று அவன் அடுக்க... அவள் விழித்தாள்.

"இல்லே!" என்றாள். குரல் இறங்கி விட்டது.

"இதெல்லாம் இருக்கிற எத்தனையோ பேரோட காலம் பூரா கண்ணீர் விட்டுட்டு வாழற பெண்கள் இருக்காங்க. தெரியுமா?" என்றான் முரளிதரன்.

"முரளி. அண்ணா! உங்க ஃபிரண்டோட தப்பை நியாயப் படுத்தாதீங்க" என்றாள் கோபமாக.

"ஐயையோ! இல்லம்மா. ஒரு விஷயம் நான் கிளியர் பண்ணிடறேன். திஸ் இஸ் ஒன்லி லவுட் திங்கிங். ஒரு அனாலிசிஸ் அவ்வளவுதான். ரெண்டு பக்க நியாய அநியாயங்களையும் அலசறோம். ஏன்னா ரெண்டு பேருக்கும் சேர்ந்து ஒரு குழந்தை இருக்கு. டைவர்ஸ் என்னம்மா... டைவர்ஸ் நிமிஷத்துல வாங்கிர லாம்.. அப்புறம் என்னாகும்? யோசிச்சுப் பாரு. குழந்தை உங் கிட்ட இருக்கும். அவன் வாரத்துக்கு ரெண்டு நாள் வந்து பார்த் துட்டு போவான். இல்லே... அவன்கிட்டே இருக்கும். நீ போய் அப்பப்ப... பாத்துட்டு... வருவே." என்று அவன் முடிக்கு முன்னே அவள் குறுக்கிட்டு "ஐயோ" என்றாள்.

"பாத்தியாம்மா! நினைக்கவே கஷ்டமா இருக்கில்லே. குழந்தைக்கு எப்படி இருக்கும்? அழகா மெர்லின்னு பேரு வச் சுட்டு குழந்தை மேலே கருணை காட்ட மாட்டேங்கறீங்களே?" என்றான்.

கிறிஸ்டினா மௌனமானாள்.

"போன மாசமெல்லாம்.... ஒரு பெரிய சாதனை செஞ்ச மாதிரித் திரிஞ்சுகிட்டிருந்தேன்... ஏன்னா? அப்பாவுக்காக



ஏங்கிக்கிட்டிருந்த குழந்தைக்கு ஒரு அப்பா சம்பாதித்துக் கொடுத்தேன்." என்றவன் மாலா தேவேந்திரன் கதையை சொல்ல கிறிஸ்டினா கொஞ்சம் நெகிழ்ந்துதான் போனாள்.

எவ்வளவோ வைராக்யமா இருந்த பொண்ணு இறங்கி வந்து வாழ்க்கையை மாத்திகிச்சு. இப்ப தேவோட படத்துக்கு பூ போட்டு கும்பிட்டுட்டுத்தான் வெளியே கிளம்பறாங்க. நீ என்னடான்னா. குழந்தைக்கு... இருக்கிற அப்பாவை துரத்தி விடறேங்கறே" என்றான்.

"நான் ஒன்னும் அவரைத் துரத்தலே... அவருதான் என்னை துரத்தினாரு." என்றாள்.

"அம்மா... பொய் சொல்லாதம்மா... நீதானே... பொட்டியைத் தூக்கிட்டு வந்தே... அவனுக்கு ஏகப்பட்ட திட்டு. அப்படி டோஸ் விட்டேன். அவன் பாவமாய் சொன்னான். ...என்னை ஏன்டா திட்டறே.! அவ தான்டா பொட்டியைத் தூக்கிட்டு கிளம்பின துங்கறான்" என்றான்.

அவள் சற்று நேரம் வெளியே பார்த்தாள்.

"அப்ப சரி... நான் கிளம்பி வந்தேன். வந்து கூப்பிட்டிருக் கலாமில்லே" என்றாள்.

"அவதான். பேர் சொன்னாலே பேச மாட்டேங்கறா. போனை ஆஃப் பண்றா. நேர்ல வந்தா வெளியே போடாம்பாங்கறான்" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

"அவரு. எதுக்கு... எங்க வீட்டு மனுஷங்களை குறை சொல்றாரு?" என்றாள்.

"அதேதாம்மா... பிரச்சினை... நிறைய வீட்டுகள்லே அதுதான் பிரச்சினை. ஒரு அறிஞர் சொன்னார். ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் வருகிற பிரச்சினைகளில் பெரும்பாலானவை... சுற்றியிருப்பவர்களாலேயே வருகிறதுன்னு. அது நிஜம்தான் போல இருக்கு" என்றான்.

மறுபடியும் ஒரு ஆழ்ந்த மௌனம்.

"சரிம்மா நான் அவங்கிட்டே பேசறேன். நீ அவங்க மனுஷங்களைப் பத்தி பேச வேண்டாம். அவன் உங்க மனுஷங்களைப் பத்திப் பேச வேண்டாம்." என்றான்.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள்.

பிறகு சற்று நேரம் வேறு பேச்சுக்கு தாவினான். கலாட்டா செய்து கலகலப்பாக்கினான். தன்னையும் மீறி அவள் முகத்தில் நிம்மதி படர்வதைக் கண்டு கொண்டான்.

புன்னகைத்துக் கொண்டான்.

புறப்படுவதற்கு முன்பு கேட்டான். "ஏம்மா. இங்க வந்து உட்கார்ந்திருக்கியே... உங்கண்ணன் இருக்காரு. அண்ணி இருக்காங்க.... ஆனா உன் வீடா உணர்ந்தியாம்மா?" என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் திரண்டது.

"ஏம்மா! அங்க யாராவது எதுவும் சொன்னாங்களா?"

"இல்லை."

"அப்புறம் ஏம்மா வம்பு" எனவும் கேவிக் கேவி அழுதாள்.

"நான் எவ்வளவு பிரியம் அவர் மேலே வச்சிருக்கேன். அவர் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறார். எப்பப் பாரு அதென்ன கோபம்?" என்றாள்.



"உரிமையிருக்கிற இடத்துலதான் கோபம் வரும்? அவனுக்கு வேலைல டென்ஷன் இருக்குமாயிருக்கும். வீட்ல இயல்பா இருக்காம எங்க இருக்க முடியும்?"

"அப்படின்னா? எப்பவுமே கோபம் காட்டறதுக்கு மட்டும் தான் வைஃபா?" என்றாள்.

"அதப் பத்தி நான் அவங்ககிட்டே பேசறேம்மா. ரொம்ப ஏங்கிப் போயிருக்கான்ம்மா. இளைச்சுப் போயிட்டான்." என்றான்.

"வந்திருந்தாரா?" என்றாள் குறுகுறுப் பார்வையுடன்.

"வந்திருக்கான்ம்மா. ஹோட்டல்ல தங்கியிருக்காம்மா."

இதழ்கள் துடிக்க அமர்ந்திருந்தாள்.

"நாளைக்கு இங்க வரச்சொல்லட்டா. நானும் கூட வரட்டுமா?" என்றான்.

அவள் தலையாட்டினாள்.

"அவனும் நீ சொன்ன மாதிரித்தாம்மா சொல்றான். நான் அவ மேலே உயிரையே வச்சிருக்கேன். அவ ஏன்டா புரிஞ்சுக்கவே மாட்டேங்கறா? நோட்டீஸ் அனுப்பற அளவுக்கு போயிருக்கான் துடிச்சுப் போறான்ம்மா" என்றான்.

அவள் கண்கள் மறுபடியும் பனித்தன.

"நான் சொல்லியிருக்கேம்மா. உனக்கு அந்தப் பொண்ணு மேல அன்பு இருக்குங்கறதை காட்டித் தொலையேன்டான்னு திட்டியிருக்கேன்." என்றான்.

"..............................!"

"கிறிஸ்டியும் உன்னைப் பிரிந்திருக்கிற பொண்ணு இல்லைடா. சும்மா உனக்கு ஷாக் ட்ரீட்மென்ட் குடுத்திருக்கு. அப்படின்னேன். அப்படியே மெயின்டெயின் பண்ணிக்கலாமா?" என்றான்.

அவள் தலையாட்டினாள்.

"சிம்மா. ஒரு கப் காபி குடுக்க மாட்டியா? செகண்ட் டோஸ்" என்று அவன் கேட்கவும் அவள் "இதோண்ணா" என்று எழுந்து போனாள்.

அவன் அதற்குள் செல்போனில் பேசி முடித்தான்.

கிறிஸ்டினா காபி டம்ளருடன் வந்த போது ஜன்னலைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"காபி!" என்று குரல் கொடுக்கும் போதே அவளுக்கு புரிந்து போனது அது முரளிதரன் அல்ல என்று.

தயக்கத்துடன் திரும்பிய மாத்யூஸ் ஒரு கணம் விழுங்குகிறாற் போல் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

காபி கப்பை வாங்கி அருகில் இருந்த டீபாயின் மேல் வைத்தான். அவள் கவரப்பட்டவள் போல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

பிரிவின் இடைவெளியினால் ஏற்பட்ட உணர்வுகளுக்கெல்லாம் அவர்கள் வடிகால் தேடிக் கொண்டிருக்கையில் முரளிதரன் அடுத்த சில நிமிடங்களுக்கு அவள் குடும்பத்தினர் யாரும் வந்து விடாமல் காவலுக்கு நின்றான்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு வரலாமா என்று குரல் கொடுத்தான்.

"வா... வா" என்று அவன் குரல் சிரிப்புடன் ஒலிக்கவே உள்ளே நுழைந்தான்.

"தேங்க்ஸ்டா..." என்றான் கலகலவென்ற சிரிப்புடன். மனைவியிடம் திரும்பினான்.



"கிறிஸ். எப்பேர்ப்பட்டவன் தெரியுமா? பேச்சலயே கரைச்சுடுவான்" என்றான்.

பாரம் இறங்கியவள் போல் கிறிஸ்டினாவும் சிரித்தாள். "தெரிஞ்சது" என்றாள்.

"போங்கம்மா. என் குடும்பத்துல மட்டும் பிரச்சினை இல்லைன்னு நினைக்கறீங்களா என்ன? நான் என் வைஃப்கிட்டே அன்பை வெளிப்படையாக காட்டறேன். ஆனா அவ சந்தேகப் படறா. இங்க மட்டும்தான் இப்படியா? எல்லா இடத்துலயும் இப்படித்தானான்னு." என்று அங்கலாய்த்தான்.

அதே நேரம்!

அப்பா என்று ஓடி வந்த குழந்தையை மாத்யூஸ் அள்ளிக் கொண்டு கொஞ்சித் தீர்க்க குழந்தையும் முத்தங்களை வாரியிறைக்க அவர்கள் இருவரும் நெகிழ்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

✦ ✦ ✦

"என்ன சசியண்ணா. ரெண்டாவது எபிசோட் முடிஞ்சுது மாதிரி இருக்கு." என்றபடி வந்தான் தரணிதரன்.

'ஷ்!' என்று சைகை காட்டினான் சசிதரன்.

போன வாரத்தில் மனசொடிந்து போய் சகோதரனிடம் வந்தான் முரளிதரன். முதன் முறையாகத் தன் சகோதரனிடம் மனம் விட்டுப் பேசினான்.

"என்னண்ணா. இப்படி.? ரொம்ப சந்தேகப்படறா. கேட்டுத் தொலைய மாட்டா. மனசுக்குள்ளயே ரொம்ப வேதனைப் பட்டுக்கறா... இன்னைக்குத்தான் முதல் முதலா சண்டை போட்டா...

ஆனா போட்ட சண்டையைப் பார்த்தா இவ்வளவு ஆங்காரமான்னு எனக்கே திகிலாப் போச்சு" என்றான் வேதனை நிறைந்த குரலில்.

சசிதரன் பொதுப் படையாக விவரம் கேட்டுக் கொண்டான். பிறகு சிரித்தான்.

"தம்பி! என்னமோ ரெண்டு குடும்பத்தையே சேத்து வச்சேங்கறே. ஆனா உனக்கே விவரம் புரியலைடா. உன் வைஃப் உன் மேல ரொம்ப பிரியம் வச்சிருக்கு. அதனால மத்த லேடீஸ்கிட்ட பழகறதைத் தாங்க முடியலை." என்றான்.

"எனக்குப் புரியுதுண்ணா. ஆனா தேவையில்லாம தன்னைத் தானே வருத்திக்கறாளேன்னு ரொம்ப கவலையா இருக்கு." என்றான்.

"விஷயம் என்னன்னா நீ எங்கே கை நழுவிப் போயிடுவி யோன்னு பயம்."

"இப்படியே போனா எங்க போய் முடியுமோ தெரியலை."

"எங்கயும் போகாது. இந்தப் பிரச்சினையை எங்கிட்ட விடு" என்றான். இரண்டு பேரும் மேலும் சற்று நேரம் பேசினார்கள்.

✦ ✦ ✦

அடுத்த நாள்!

தன்னை வாங்கு வாங்கென்று வாங்குகிற முரளிதரனை வீராசாமி அதிர்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏண்ணே. நீங்க பாட்டுக்கு பத்த வச்சுட்டு வந்துட்டீங்க. அவ மனசுக்குள்ள போட்டு உழப்பிக்கறா. இப்ப லுக்கிங் த்ரு கலர்ட் கிளாஸ்ம்பாங்களே... அது மாதிரி எல்லாமே அவளுக்குத் தப்பாத் தெரியுது" என்று பொரிந்து தள்ளி விட்டான்.



"ஐயோ. நான் இப்படியாகும்னு நினைக்கவே இல்லை. தம்பி. நீங்க வேற உரிமையாச் சண்டை போடறதில்லைன்னே சொல்லிட்டிருப்பீங்களே. கொஞ்சம் பொறாமை கிளப்பி விட்டா. சண்டை தின்டை வரும்னு. எல்லாரும் சொல்றாங்களே... சண்டைக்கப் புறம் சமாதானம் வந்தா அதோட இதே தனிதான்னு..." என்றார் வீராசாமி.

"எப்படியோ ... என் வாழ்க்கையில விளையாடிட்டீங்க" என்றான் வருத்தத்துடன்.

"இப்ப என்ன செய்யறது தம்பி!" என்றார்.

"என்னத்தை செய்யறது. என்னமோ கொலு வருது தாயி. அதுக்கப்புறம் போயி வேண்ணா உங்க வீட்ல உட்காந்துக்கன்னு சமாதானமா சொல்லி வச்சிருக்கு" என்றான்.

"பத்து நாள் இருக்கில்லே. ஏதாவது செய்வோம்" என்றார்.

அவன் கோபமாகத் திரும்பிப் பார்த்தான் "அண்ணே. போதும் நீங்க செஞ்சதெல்லாம். இனிமேலாவது குட்டையைக் குழப்பாம இருந்தீங்கன்னா சரி."

வீராசாமி அடி வாங்கினாற் போல் நிற்பதைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு மாதிரியாகிப் போனது.

"சரி. சரி போனது போகட்டும். இனி ஆகறதைப் பார்க்கலாம். என்னவோ சசியண்ணன் உங்களை பாக்கணும்னாங்க" என்றான். பைக்கில் கிளம்பி விட்டான்.

வீராசாமி பல நாட்களாக அவர்கள் குடும்பத்தில் ஒருவராகப் பழகியிருந்தாலும் சசிதரனும் கோபமாகப் பேசுவான் என்று சற்று பயந்தபடிதான் போனார்.

அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக சசிதரன் அன்பாகவே பேசினான். ஆனால் விஷயம் மட்டம் கடுமையாகவே இருந்தது.

திட்டமிட்டார்கள்!

தீவிரமாகத் திட்டமிட்டார்கள்!

அதன்படிதான் முதல் இரண்டு விஷயங்கள் முடிவானது. இப்போது மூன்றாவது விஷயம் மட்டும் பாக்கியிருந்தது.

அது வெடிக்கப் போகும் விதம் பார்க்கக் காத்திருந்தார்கள்!

வெடித்தது.

மத்தாப்புச் சிதறல்களாக வெடித்தது.

## 20

''டேய். போதும்டா. தரணி! எத்தனை தடவைடா பவுடர் போடுவே! எப்படியும் வரதுக்கு இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும். அப்புறம் மறுபடியும் ஒரு தடவை போடணும்.'' என்று சிரித்தான் முரளிதரன்.

முரளிதரனும் சசிதரனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்த அனு வந்து கேட்டாள்.

''என்ன? பெரியத்தானும் நீங்களும் என்னத்துக்கோ சிரிச்சு கிட்டே இருக்கீங்க? என்று அதற்கும் சிரித்தார்கள்.

''இல்லே! இன்னைக்கு ஏதோ வயசுப் பொண்ணுங்க எல்லாம் வரப் போறதுங்க போல இருக்கு. ஐயா தடபுடலா ரெடியாகறாரு.'' என்று சிரித்தார்கள்.



''அவங்க கிடக்கறாங்க அண்ணி. நம்ம கவலை நமக்கு.'' என்றான் தரணி சிரிக்காமல்.

சகோதரர்கள் இருவரும் அதற்கு வெடிச்சிரிப்பு சிரித்தார்கள். அதற்குள் அனுவுக்கு வேறு ஏதோ வேலை இருப்பதால் அவள் நகர்ந்தாள்.

ஏழு மணிவாக்கில் பெண்கள் இருவர் வந்தார்கள்.

''வாங்க... வாங்க... சீதா மேடம்!'' என்று உற்சாகமாக வர வேற்றான் சசிதரன்.

வந்தவர்களில் மூத்த பெண்ணுக்கு இருபத்தாறு, இருபத்தேழு வயதிருக்கும். குரல் கேட்டு வெளியே வந்த அனுவுக்குப் புரிந்தது. அன்றைக்கு மாரியம்மன் கோவில் அருகில் முரளிதரன் ஒரு வீட்டில் நின்று பேசிக் கொண்டிருந்தானே. அதே பெண் தான்.

அனுராதா இப்போது எந்த வித அதிர்ச்சியும் அடையவில்லை. கடந்த இரண்டு அனுபவங்கள் மூலமாக ஓரளவு தெளிவாகி இருந்தாள். அதனால் இப்போதும் இன்ட்ரஸ்டிங்காக ஏதோ வரப் போகிறது என்பது மட்டும் அவளுக்குப் புரிந்திருந்தது.

ஆர்வமானாள்!

''டேய்! தரணி!'' என்று உள்ளே குரல் கொடுக்க குழந்தைகளை அமர வைத்துக் கதை சொல்லிக் கொண்டிருந்த தரணி வந்தான்.

''தீபிகா மேடம் வந்தாச்சுடா'' என்றான் முரளிதரன்.

ஒரு கணம் முகம் சிவந்த தரணிதரன் ''வாங்க. வாங்க'' என்று பொதுப்படையாக வரவேற்றான்.

சசிதரனும், முரளிதரனும் கண்ணால் பேசிச் சிரித்துக் கொண் டார்கள்.

''ஹேய். அனு! இங்க வா. அண்ணியைக் கூப்பிடு.'' என்று முரளிதரன் கனகாரியமாக உள்ளே அழைத்துச் சொன்னான்.

"அண்ணி இந்த தீபிகாப் பொண்ணுதான் நாங்க சொன்ன பொண்ணு. தரனிக்கு நாங்க பார்த்த பொண்ணு. பயலுக்கு ரொம்ப பிடிச்சிருச்சு." என்றான்.

"சசியண்ணன் ஆபீஸ்ல வேலை செய்றவங்க மூலமா வந்த ரெஃபரன்ஸ். அம்மா அப்பாவும் உங்களுக்கெல்லாம் பிடிச்சா சரிடான்னுட்டாங்க. உங்களுக்குப் பிடிக்குதா பாருங்க... மத்த தெல்லாம் அப்புறம் சொல்றேன்" என்றான்.

ஒரு அரைமணி நேரம் இருந்திருப்பார்கள். தரணியும் தீபிகாவும் வெட்கப் பார்வை பரிமாறிக் கொள்வதையும் முகம் சிவக்கப் பேசிக் கொள்வதையும் எல்லாரும் கவனித்துக் கொண்டே மற்றவர்களையும் உபசரித்தார்கள்.

❖ ❖ ❖

அன்றிரவு!

எல்லாரும் தரையில் வட்டமாக அமர்ந்து சாப்பிட்டார்கள். வீராசாமி கூட வந்து உதவி செய்தார். ஒரே கலகலப்பாக இருந்தது.

"என்னங்கத்தான் பொண்ணு மட்டும் இதுதான்னு சொல்லிட்டு வேற எதுவுமே சொல்லலையே." என்று கேட்டாள் அனுராதா.

"சசின்னா சொல்லுண்ணா" என்றான் முரளிதரன்.

"அனும்மா. தரனிதரன் வேலைக்குப் போற பொண்ணா வேணும் மனசுக்குப் பிடிச்சிருக்கனும்னு சொன்னானா? அது மாதிரி ஒரு பொண்ணு கிடைச்சது. மேற்கொண்டு விசாரிச்சோம்." என்று நிறுத்தினான்.

முரளிதரன் தொடர்ந்தான். "அப்புறம்தான். அந்தப் பொண் ணுக்கு அம்மா அப்பா இல்லைன்னு தெரிஞ்சது. எதுக்கும் போய்ப்



பாத்துட்டு வாடான்னு அண்ணன் சொன்னாரு. போனேன்" என்றான்.

❖ ❖ ❖

"மேடம். வணக்கம்." என்றான் முரளிதரன்.

"வாங்க. வாங்க" என்று வரவேற்றாள் சீதா.

"மேடம். தீபிகாங்கறது!"

"என் சிஸ்டர்தான்." என்றாள்.

"ஓ!" என்றான். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்ததில் தெரிந்தது சீதாவுக்கும் திருமணம் ஆகவில்லை என்று.

"என்ன சார் பண்றது. அவ பதினாறு வயசுப் பொண்ணா நின் னப்ப எங்க அம்மா அப்பா போயாச்சு. அம்மா என்னைக் கஷ்டப் பட்டுப் படிக்க வச்சா. இவளை விட்டுட்டு எனக்குன்னு என்னத்துக்கு தனி வாழ்க்கைன்னு நினைச்சுட்டேன்," என்று சொன்னவுடன் முரளிதரனின் மனம் நெகிழ்ந்தது.

"சரி. முதலில் தீபிகாவின் திருமணம் முடியட்டும்," என்று எண்ணிக் கொண்டான்.

என்னப்பா அம்மா அப்பா இல்லாத பொண்ணுங்கறயே சரி வருமா என்று அம்மா கேட்டவுடன் தரனிதரன் சொன்னான்.

"அம்மா. நான் நினைக்கற மாதிரி படிப்பிருக்கு. வேலை யிருக்கு. நம்ம வீட்டுப் பொண்ணு மாதிரி நினைச்சு நாம பாத் துக்கக் கூடாதா" என்றான்.

"ஏன் அந்த சீதாப் பொண்ணு பாத்துக்காதா?" என்றார் அம்மா.

அப்போதுதான் சொன்னான் முரளிதரன். "அம்மா. நானும் சசி அண்ணாவும் இந்த சீதாவுக்கும் ஏத்த மாதிரி ஒரு மாப்பிள்ளை பாக்கறதா இருக்கோம்," என்றதும்

அம்மாவும், அப்பாவும் திகைத்தே போனார்கள்.

"ஆமம்மா! பாவம் எவ்வளவு நல்ல மனசு. தங்கைக்காக தன் வாழ்க்கையையே தியாகம் பண்ற மனசு. எப்ப தீபிகா நம்ம வீட்டுப் பொண்ணு ஆகுதோ. அப்பவே அவங்களும் நம்ம உறவுன்னு ஆயிடாதா? அவங்களுக்கும் ஒரு நல்ல வழி பாக்க வேண்டியது நம்ம கடமை இல்லையா?" என்றான் முரளி.

"ஆமப்பா. தீபிகாவை நம்ம வீட்டுப் பொண்ணாவே நாம்ம பாத்துக்கலாம்" என்றார் அம்மா.

"பரவால்லடா. எனக்குப் பொண்ணுங்களே இல்லைன்னு ஒரு குறை இருந்தது. இப்ப நாலஞ்சு பொண்ணுங்க ஆயிடும் போல இருக்கு." என்றார் நடராஜ்.

"நாலஞ்சு பேரா."

"ஆமா. ஷீலா, அனு, தீபிகா, இப்பா இந்த கீதா" என்று அடுக்கியபடி சிரித்தார்.

* * *

"வீடே கலகலப்பா இருந்துச்சு ஆனா எல்லாரும் போன வுடனே வெறிச்சோடிப் போயிடுமில்லே," என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் அனு.

எல்லாருக்கும் கையாட்டி விடை கொடுத்து அனுப்பி விட்டு வந்தார்கள் இருவரும்.

"இந்தப் பையன் கூட அவங்களோட போறேன்னு போயிட் டானே" என்றான் ஆதங்கத்துடன்.

"ஆமா. ஷீலாக்கா பசங்களோடவே இந்த பத்து நாளும் இருந்தானா. இப்ப அவங்களை விட்டுட்டு இருக்க மாட்டேங் கறான்" என்றாள்.



முரளிதரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஓரளவுக்கு எல்லாப் பொருட்களையும் ஒழுங்கு படுத்தி விட் டார்கள். இன்னும் கொஞ்சம் வேலை இருந்தது.

அடுத்த அறைக்குள் நுழைந்தான்!

புத்தகங்களை ஒழுங்குபடுத்தும் போது அந்த இரண்டு ஃபைல் களை பார்த்தான்.

எடுத்துப் பார்த்தான்.

முகத்தில் விசித்திரப் புன்னகை மலர்ந்தது.

ஷீலா அண்ணி அன்றைக்கு சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தது.

"தம்பி எப்பப் பாரு. உனக்கு ஏத்த மாதிரி இல்லை. நீ எல்லா விதத்திலும் உசத்தின்னு புலம்பல். அதனால ஒரு ஐடியா குடுத் திருக்கேன். ஆனா அது என்னன்னு கேட்காதே. சொல்ல மாட் டேன். தானாத் தெரியறப்ப தெரியட்டும். ஆனா அது பிளஸன்ட் சர்ப்ரைஸ் என்று. அது இதுதானோ!"

சிரித்துக் கொண்டான்.

"ஆனால் நாமாகக் கேட்கக் கூடாது. அவளாகச் சொல்லட் டும்," என்று எண்ணிக் கொண்டே உதவிக் கொண்டிருந்தான்.

"ஏங்க. ரொம்ப டயர்டா இருக்கு. சிம்பிளா ஏதாவது பண்ணிக் கலாமா?" என்று தன்னைப் பார்த்த மனைவியை ஆதரவாகப் பார்த்தான்.

"சரிம்மா. கடையில கூட வாங்கிக்கலாம்," என்றான்.

அவன் போய் வாங்கி வருவதற்குள்ளாக உறங்கிப் போயிருந் தாள்.

ஒரு வழியாக எழுப்பிச் சாப்பிடச் செய்தாள். உறக்கத்திலேயே சாப்பிட்டு விட்டுப் படுக்கையில் தொப்பென்று விழுகிற அவனைப் பார்த்து அவளுக்குச் சிரிப்பு.

அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே வெகுநேரம் படுத்திருந்தான்.

✦ ✦ ✦

கணவனை வேலைக்கு அனுப்பி விட்டு வந்த அனு யோசனையில் ஆழ்ந்தாள்.

குமரன் இன்றைக்கும் ஷீலா வீட்டில் இருந்தே ஸ்கூலுக்குப் போய் விட்டானாம். செய்தி வந்தது.

எப்போதும் பொதுப்படையாகப் பேசுகிற சசிதரன் நேற்றுத் தங்களிடம் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தது.

''அனும்மா. எங்க வீட்ல வச்சு முரளிக்கு ரொம்ப இளகின மனசு. அதுவும் எங்க வீட்ல பொண் குழந்தைங்க இல்லேங்கறது அவனுக்கு ரொம்ப ஏக்கம். நம்ம வீட்ல மட்டும் ஒரு பொண்ணு இருந்திருந்தா பாசமலர் சிவாஜி மாதிரி வளர்த்திருக்கலாம்பான். பெண்கள் கஷ்டப் படறதைப் பார்த்தாலே உதவி செய்வான். ''ஏன்னா பெண்கள் மட்டும் இப்படி கஷ்டப் படணும்னு தலையெழுத்தா அப்படின்னு உருகிப் போவான். அவனைப் புரிஞ்சுக்கம்மா. சந்தேகப்படாதே.'' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''இந்தப் பிரச்சினை தெரிஞ்சப்ப நான் கேட்டேன். ஏன்டா அனுவுக்குத் தெரிஞ்சுதானே இந்த ஹெல்ப்பெல்லாம் பண்றேன்னு கேட்டேன். நான் சொல்லத் தயார்ன்னே. ஆனா அவ சரியான



கோணத்துல புரிஞ்சுக்க மாட்டான்னே. ரொம்ப வருத்தப் படுவா'' என்றான்.

''சரிங்கத்தான். நீங்க சொன்னபடி நடந்துக்கறேன்'' என்றாள்.

''அதை அவன்கிட்டே சொல்லும்மா. ஐசுவர்யா ராயைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் ரசிக்கலாம். அதுக்காக அனு மாதிரி வருமான்னு பெருமையாத்தான் சொல்வான்ம்மா. சின்னதா ஏதாவது சொன்னாக் கூட துடிச்சுப் போயிடுவாங்கறான்.'' என்றான்.

அனுவுக்குப் புரிந்தது. லேசாக தலையை ஆட்டிக் கொண்டாள்.

''இனிமே கேர்ஃபுல்லா இருந்துக்கறேன்'' என்றாள்.

''ஆமம்மா. எத்தனையோ பேருக்கு உதவி செய்றான். அவங்கள்ளாம்.... அப்பப்ப... ரயில்ல வந்து போற பயணிங்க மாதிரி. அவங்கவங்க அந்தந்த ஸ்டேஷன்ல இறங்கிடுவாங்க. எப்பவும் வாழ்க்கை உன்னோடதான்'' என்றான் சசிதரன்.

''புரிஞ்சதுங்க. பெரியத்தான்'' என்றாள்.

இப்போது அது நினைவுக்கு வர ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

தன் வாழ்க்கையில் வந்த எல்லாருக்கும் நல்லதுதான் செய்திருக்கிறான் தன் கணவன். தான்தான் அவனைப் புரிந்து கொள்ளவில்லை.

உள்ளுக்குள் உவகை பொங்கியதாய் உணர்ந்தாள்.

''இனிமேல், தான் அவனைப் புரிந்து கொண்டோம் என்று எப்படிச் செயலில் காட்டுவது என்று யோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் அவள் கணவனும் சசிதரனைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

''சசின்னா! கலக்கிட்டீங்க. எனக்குத் தெரியாமலே மாலை வீட்டைக் கூப்பிட்டு... கிறிஸ்டினாவைக் கூப்பிட்டு... வெளுத்துக் கட்டிட்டீங்க.'' என்றான்.

''ஆமடா. ரெண்டு பேரும் அனாவசியமாக் குழப்பிக்கறீங்கன்னு தோணிச்சு. அதை சரி செய்யறதுக்கு முயற்சி செஞ்சேன்'' என்றான்.

''தாங்க்ஸ்'' என்றான்.

அலுவலகத்தில் அனுமதி கேட்டுக் கொண்டு புறப்பட்டான்.

எதிர்பார்த்தாற் போலவே அனு வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள்.

''அனு!'' என்று உற்சாகமாகச் சிரித்துக் கொண்டே இறங்கிப் போனான்.

எதிர்பார்ப்புக்களுடன் தான்! ஆனால் அனு என்னமோ இன்றும் வேறு விதமாகத்தான் இருந்தாள்.

## 21

நெருக்கமாகக் கட்டிய மல்லிகைச் சரத்தில் கொஞ்சத்தை எடுத்து தலையில் சூட்டிக் கொண்டு மீதியை பத்திரப்படுத்தினாள்.

''ஆஹா! என்ன மல்லிகைப் பூ வாசனை ஆளைத் தூக்குது'' என்றபடி உள்ளே வந்தான் முரளீதரன்.

''ஃப்ரெஷ்ஷாக் கிடைச்சது. வாங்கிக் கட்டினேன்'' என்றாள்.



''அனு! எங்கே குமரன் பய வர்லையா.'' என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

''பாருங்க. வரவே மாட்டேங்கறான். சசி அத்தான் வேற இங்கயே இருக்கட்டும்கறார். அனும்மா. நீயும் பத்து நாளா ஒரு கூட்டத்தையே சமாளிச்சிருக்கே. ரெண்டு, மூணு நாளைக்காவது ஃப்ரீயா இருங்கம்மா'' என்று சிரித்தாள்.

''ஓஹ்ஹோ'' என்று விசிலடித்துக் கொண்டே படுக்கையறைக்குள் நுழைந்து லுங்கி பனியனுக்கு மாறி வந்தான். அவளும் கணவனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே கணவனுக்கு டிபன் எடுத்து வைத்தாள்.

''அது சரி. இன்னைக்கு ஏன் லேட்டா வந்தீங்க'' என்றாள் அனுராதா.

''ஆமா! இங்க சீக்கிரம் வந்து என்னத்தை பண்றது. அதான் லேட்டா வந்தேன்.'' என்று நூல் விட்டுப் பார்த்தான்.

அவள் கனகாரியமாக ஏதோ வேலையிருப்பவள் போல் உள்ளே போய் விட்டாள்.

அவனும் ஒருவிதமான சிரிப்புடன் பின் தொடர்ந்தான். பின்னாலிருந்து கட்டிக் கொண்டான்.

அவள் தடுக்கவில்லை. இடம் கொடுத்தாள். பிறகு மெல்லிய குரலில் ''ஏங்க. சாப்பிடலையா?'' என்றாள்.

''தேவியார் அருள் வாக்குக் குடுத்தா சாப்பிடறேன்.''

''அருள் வாக்கா?'' அவள் விழித்தாள்.

''ஆமா. இன்னைக்கு கேக்கறதெல்லாம் கிடைச்சா சாப்பிடறேன்னு ஒரு உறுதி மொழி குடுத்தா சாப்பிடறேன்'' என்றான்.

அவள் முகம் சிவக்க ''சரி. சாப்பிடுங்க'' என்றாள்.

சாப்பிட அமர்ந்தான். உற்சாகமாகவும், கலகலப்பாயும் பேசிக் கொண்டு கணவன் சாப்பிட அருகில் அமர்ந்து பரிமாறினாள்.

பிறகு லாலல்லா பாடிக் கொண்டு படுக்கை விரிப்பை உதறிப் போட்டபடி நடனமாடுகிற கணவனைப் பார்த்து அவளுக்கு ஒரே நாணச் சிரிப்பு.

சிரித்தபடி தன்னை நெருங்கிய கணவனின் கைப்பிடிக்குள் பாந்தமாக அடங்கிக் கொண்டாள்.

❖ ❖ ❖

''அதுசரி. மாலாவைப் பத்தியெல்லாம் எங்கிட்டே சொல்லியிருக்கலாம் இல்லே...'' என்றாள்.

''எங்க சொல்றது? நீ எப்பப் பாரு நான் என்னமோ உன்னைக் கழட்டி விட்டுட்டுப் போற ஆள் மாதிரியே நினைக்கறே! மனகக்குள்ள வச்சு வேதனைப் பட்டுக்கறே. அப்பாடா. போட்ட ஒரு சண்டைக்கே பெட்டியைத் தூக்கிகிட்டுப் புறப்பட்டுட்டே.'' என்றபடி திரும்பிப் பார்த்தான்.

இப்போது பெட்டியைக் காணவில்லை.

''எங்கே பெட்டியைக் காணோம்.?'' என்றான்.

அவள் குறும்பாகச் சிரித்தாள். ''பீரோவுக்குள்ளே இருக்கு.'' என்றாள். அவன் சிரித்தான்.

''அப்ப சரி. இனிப் பாதுகாப்பாய் பேசலாம்'' என்றான்.

மறுபடியும் அணைத்துக் கொண்டான்.

அவள் ''இப்பதானே கவனிச்சேன்.'' என்று முணுமுணுத்தாள்.

''ஐயையோ! பால் பாத்திரத்தை மூடி வைக்கலை. இருங்க வர்றேன்'' என்று எழுந்திருக்க அவன்,



''சரி. அப்படியே ஒரு காபி போட்டுட்டு வா'' என்றான்.

''ஐயோ. காபி குடிச்சா தூக்கம் போயிருமே!'' என்றாள்.

''இன்னைக்கு சீக்கிரம் தூங்கறதாயில்லை. உங்கிட்ட நிறையப் பேசணும்.''

சற்றுக் கழித்து மனைவியிடம் நெருங்கி அமர்ந்தபடியே சொன்னான் ''அனு! ஒன்னு சொல்லட்டா. இன்னைக்குத்தான் நீ என்னை முழுமையா ஹஸ்பெண்டா ஏத்துகிட்ட மாதிரி ஒரு ஃபீலிங்'' என்றான். தன் பரிசுகளை வாரியிறைத்தான்.

அவளும் பதில் கொடுத்தாள்.

பிறகு சொன்னாள். ''உங்களுக்குத் தெரியாதுங்க. என் மனகக்குள்ள எப்பவும் ஒரு பயம். பர்ஸனாலிட்டி. ஸ்டேட்டஸ் எல்லாத்திலயும் நீங்க என்னை விட உயரம். இந்த பொக்கிஷம் நமக்குக் கிடைக்க வேண்டிய ஒன்னே இல்லைன்னு ஒரு பயம்'' என்றாள்.

அவன் வாஞ்சையாய் சிரித்தான். கொஞ்சி மகிழ்ந்தான்.

''அசடு. அசடு. எத்தனை தடவை சொல்றது. உன்னைப் பார்த்து எனக்குப் பிடிச்சுப் போய்த்தான் கல்யாணம் பண்ணினேன்னு. நீயே உன்னை ஏன் தாழ்த்திக்கறே? பாரு. நீ கொலு வச்சிருந்த விதம் பார்த்து எத்தனை பாராட்டு. உன்னோட தஞ்சாவூர் பெயின்டிங் எல்லாம் சூப்பரா இருக்கு தெரியுமா? உன்கிட்டே அற்புதமான கிரியேட்டிவிட்டி இருக்கு. தெரியுமா? எல்லார்கிட்டயும் ஏதோ ஒரு திறமை இருக்கும் அதைச் சரியா கண்டு பிடிச்சு "டாப்" செய்தா பெருமை தானா வருது.'' பேச்சு பேச்சாக இருக்க அவள் கழுத்தில் அவன் இதழ்கள் உரசிக் கொண்டன.

''பயங்கரமான காரியவாதி.'' என்று அவள் செல்லமாக அவன் காதைப் பிடித்துத் திருகினாள்.

அவன் வாகாகக் காதைக் கொடுத்துக் கொண்டு சிரித்தான்.

"அனு! மாலா வாழ்க்கையை இழந்து நின்னாப்ல. என் டிய ரஸ்ட் ஃபிரண்டுக்கு குடுத்த வாக்குறுதி வேற. அந்தக் குழந்தைக்கு அப்பா ஏக்கம். அதனால ஹெல்ப் பண்ண வேண்டியதாப் போச்சு."

"ஆமா... செய்யணும். செஞ்சது நல்லதுதான். ஆனா ஒரு வீட்டு வாசல்ல வெறும் பனியனோட சொந்த வீட்ல நிக்கற மாதிரி நின்னதா வீராசாமியண்ணன் வந்து சொன்னப்ப நான் என்னன்னு நினைக்கறது?"

அப்போதுதான் குழந்தை தன் மீது தண்ணீர் ஊற்றி விளையாடியதை விரிவாகச் சொன்னான். பிறகு சிரித்தான்.

"போடி. மக்கு. வீராசாமி அண்ணன் இப்படித்தான் எதையாவது பத்த வச்சு விட்டுடுவாரு. கேட்டா சும்மா பொறாமை கிளப்பி விடறதுக்குத்தான் தம்பி. அப்பத்தான் அதுக்கப்புறம் சுவாரசியமா இருக்கும்பாரு." என்று குலுங்கிச் சிரித்தான்.

"ஆமா. உங்களை சுத்தியிருக்கிற ஆளுங்க எல்லாம் உங்களை மாதிரித்தானே இருப்பாங்க" என்றாள் கிண்டலாக.

"பாரு என்னைச் சுத்தி இருந்தா என்ன? நான் உன்னைச் சுத்தித்தான் வரேன்னு உனக்குப் புரிஞ்சாச் சரி. ஹேய்! நான் ஒரு விஷயம் சொல்றேன் புரிஞ்சுக்க. இப்ப ஐஸ்வர்யா ராய் மாதிரி ரொம்ப அழகான பொண்ணுங்களை ரசிக்கிறோம். அதுக்காக எல்லாரையும் தப்பான கோணத்துல பாக்கறோம்னு அர்த்தமா? அந்த மாதிரி ரசனையெல்லாம் உன்னோட பெயிண்டிங்கை ரசிக்கிற மாதிரி. ஆனா நம்ம வாழ்க்கைன்னு வரும்போது நமக்கு மனசுக்கு பிடிச்சவங்களைத்தானே நேசிப்போம்? அதுக்குட்டி அதைப் புரிஞ்சுக்கணும்" என்றான்.



"புரிஞ்சுக்கிட்டேன்" என்றாள் சிம்பிளாக.

"அப்புறம். இந்தக் கிறிஸ்டினா... மாத்யூஸாம் பாரு. எல்லா விஷயத்துலயும் ஒத்துப் போவாங்க. ஆனா. உங்க வீட்டைப் பத்தித் தெரியாதா? எங்க வீட்டைப் பத்தித் தெரியாதான்னு ஆரம்பிச்சா அவ்வளவுதான். ஒரு சண்டைக்காக டைவர்ஸ் நோட்டீஸ் வரைக்கும் போறாங்க. ஆனா ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சு இருக்க முடியாம திரும்பா இணைச்சு போறாங்க. ஐயோ... ஐயோ..." என்று சிரித்தான்.

அவள் புன்னகைத்தாள்.

"அப்புறம் தரணிக்கு பொண்ணு பார்த்தது." என்று ஆரம்பிக்க அவள் குறுக்கிட்டாள்.

"ஆமா வீராசாமியண்ணன் போன் செஞ்சாங்க. அனும்மா. இங்க ஒரு வீட்ல தம்பியோட பைக் ரெண்டு மூணு நாள் சாயங்கால நேரத்துல நிக்குதுன்னு. அப்புறம் நானே புறப்பட்டு வந்தேன். அன்னைக்கு நீங்க அந்த சீதா மேடத்தோட பேசிகிட்டு வெளியே வந்தீங்க. அவங்க வேற அழகா இருந்தாங்க...." என்று இழுத்து நிறுத்த அவன் லேசான கோபத்தை தன் செயலிலேயே காட்டினான்.

"இந்த மாதிரிப் பேசினே. கொன்னே போடுவேன்" என்றான்.

அவள் சிரித்தபடி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"இனிமே அப்படியெல்லாம் பேச மாட்டேன். ஆனாலும் சம்பந்தம் பேசன்னாலும் தினம் பைக்கை போட்டுட்டு போயிருக்கணுமா. என்ன?" என்றாள்.

இல்லையே. நான் ரெண்டு தரம்தானே போனேன்." என்று யோசித்தவன் புன்னகைத்தான்.

"ஓ! இப்பப் புரிஞ்சுது. ரெண்டு நாள் அண்ணன் போனாரு. அடிக்கடி சின்னவரு போனாரு. ஆனா அப்பா கண்ணுல பட வேண்டாம்னு நினைச்சவரு தன்னோட பைக்கை எடுக்காம என்னோட பைக்கை எடுத்துகிட்டு போனாரு." என்றான்.

"அது சரி. அதென்ன அண்ணனை மாதிரியே கல்யாணத்துக்கு முன்னாடியே வரப் போற பொண்ணுகிட்டே பேசறதுல ரொம்ப இன்டரஸ்ட்?" என்றாள்.

"அனு. அதுல ஒரு த்ரில் இருக்கு. தெரியுமா? எனக்குத்தான் அந்த ஆசை நிறைவேறலை. அவனுக்காவது நடக்குதே!" என்றான்.

அவள் சிரித்தபடி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். "அப்ப எனக்குப் பயம். சரி. இனிமே எந்தப் பொண்ணுக்கு வேண்ணாலும் ஹெல்ப் பண்ணலாம். ஆனா அதுல என்னையும் சேத்துக்கணும். ரெண்டு பேருமா செய்யலாம். என்ன? நீங்க இந்த மாலாவுக்கு. அப்பறம் கிறிஸ்டினா குடும்பத்துக்கு செஞ்சதெல்லாம் நல்ல காரியம். இனி சீதாவுக்குக் கல்யாணம் பண்றேங்கறீங்க. அதுவும் நல்ல காரியம்தான். சீதா பாவம் இல்லே." என்றாள்.

"ஆமா. இனி தீபிகா நம்ம வீட்டுக்கு வந்ததுக்கப்புறம்... அந்தப் பொண்ணுக்கு தனிமைன்னா என்னன்னு தெரியும். அந்த சமயத்துல பேசி ஒரு அலையன்ஸ் பாத்து முடிச்சர்லாம் என்ன!" என்றான்.

அவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். மறுபடியும் தலை குனிந்து கொண்டாள். அவன் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

"நானும் உங்ககிட்டே ஒரு விஷயம் மறைச்சுட்டேன்" என்றாள்.



"தெரியும்" என்றான்.

"தெரியுமா?!"

"ஆமா! கரஸ்பான்டென்ஸ்ல பி.பி.ஏ. சேர்ந்திருக்கே..." என்றான்.

"எப்படித் தெரியும்?" என்றாள் வியப்புடன்.

"இந்தக் கொலுவுக்காக திங்ஸ் எல்லாம் அந்த ரும்ல அடுக்கினமே... அப்ப ஷெல்ஃபில புக் லெட்ஸ் பார்த்தேன்" என்றான்.

"ஓ!" என்றாள்.

"உனக்குப் படிப்பு குறைவுங்கறதுனாலதான் நான் உன்னை மதிக்கலேன்னு ஒரு எண்ணம். சரி... சரி காரணம் எதுவா இருந்தா என்ன. படிக்கறது நல்ல விஷயம். படி" என்றான்.

அவள் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய விதத்தில் அவன் திக்கு முக்காடிப் போனான்.

"அப்பாடா! புத்தி வந்துருச்சு" என்று சிரித்தவன் மறுபடியும் தொடர்ந்தான்.

"அனு. பெண்களுக்குத் தோற்றத்துனால ஒரு அழகு வருது. ஆனா அது எடுப்பான மூக்கினால மட்டுமில்ல. மாடலிங் செய்யறவங்களைப் பாரு. எல்லாருக்கும் ஒண்ணும் எடுப்பான மூக்கு இருக்காது. ஆனா அப்படி ஒரு அழகு தெரியும். அதனால அந்த மாதிரி எண்ணத்தை விட்ரு. அவ்வளவு ஏன்? சில பேரு பாக்கறதுக்கு ரொம்ப அழகுன்னெல்லாம் சொல்ல முடியாது. ஆனா தன்னம்பிக்கையோட நடமாடுவாங்க. நடையிலே ஒரு கம்பீரம் பேச்சில ஒரு தெளிவு. அதுல ஸ்கோர் பண்ணிட்டு போயிடுவாங்க. நீ என் மனைவி. என்னில் சரிபாதி. உன்னை நான்

விருப்பப் பட்டுக் கல்யாணம் பண்ணியிருக்கேன். நானும் ஒரு நல்ல குடும்பத்துல பொறந்துருக்கேன். நல்ல வேலையிலிருக்கேன். அப்படியெல்லாம் லேடீஸ் பின்னால அலையற ஆளில்லை... என்று அவன் முடிக்கு முன்பாகவே அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

''ப்ளீஸ்! நான் புரிஞ்சுகிட்டேன்.'' என்றாள் ஆழ்ந்த குரலில்.

''அதே மாதிரி இன்னொரு இடத்துக்கு வேற நான் வாக்குக் குடுத்திருக்கேன்.''

''யாருக்கு?'' என்பது போல் பார்த்தாள்.

''நம்ம குமரன் பயலுக்குத்தான். தம்பியோ, தங்கச்சியோ வேணுமாம். அவரே வேன்னா வளத்துக்கறாராம்'' எனவும் இருவரும் மகிழ்ச்சியாகச் சிரித்தார்கள்.

அவள் சிரிப்பை கண்கொட்டாமல் பார்த்த அவன் அதற்கான பரிசையும் வழங்கினான். அவள் முன்னைப் போல் தடுமாற்றமில்லாமல் பதில் கொடுத்தாள்.

''ஹேய்! உன்னோட கலகல சிரிப்பே கொஞ்ச நாளா மிஸ்ஸிங் தெரியுமா?'' என்று சற்று நேரம் கொஞ்சினான்.

அவள் ''ஏங்க. அப்படி அடுத்து வாரிசு வரும் போது இந்தக் குமரன் பய ஏகப்பட்ட கேள்வி கேக்கப் போறான்.'' என்று சிரித்தாள்.

''பதில் சொல்லுவோம். அதை விட்டா நமக்கு என்ன வேலை. ஆனா நீ எப்பவும் இப்படித் தெளிவா இருக்கணும். சமீப காலமா நீ ரொம்ப வருத்திக்கறிபோன்னு ரொம்பக் கவலையாப் போச்சு.'' என்றான்.

................!



''அப்புறம் சசி அண்ணன் கிட்டே ரொம்ப வருத்தப்பட்டேன். அவருதான் கொலுவுக்கு போயி மாலா கிறிஸ்டினா எல்லாத்தையும் இன்வைட் பண்ணியிருக்காரு. எனக்கே தெரியாது'' என்றான்.

''ஓ! எனக்கும் ரொம்ப அட்வைஸ் பண்ணினார்'' என்றாள்.

''அதுமட்டுமில்லே! இது ரீ யூனியன் மாதிரியாம். அதுக்காக நமக்குத் தனிமை குடுக்கிறாராம். அதுக்காகத்தான் குமரன் பயலை ரெண்டு மூணு நாளா அங்க இருக்க வச்சுகிட்டிருக்காரு.'' என்று சிரித்தான். அவளும் அதை எதிரொலித்தாள்.

''அவரு இத்தனை முயற்சி எடுத்ததுக்குப் பலன் இருக்கணும் இல்லே.'' என்றான்.

''சரி. சரி. போதும். சும்மா இதுதான்... சாக்குன்னு அதையே திரும்பச் சொல்லாதீங்க!'' என்றாள் பொய்க் கோபம் போலே.

''அப்ப நீயும் இனிமே ஒரு விஷயம் பேசக் கூடாது.'' என்றான் கறாரான குரலில்.

''வராகசாமி கதை. அந்த மாதிரிக் கதையெல்லாம் இனிமே சொன்னயின்னா பல்லைப் பேத்துடுவேன்'' என்றான்.

''ஐயையோ. ஏற்கனவே சப்பை மூக்கு. பல்லும் போயிடுச்சுன்னா'' என்று அவள் முடிக்கு முன்னாகவே அவன் சிரிப்புடன் சீண்டினான். ''அப்பவும் உன்னைப் பிடிக்கும்.''

''அது மட்டுமில்லே அறுபதிலும் ஆசை வரும்.''

''அனு. நீ நினைக்கற மாதிரி நான் ஒண்ணும் மலருக்கு மலர் தாவற வண்ணத்துப் பூச்சியில்லே. அழகை ரசிப்பேன். ஆனா மனசு பூரா என் மனைவியை மட்டுமே சுமந்துகிட்டு அலையற ஆள் தெரியுமா?'' என்றான்.

''புரிஞ்சதுங்க'' என்றாள்.

"அனு. பையனை இங்க கூட்டிட்டு வந்தர்லாம். அவன் லொட லொடப்பு இல்லாம நல்லாவே இல்லை. அவன் இங்க இருந்தா என்ன? எதெதை எப்படி எப்படி நடத்திக்கனும்னு எனக்குத் தெரியாதா என்ன?"

அவள் கிளுகிளுத்துச் சிரித்தாள்.

அவன் கைகளில் வாகாய் அடங்கியபடியே யோசித்தாள்.

வண்ணத்துப் பூச்சிகள் எத்தனை விதங்களில். எத்தனை வண்ணங்களில். மனிதர்களும் இப்படித்தான்.

கணவனை நன்றாகப் புரிந்திருந்தால் இத்தனை நாள் பட்ட வேதனைக்கு அவசியமே இருந்திருக்காது. வேண்டாம். போனதை. நினைக்கவே வேண்டாம். இனிமேல் மகிழ்ச்சியாக இருப்போம். இப்போதும் வண்ணத்துப் பூச்சியையே உதாரணமாகக் கொள்ள லாம். ஆனால் சுறுசுறுப்பாக இருப்பதில், வாழ்க்கையை இயல்பாய் அனுபவிப்பதில், என்ற உறுதி எடுத்துக் கொண்டாள் அனு.

புன்னகை முகத்தில் உறைய கணவனின் இனிய காதல் அர வணைப்புக்கும். அன்புப் பேச்சுக்கும் தன்னை ஒப்புக் கொடுத்தாள்.

மனதில் மகிழ்வே பூத்து மலர்ந்திருந்தது.